

இரவும் நிலவும்
மலரட்டுமே...!
விஜி விக்னேஷ்
இரவும் நிலவும் மலரட்டுமே...! ★ விஜி விக்னேஷ் ★
இரவும் நிலவும்
மலரட்டுமே...!
விஜி விக்னேஷ்

# இரவும் நிலவும் மலரட்டுமே...!

## 1

அன்றைக்கு நடக்கவிருக்கின்ற திருமண நிச்சயத்திற்காக அலங்கரித்துக் கொண்டு, கண்ணாடி முன்பாக வந்து நின்றாள் சௌந்தரியவதி.

ஆள் உயரக் கண்ணாடி இல்லையென்றாலும், அதில் பாதியளவிலிருந்ததில் தெரிந்த அவளின் பிம்பமே, மனதில் மகிழ்ச்சியை உண்டாக்கியது எனலாம்.

பியூட்டி பார்லரின் உதவியின்றி, அவளுக்கான அலங்காரத்தை அவளே செய்து கொள்வதுதான் வழமை.

அதுதான் விருப்பமும் கூட!

மிக லேசாக மை தீட்டப்பட்ட நீள் விழிகள். ஃபேஸ் கிரீமும், பவுடர் ஒற்றலிலுமே பளபளத்த கன்னங்கள். இயற்கையாகவே வெளிர் ரோஜா நிறத்தில் மிளிர்ந்த மெல்லிதழ்கள், வடிவான நேர் நாசி என்று, பார்ப்பதற்கு இதமான உணர்வை உண்டாக்குகிற அழகு, அவளு டையது.

தன்னுடைய அலங்காரம், திருப்தியளிப்பதாகவே இருந்தது சௌந்தரியவதிக்கும்.

அதனால்தானோ என்னவோ? ஆன்ட்டி, அங்கி ளுக்கு அவளைப் பார்த்ததும் பிடித்துப் போயிற்றோ?

தங்களின் ஒரே மகனையும் கூட கலந்து கொள்ளாமல், சௌந்தரி தான், தங்கள் வீட்டு மருமகள் என்று உறுதியளித்து விட்டுப் போனார்கள்.

தாத்தாவிற்கு இந்த சம்பந்தம் அமைவதில் மிகுந்த மகிழ்ச்சி என்பது, அவரின் முகமாற்றத்தைப் பார்த்தாலே தெரிந்தது.

ஓய்வு பெற்ற ஆசிரியரான அவரை, எதிர்பாராத விதமாகக் கடைத் தெருவில் சந்தித்த முன்னாள் மாணவர்தான் சுதர்சனம் அங்கிள்.

தன் மனைவி ராதையுடன் வீட்டிற்கு வந்தார் சுதர்சனம்.

அக்கம் பக்கத்திலிருக்கும் பிள்ளைகளுக்கு, முறையாக நாட்டியம் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந் தவளைப் பார்த்ததுமே பிடித்துப் போயிற்றாம்.



முறையாகப் பெண் கேட்டு, மகன் நந்தனையும் அழைத்து வந்தார்கள்.

நந்தனும் பார்வைக்குப் பளிச்சென்று இருக்க, தாத்தாவிற்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

ஆனால் அவனுக்கு, அதிகம் பேசுவதில் பழக்க மில்லையோ?!

பார்வையை அங்கே இங்கே அலைய விடாமல், நல்ல பிள்ளையாக அமர்ந்திருந்த நந்தனைப் பார்க்க, சற்று வேடிக்கையாகத்தான் இருந்தது அவளுக்கு.

தலையை லேசாகக் குனிந்தபடி அமர்ந்து, தன் கையிலிருக்கும் ரேகைகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருந்தான் அவன்.

அவனுடைய அமைதியைப் பார்த்துவிட்டு, "என்ன மாப்பிள்ளைத் தம்பி, சௌந்தரியுடன் தனியாக ஏதாவது பேச வேண்டுமா?" என்று தாத்தா கேட்க...

'இல்லையென்று' சற்று வேகமாகவே தலையாட்டி னான் அவன்.

"என்னடா... பெண்ணைப் பிடித்திருக்கிறது தானே?" என்று கேட்டார் சுதர்சனம்.

"எப்படிப் பிடிக்காமல் போகும்? இப்படிப்பட்ட பண்பான குணவதி கிடைக்க, கொடுத்தல்லவா வைத் திருக்க வேண்டும்" என்றாள் ராதை முந்திக்கொண்டு.

இவன் தனியாகப் பேச விருப்பம் தெரிவித்தா லாவது, என்னைப் பிடித்திருக்கிறதா, இல்லையா? என்று

கேட்டுவிடலாம் என நினைத்திருந்த சௌமிக்கு, அதற்கான வாய்ப்பு கிட்டாமல் போகவும், கொஞ்சம் 'சொத்'தென்றுதான் ஆகிப் போயிற்று.

அவனே வேண்டாமென்று மறுத்தபிறகு, அவள், எனக்குக் கொஞ்சம் பேசவும், கேட்கவும் வேண்டியிருக்கிறது என்று சொல்வதோ, சொன்னாலோ, அது அவ்வளவாக நன்றாக இருக்காதே என்று, சிறு எரிச்சல் கூட வந்தது அவளுக்கு.

பேத்தியின் எண்ணம் போலவே தாத்தாவிற்கும் தோன்றியதோ! ஏனெனில்...

நந்தனை நேராகப் பார்த்து, 'பெண்ணைப் பிடித்திருக்கிறதா மாப்பிள்ளை?' என்று உறுதிப்படுத்திக் கொள்ள தாத்தா மீண்டும் கேட்டார்.

ஒருகணம் தாயைக் கூர்ந்து நோக்கிவிட்டு, ஒரு வேக மூச்சுடன் சம்மதமென்று தலையசைத்தான் நந்தன்.

பூரிப்புடன், "சந்தோஷம் தம்பி!" என்றார் தாத்தா.

மறுவாரமே திருமணத்தை உறுதிப்படுத்தி, நிச்சயம் செய்து விடலாம் என்று பெரியவர்கள் முடிவு செய்தார்கள்.

முதல் தடவையாக நந்தனின் போட்டோவைக் காட்டி, "பையனைப் பிடித்திருக்கிறதா என்று பார்த்துச் சொல்லுடாம்மா. எம்.பி.ஏ. முடித்து விட்டு, பெரிய நிதி நிறுவனத்தில் பொறுப்பான பதவியிலிருக்கிறான். கை நிறைய சம்பாத்தியம். கெட்ட பழக்கம் ஏதுமில்லை.



பார்ப்பதற்கும் லட்சணமாக இருக்கிறான். அந்தக் குடும்பத்திற்கு நீ மருமகளானால், உன்னுடைய எதிர்காலம் பற்றிய கவலையின்றி, நானும் நிம்மதியாக இருப்பேன்" என்றார் அவளின் தாத்தா வாசவன்.

இன்றைக்குப் பெண்கள் பலரும் எதிர்பார்ப்பது போல, பிக்கல் பிடுங்கல் இல்லாத வசதியான குடும்பம் தான்.

அவர்களாகவே விரும்பி வந்து கேட்டதால், நன்றாகவும் பார்த்துக் கொள்வார்கள். மறுப்பதற்கான காரணம் ஏதுமில்லை என்பதால், பெரும்பாலான பெண்களைப் போலவே, தனக்கும் 'சம்மதம்' என்று தலையசைத்தாள்.

தாத்தாவின் புன்னகை மேலும் விரிவதைப் பார்த்தபோது, அவளுக்குமே உற்சாகம் தோன்றியது.

மேற்படி வேலைகள் அனைத்தும், மடமடவென்று நடந்தன.

ஒரே ஒரு முறை மட்டுமே, அவளின் செல்லிற்குத் தொடர்பு கொண்ட நந்தன், "வந்து... சௌந்தரியவதி, என்னை உங்களுக்கு உண்மையாகவே பிடித்திருக் கிறதா?" என்று மட்டும் கேட்டான்.

இவனிடமிருந்து திடீரென்று ஏன் இப்படியொரு கேள்வி? என்று தோன்றியது.

அவளுக்கு விருப்பமில்லாத எதையும், செய்யச் சொல்லும் பழக்கம் அவள் வீட்டில் இல்லையே!

'என்னடாம்மா, கண்ணும்மா...' என்பது தவிர, தாத்தா அவளின் பெயரைச் சொல்லி அழைப்பதே அபூர்வமாயிற்றே!

பேத்தியிடம் அவ்வளவு அன்பு கொண்டவர், அவளுக்கு விருப்பமில்லாத எதையும் செய்யச் சொல்லு வாரா என்ன?

கனவிலும் கூட நடக்காத ஒன்றாயிற்றே!

எனவே பெரும்பாலான பெண்களைப் போலவே தான் அவளும், "என் தாத்தா எனக்கு விருப்பமில்லாத எதையும் செய்யச் சொல்ல மாட்டார். உங்களின் விவரத்தைக் கூறி, போட்டோவைக் காட்டி, என்னுடைய சம்மதத்தை அறிந்த பிறகுதான், உங்கள் வீட்டிலே தெரிவித்தார். இந்தத் திருமணத்தில் எனக்கு பூரண சம்மதம்!" என்று தெரிவித்தாள் அவள்.

அவனைப் போலவே, அவளும் நேரிடையாகக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு இதுதான் வாய்ப்போ? என்று அவள் நினைத்த போது...

"எனக்கு வேறு அழைப்பு வந்துவிட்டது. பிறகு... பிறகு ஒரு சமயம் பேசலாம் சௌந்தரியவதி" என்று கூறி வைத்தான் அவன்.

தன்னை நினைத்து, அவளுக்கே சற்று விசித்திர மாகத்தான் இருந்தது!

வருங்காலக் கணவனிடம் பேசுகிறோம் என்ற படபடப்போ, பூரிப்போ என்று, ஏன் எதுவுமே தனக்குத் தோன்றவேயில்லை?!



என்னவோ, 'இதோ உன் கேள்விக்கான பதில்' என்பது மாதிரிதானே கூறுகிறோம் என்று நினைத்த போதும், மேற்கொண்டு அதுபற்றி யோசிக்க முடியாமல், வகுப்பிற்குப் பிள்ளைகள் வர ஆரம்பிக்கவும், லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டு, கால்களில் சலங்கையைக் கட்டினாள்.

ஆன்ட்டியும், அங்கிளும் இடையில் ஒருமுறை வந்து விட்டுப் போனார்கள்.

அதோ இதோவென்று, இன்றைக்கு நிச்சயதார்த்த நாளே வந்துவிட்டது.

அதிகமாக யாரையும் அழைக்காமல், அக்கம் பக்கத்துக் குடித்தனக்காரர்கள் ஒரு சிலரை மட்டுமே அழைத்திருந்தார் வாசவன்.

சின்னதாகத்தான் என்றாலும், இருமுறை 'அட்டாக்' வந்த பிறகு, சற்று ஓய்ந்தே தான் தெரிந்தார் தாத்தா.

''அதிகமாக யாரையும் அழைக்க வேண்டாம் தாத்தா. நம் பக்கம் ஏழெட்டுப் பேர், அவர்கள் பக்கமும் அப்படியே போதும். வீணாக அலைந்து உடலை வருத்திக் கொள்ளாதீர்கள். உணவிற்கு ஓட்டலில் ஆர்டர் கொடுத்து விடலாம். திருமணமும் கூட இதே மாதிரி இருந்தாலே போதும்'' என்று, தாத்தாவின் உடல் நிலையை மனதில் வைத்துக் கொண்டு கூறினாள் சின்னவள்.

''நிச்சயம் வேண்டுமானால் நீ சொன்ன மாதிரியே செய்து விடலாம் கண்ணும்மா. ஆனால், திருமணத்தைப்

பெரிதாகத்தான் செய்ய வேண்டும். இரு வீட்டிலுமே, இந்தத் தலைமுறையின் முதல் பெரிய விழா இதுதான். இதையெப்படிடா சாதாரணமாகச் செய்ய முடியும். எல்லா வேலையிலும் உதவி செய்யத்தான் சுதர்சனம் இருக்கிறாரே!

"நான் உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள் கிறேன். நீ கவலையை விட்டு விட்டு, சந்தோஷமாக சிரித்துக் கொண்டிருடா. அதுதானே எனக்கு உற்சாகத்தை அளிக்கும்" என்று புன்னகையோடு கூறி, பேத்தியின் தலையை வருடிவிட்டுப் போனார்.

பக்கத்து வீட்டிலிருப்பவர்கள் ஒவ்வொருவராக வந்து சேர, கேலியும் கிண்டலுமாக நேரம் சென்று கொண்டிருந்தது.

தனித்தனியே அடுக்கப்பட்டு, உணவு வகைகளும் வந்து சேர்ந்து விட, மாப்பிள்ளை வீட்டு ஆட்கள் வருகிற போது வரவேற்கவென்று, தாத்தா அடிக்கடி வீட்டிற்கும், வாசலுக்குமாக நடைபோட்டுக் கொண்டிருந்தார்.

முடியாத போது, இடையிடையே சாய்வு நாற்காலி யிலே ஓரிரு நிமிடங்கள் அமர்ந்திருந்துவிட்டு, மீண்டும் எழுந்து நடமாடினார்.

மாப்பிள்ளை வீட்டார் வருவதற்கு, முழுதாக இன்னும் இருபது நிமிடங்கள் இருக்கிறது. அவ்வளவு நேரமும் இப்படி நடந்து கொண்டே இருந்தால், நிச்சயம் மூட்டு வலி வந்து அவதிப்படுவார் என்பது உறுதி.



எனவே அவரிடம் சென்று, "நடந்து கொண்டே இருக்க வேண்டாம் தாத்தா. இன்னமும் நேரமிருக்கிறது. நீங்கள் உள் அறை கட்டிலில், காலை நீட்டிவிட்டுக் கொண்டு சற்று நேரம் அமர்ந்திருங்கள். அவர்களின் கார் தெருவிற்குள் நுழையும் போதே, உங்களிடம் வந்து சொல்லுகிறேன்" என்று கூறி அவரை உட்கார வைத்துவிட்டு, வெளியே விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளை அழைத்து, 'கார் வரும்போது தன்னிடம் வந்து சொல்லும்படி' கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

தட்டிலிருந்த மல்லிகைச் சரத்தையெடுத்து, அவளின் தலையில் வைத்துவிட்டு, "கண்படும் அளவிற்கு ரொம்ப அழகாயிருக்கிறாய் சௌந்தரியாம்மா" என்று, நெட்டி முறித்தாள் பக்கத்து வீட்டம்மா.

மென்மையாக முறுவலித்தபடி அந்தப் பாராட்டை ஏற்றவள், சமையலறைக்குச் சென்று, இனிப்போடு துளி உப்பும் சேர்த்து, முன்பே தயாரித்து வைத்திருந்த எலுமிச்சை ஜூஸை தம்ளர்களிலே ஊற்றிக் கொண்டு வந்து, எல்லோருக்கும் கொடுத்தாள்.

தாத்தாவிற்கு இந்தச் சுவை பிடிக்குமே என்று, அவரிடமும் ஒரு தம்ளரைக் கொடுத்து விட்டு, கதவை லேசாக மூடிக்கொண்டு வெளியே வந்தாள்.

அவர்களின் சார்பாக வந்திருந்த பெண்மணிகள், அவளின் நகை, உடையைப் பற்றி ஏதேதோ கேள்வி கேட்க, தனக்கு நினைவிருந்ததைச் சொல்லியவாறு அடிக்கடி வாயிலைப் பார்த்தாள் சௌந்தரியவதி.

இந்த ஆன்ட்டி வீட்டார் ஏன் இன்னும் வரவில்லை? நேரம் செல்லச் செல்ல தாத்தாவிற்கு முகமே ஒரு மாதிரியாகிறதே. அங்கிளுக்கு போன் செய்தால் சுவிட்ச் ஆஃப் என்றும், நந்தனுக்கு செய்தால் நாட் ரீச்சபிள் என்றும் வரவும், என்ன செய்வது என்று தெரியாமல் நெற்றியை நீவினாள் அவள்.

எங்கேயாவது டிராஃபிக் ஜாமில் மாட்டிக் கொண் டார்களோ என்று கூட நினைக்க முடியாதபடி இது அப்படியொன்றும் பெரும் நகரமல்லவே.

சென்னையை விட்டு வெகுவாகவே தள்ளி யிருக்கும் புறநகர்ப் பகுதிதானே. கிட்டத்தட்ட கிராமமே தான்.

தாத்தா இந்த ஊர்ப் பள்ளிக்குத் தலைமை யாசிரியராக வந்தபோது, பக்கா கிராமம்.

குடியிருந்த இந்த வீட்டையே, ரிட்டையர்டு ஆன பணத்தில் சொந்தமாக வாங்கினார்.

நகரத்திற்குப் போய் வர புது சைக்கிளும் கூட.

அவர்கள் இங்கே வந்து செட்டிலான இந்தப் பன்னிரண்டு வருடங்களில், கிராமம் என்று சொல்ல முடியாத அளவிற்கு, சற்று வளர்ச்சியடைந்திருந்தது... அவ்வளவே!

நந்தன் குடும்பத்தார் ஊரிலிருந்து கிளம்பி நேற்றே ஓட்டலுக்கு வந்து விடுவதாகவும், வேலை காரணமாக நந்தன் மட்டும் இரவு வந்து விடுவதாகவும் கூறினானாம்.



அவர்கள் தங்கியிருப்பதாகச் சொன்ன இடத்தில் இருந்து இங்கே வருவதற்கு, மிஞ்சி மிஞ்சி ஒரு மணி நேரம் தானே ஆகக் கூடும். பிறகு ஏன்...? செல்போன் சுவிட்ச் ஆஃப்பும், நாட் ரீச்சபிளும்...?

அவளின் தவிப்பைப் போக்குவது போல, “சௌமிக்கா! கார் வருது! ஆஹா...! ஊரீய்...ய சூப்பர் கார் அக்கா!” என்று, ஆர்ப்பரித்துக் கூச்சலிட்டார்கள் பிள்ளைகள்.

இதைக் கேட்டதும், சட்டென முகம் இயல்பிற்கு மாறமுடியாதபடி ஏதோ குழப்ப, அதை ஒதுக்கிவிட்டு, அழகாகத் தோன்றிய முறுவலுடன் வேகமாக எழுந்து வெளியே வந்தாள்.

“அடடா...! கல்யாணப் பெண்ணுக்கு எவ்வளவு அவசரம். மாப்பிள்ளை வீட்டாரை வரவேற்க இவ்வளவு விரைவாகப் போகிறாளே. அவர்கள் வந்தாயிற்று என்ற பிறகுதானே சிரிப்பே தோன்றியிருக்கிறது. இப்படியொரு பெண் கிடைக்க அவர்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்று, தங்களுக்குள் சிலாகித்துப் பேசிக் கொண்டார்கள் மற்ற பெண்கள்.

அவர்கள் வந்தாயிற்று என்பதைக் கேட்டால், தாத்தா நிம்மதியோடிருப்பார் என்பதால் வந்த சிரிப்பு இது... வேறு ஒன்றுமில்லை என உண்மையைச் சொன் னாலுமே இப்போது எடுபடாது என்பதால்,

சிறிதும் மாறாத முறுவலுடனே கூடத்தைக் கடந்து, தாத்தாவின் அறைக்குச் செல்ல முயன்றாள் சௌமி.

அப்போது, பெரும் வேகமுடன், பளபளவென்று மின்னியபடி, வழுக்கிக் கொண்டு வந்து நின்ற அந்தக் கறுப்பு நிறக் காரின் சக்கர அமைப்பே, சாதாரண கார்களைப் போல் இல்லாமல் இருக்க, சட்டென்று ஏதோ நெருட, நடையை நிறுத்திவிட்டு வெளியே பார்வையைத் திருப்பினாள் அவள்.

பக்கத்து வீட்டுப் பிள்ளைகள் கூறியது போல, பெரீய்...ய காரேதான்!

நந்தன் வீட்டு சின்ன 'ஸ்விப்ட்'டையே, பெரியது என்கிறார்களே என்று, சற்று முன்பு குழம்பியது நினைவு வந்தது.

இது யாருடைய காராக இருக்கும்? அவள் வீட்டின் முன்பாக அல்லவா வந்து நின்றிருக்கிறது. ஒருவேளை அவர்கள் வீட்டிற்கே தான் வந்திருக்கிறதா? இல்லை... அருகில் எங்கேயாவது...!

அவளின் எண்ணப் போக்கை நிறுத்தும் வல்லமை பெற்றதாக இருந்தது, காரின் கதவைத் திறந்து வெளியே இறங்கி நின்ற, அந்த நீளமான கால்கள்!

கார் டயரின் நடுவிலிருந்த, நட்சத்திர வடிவ சாம்பல் நிற மெட்டலில் இருந்து, அவளின் பார்வையை உயர்த்த வைத்தது அந்தக் கால்கள் இரண்டும்!

நீளமான காரில் வர வேண்டும் என்றால், இவ்வளவு உயரமாக இருக்க வேண்டுமா என்ன?!



ஒரு சில எட்டிலேயே கூடத்தை வந்தடைந்த அந்த நெடியவன், அவளின் முகத்தில் பார்வையைப் பதித்து, "டான்ஸ் டீச்சர் சௌந்தரியவதி நீங்கள் தானே?" என்று வினவினான்.

அவளைத் தேடியா வந்திருக்கிறான்? எதற்காக? என்று கேள்வியெழுந்த போதும், அவள்தான் என்று உறுதியாகத் தெரிந்து கொண்டே கேட்கிறானோ என்றும் தோன்றியது.

'ஆமாம்' என்பது போல தலையசைத்துவிட்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

"நான் தயாபரன்" என்றவன், "உங்கள் வீட்டுப் பெரியவரிடம் முக்கியமாக ஒரு விஷயம் பேச வேண்டும். அவரிடம் அழைத்துப் போகிறீர்களா?" என்றபடி, சுற்றியும் பார்வையை ஓட்டினான்.

"என்ன விஷயமென்று என்னிடமே சொல்லுங்கள் மிஸ்டர் தயாபரன். தாத்தா ஓய்வாக அமர்ந்திருக்கிறார். அதுவுமில்லாமல்... இப்போது எனக்கு நிச்..., இங்கே சுபநிகழ்ச்சி ஒன்று நடக்கவிருக்கிறது.

"அதனால், நீங்கள் பிறகு ஒரு சமயம், நாளைக்கு வாருங்களேன்!" என்றாள், குரலை முடிந்த வரை நிதானமாகக் காட்டி.

உள்ளூர அவளுக்கு மகா எரிச்சல் ஒன்று தோன்றியது!

அந்த எரிச்சல் அவளை நினைத்தே தான்!

'தனக்குத் திருமண நிச்சயம் நடக்கவிருக்கிறது. பிறகு வாருங்கள்' எனப் பட்டென்று கூறமாட்டாது, இந்த நாக்கு ஏன் இப்படித் தடுமாறித் தொலைக்கிறது?

எதிரே நிற்கும் யாரோ ஒரு தயாபரனிடம், இந்த விஷயத்தைச் சொல்ல இயலாமல் கன்னங்கள் கதகதப்பாகி, உள்ளூர இப்படித் தடுமாற வேண்டுமா என்ன?

"நான் நாளைக்கு வர வேண்டிய தேவை இருக்காது மிஸ். சௌந்தரியவதி. ஏனென்றால், இன்று உங்களின் திருமண நிச்சயதார்த்த விழா நடக்கப் போவதில்லை. அதைத் தெரிவித்து விட்டுப் போகத்தான் வந்திருக்கிறேன்" என்று, பிசிர் தட்டாத குரலில், முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல் கூறினான் அந்த தயாபரன்.

"ஏ... என்ன சொல்கிறீர்கள்?" என்று அதிர்ந்து போனாள் அவள்!

அதிர்ந்து போனவளுக்கு, மேற்கொண்டு பேச இயலாமல் சில கணங்கள் ஸ்தம்பித்து விட, வேகமாகத் தாத்தாவின் அறைப்பக்கம் பார்த்து விட்டு, "ஏன்... ஏன் நடக்காது?" என்று திணறலுடனே கேட்டாள்.

சற்றே தொலைவில், சுற்றிலும் நின்றிருந்த யாரைப் பற்றியும் பெரிதாக எண்ணாமல், 'ஏன்?' என்று கேட்டவளைப் பார்க்க, அவனுக்கு விசித்திரமாகத்தான் இருந்தது.



அவளை நேராகப் பார்த்து ஆழ மூச்சிழுத்தவன், "ஏனென்றால், இன்று காலையில், நந்தனுக்கும் என் தங்கை தாரிகாவிற்கும், திருமணம் நடந்து முடிந்து விட்டது" என்று தெரிவித்தான் வந்தவன்.

## 2

**மி**தமிஞ்சிய திகைப்பில் கண்கள் அகல விரிய, "அய்யோ தாத்தா!" என்று, நடுக்கமுடன் அதிர்ந்து போய் கூறினாள் அவள்.

கடவுளே! கடவுளே! இதையெப்படி தாத்தாவிடம் சொல்லுவாள் அவள்?

இவன் கூறியது உண்மையேதான் என்று தெரிந்த போதும், ஒரு சின்ன நப்பாசையுடன் வேகமாக அவன் முகத்தைக் கூர்ந்தவள், உள்ளூர முன்னை விட அதிகமாக அதிர்ந்தாள் என்றால், அது மிகையில்லை!

ஏனெனில், இப்படியொரு இடியை இறக்கிய நினைவு சற்றும் இல்லாதவனாக, முகத்தில் அப்படியொரு திருப்தியுடன் நின்றிருந்தான் அவன்.

மிக மிக ஆவலோடு எதிர்பார்த்த வெற்றி, கைக்கு எட்டும்போது உண்டாகும் திருப்தி அது!

காண்பது உண்மைதானா என்று இமைகளை அழுந்த மூடித் திறந்த போது, "இந்த வேளையில், இப்படியொரு செய்தியைத் தெரிவித்ததற்காக எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் வேறு

வழியில்லை. நந்தன் - தாரிகாவின் காதல், இரு வீட்டுப் பெரியவர்களுக்கும் பிடிக்கவில்லை. பணக்கார வீட்டுப் பெண் வேண்டாம் என்று நந்தனின் பெற்றோரும், மத்திய குடும்பத்து மாப்பிள்ளை சரிப்படாது என்று என் வீட்டிலும், கடுமையான எதிர்ப்பு.

"எனக்கு, என் தங்கையின் மகிழ்ச்சியான வாழ்வுதான் முக்கியம். அதனால்தான் அவர்களின் இந்தத் திடீர் திருமணம். இரு தரப்புப் பெற்றோரிடமும் தெரிவித்து விட்டு, நந்தன் கேட்டுக் கொண்டதின் பேரில், உங்களிடமும் விஷயத்தைத் தெரிவிக்கத்தான் வந்தேன்" என்று இடைவெளியின்றி கூறி முடித்தான் அவன்.

அந்தத் தர்மசங்கடமான வேளையில், அங்கே நிற்பது சரியல்ல என்பது போல, கூடியிருந்தோர் வெளியே செல்லலானார்கள்.

அவன் மெதுவாகவே கூறியதால், எல்லாமுமே மற்றவர்களின் காதில் விழவில்லையென்றாலும், நிச்சயம் நின்று போயிற்று என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்து விடவே, எல்லோரும் கிளம்பினார்கள்.

அதன் பிறகு, அங்கே நிசப்தம் மட்டுமே நிலவியது.

இந்தக் கார்க்காரன் வருவதற்கு முன்பு வரை, இங்கே எவ்வளவு கலகலப்பாக இருந்தது!

நினைத்த மாத்திரத்திலேயே ஆத்திரம் தோன்றியது.

"அவர்களின் காதலை, முன்பே எங்களிடம் தெரிவித்து இருக்கலாமே. இப்படி, இதுவரை இழுத்து



வந்து விட்டிருக்க வேண்டாம். இப்போது, வீட்டு மாப்பிள்ளைக்காகப் பேச வந்திருக்கும் உங்களுக்குக் கூடவா, இது பெரும் தப்பு என்பது புரியாது போயிற்று?" என, சுரீரென்று கேட்டாள் சௌந்தரியவதி.

"தப்பு, சரி என்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாத சூழ்நிலை எங்களுக்கு. 'உனக்கு வந்திருப்பது காதலும் அல்ல, மண்ணாங்கட்டியும் அல்ல. வெறும் அழகு மயக்கம். நாலே நாளில், இருக்கிற இடம் தெரியாமல் போய்விடக் கூடிய ஒன்று. அதையெல்லாம் பெரிதாக நினைத்துக் கொண்டிராமல், நாங்கள் பார்த்திருக்கும் பெண்ணை மணந்து கொள். உன் வாழ்க்கை நன்றாக இருக்கும். அதை விடுத்து, பெண் வீட்டாரிடம் எதையாவது உளறிக் கொட்டினாய் என்றால், பிறகு என்னை உயிருடனே பார்க்க மாட்டாய். தெரிந்து கொள்!' என்று நந்தனை அவர் அம்மா மிரட்டுவதை, நானே போன் மூலம் கேட்ட பிறகு, வேறு என்ன செய்வது?

"அதனால்தான் எல்லாவற்றையுமே, கடைசி நிமிடம் வரை மறைத்து வைக்கும்படியாயிற்று!" என்று, தங்கள் தரப்பு நியாயத்தை - நியாயம் என்று தாங்கள் நினைத்ததை எடுத்துரைத்தான் தயாபரன்.

எவ்வளவு பெரிய ஏமாற்று வேலை இது? கண்களிலே கடும் சீற்றம் குடிகொள்ள, "எவ்வளவு சுயநலம். உங்களின் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதற்காக, தயவு தாட்சண்யமின்றி அடுத்தவர்களின்

பாதிப்பை அலட்சியம் செய்து, கழுத்தை அறுத்து விடுவீர்களா? சை! நீங்கள் எல்லாம் என்ன மாதிரி மனிதர்கள்?

"உங்களுக்கெல்லாம் 'தயாபரன்' என்று பெயர் வேறு! ஆத்திரத்தில் நான் வேறு ஏதாவது கூறிவிடும் முன்பாக, உடனே வெளியே போய்விடுங்கள்!" என்று, கையை நீட்டிக் கூறினாள் அவள்.

ஒரு பெருமூச்சை வெளியிட்டு, "இப்போதைய உங்களின் மனநிலை எனக்குப் புரிகிறது. ஆனால், ஆத்திரம் குறைந்த பிறகு யோசித்துப் பாருங்கள், என் தரப்பு நியாயமும் உங்களுக்குப் புரியுமென்று நினைக்கிறே..." என்று அவன் முடிப்பதற்குள், "உங்களை உடனே வெளியே போகச் சொன்னேன்" என்று வெடித்தாள் சௌந்தரியவதி.

அவனுடைய கண்கள் இடுங்கியது.

வெறுப்புடன் பார்த்து, முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

'அவன் தரப்பு நியாயமாம் நியாயம்! கேட்கிறவர்கள் எல்லோரும் 'ஆஹா!' என்று தான் ஏற்றுக் கொண்டு விடுவார்கள்' என்று கொதித்தது அவளுக்கு.

துடித்தாற் போலிருந்த அவளின் மெல்லிதழ்களைப் பார்த்தவனுக்கு, அவளின் மனதில் ஓடியதும் புலப்பட்டதோ?



"ஓ.கே. ஆல் ரைட்!" என்று தோள் குலுக்கியவன், மேற்கொண்டு எதுவும் பேச முயலாமல், வேகமாகத் திரும்பி இரண்டெட்டு வைத்தான்.

அவளின் மூச்சுக் காற்று அனலாக வெளிப்பட்டது.

அப்போது, "கண்ணும்மா" என்று முனகலாக தீனக் குரல் கேட்க, சட்டென குரல் வந்த திசைப் பக்கம் திரும்பியவள், "தாத்தா..." என்று கூவியபடியே ஓடினாள்.

முகத்தில் வியர்வை தோன்றியிருக்க, முற்றத்துத் தூணைப் பிடித்துக் கொண்டு, கண்களை மூடி மூடித் திறந்து கொண்டிருந்தார் வாசவன்.

வேதனையில் கசங்கியிருந்த அவரின் முகம், எல்லாவற்றையும் கேட்டு விட்டார் என்பதைத் தெளிவு படுத்தியது.

இந்த இடியைத் தாத்தா எப்படித் தாங்குவார் என்று மனம் கலங்கித் தவிக்க, தூணின் உதவியில்லையென்றால் சரிந்து விழுந்து விடுவது போல் நின்றிருந்தவரைத் தாங்கிப் பிடித்தாள் சௌந்தரியவதி.

திணறியபோதும், "கண்ணும்மா" என்றே கலங்கினார் வாசவன்.

அவரின் ஒரு கை, அவ்வப்போது நெஞ்சை நீவி விட, மற்றொரு கை, அவளை அழுந்தப் பற்றியிருந்தது.

மிக வலுவான பிடி!

அந்தப் பிடி எதையோ உணர்த்த, "தாத்தா! என்ன செய்கிறது. நெஞ்சு வலிக்கிறதா? சொல்லுங்கள்... சொல்லுங்கள்!" என்று பதைபதைத்தாள்.

"உன்னைத் தனியே விட்டுப் போகி..." என்றவரின் விழிகள் மேலே சொருகியது.

சின்னதாகத்தான் என்றாலும், முன்பே 'அட்டாக்' வந்ததின் பாதிப்பினால், இப்போது அவர் மிகவும் சிரமப்படுவது புரிய, வேகவேகமாக நெஞ்சை நீவி விட்டவள், 'ஆம்புலன்ஸ்'ஸிற்குப் போன் செய்யவென்று விரைவாகத் திரும்பியபோது, நடுக்கத்தில் கால்கள் தடுமாறியவளை, வேக எட்டுகளுடன் திரும்பி வந்து கொண்டிருந்த தயாபரன் ஆதரவாகப் பிடித்து நிறுத்தி னான்.

இவன் மீண்டும் எதற்கு வந்தான்? என கோபம் வந்த போதும், ஒருவர் கூட இல்லாத அந்த வீட்டில், அவனைக் கண்டபோது சற்று இதமாக, ஆறுதலாக இருப்பது போல் தோன்றியதை அலட்சியமாக ஒதுக்கியவள்...

அவனுடைய பிடியை உதறிவிட்டு, போன் செய்ய ஓட நினைத்த போது, அவள் நன்றாக நின்று விட்டாள் என உறுதிப்படுத்திக் கொண்டவனாக, அவளை விட்டு விலகிப் பெரியவரை நோக்கிச் சென்றான் அவன்.

அவரின் நெஞ்சுப் பகுதியை அழுத்தி விட்டவாறே, "என் காரிலேயே போகலாம் சௌந்தரி. ஆம்புலன்ஸ்



வருவதற்கு, குறைந்தது பதினைந்து நிமிடங்களாவது ஆகும்" என்றான் தயாபரன்.

கவுரவம் பார்க்கவோ, வீம்பு பிடிக்கவோ இது நேரமல்ல என்பது புரிந்தது. தாமதிக்கிற ஒவ்வொரு நிமிடமும் தாத்தாவின் உயிருக்கல்லவா ஆபத்து!

எனவே, மறுப்பேதும் கூறாமல், "சரி..." என்றவள், தாத்தாவைக் காரின் பின் இருக்கையில் படுக்க வைக்க அவனுக்கு உதவி செய்து விட்டு, மின்னல் வேகத்துடன் வீட்டிற்குள் சென்று கைப் பையை எடுத்தவள், வேகமாக வீட்டைப் பூட்டிக் கொண்டு ஓடி வந்து காரில் ஏறினாள்.

"அவசரத்தின் போது பயன்படுத்தவென்று, ஏதாவது மாத்திரை இருந்தால் அவருக்குக் கொடு" என்று கூறியபடியே, ஒரு கையை நீட்டி தண்ணீர் பாட்டிலை எடுத்து அவளிடம் கொடுத்தான் தயாபரன்.

அவ்வளவு வேகத்திலும், மாத்திரை டப்பாவை மறக்காமல் எடுத்து வந்திருந்தாள் அவள்.

மாத்திரையை விழுங்கிய போது, காரின் வேகத்தை வெகுவாகக் குறைத்தவன், பிறகு வேகமெடுத்து விரைந் தான்.

உரிய நேரத்தில், முழு மருத்துவ உதவியும் கிடைக்கச் செய்தார்கள்.

இருந்தாலுமே, இது 'சிவியர் அட்டாக்' என்று கூறிய மருத்துவர்கள், ஒரு வாரம் மருத்துவர் கண்காணிப்பிலேயே இருக்க வேண்டும் என்றார்கள்.

அவர்களின் ஒரு வருடத்து சம்பாத்தியம், அந்த ஒரே வாரத்தில் கற்பூரமாகக் கரைந்து போயிற்று.

அந்த மருத்துவ மனையில், கூடக் கொஞ்சம் சேர்த்தே செலவானாலும், ட்ரீட்மெண்ட் நன்றாக இருக்கும்.

மேலும், எதையும் பூசி மெழுகாமல் உண்மையை உடைத்துக் கூறிவிடுவார்கள்.

அவளிடம் தனியே பேசிய மருத்துவர், "தாங்க முடியாத அளவிற்கு அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறதம்மா. கண் விழிப்பது மறுஜென்மம் போலத்தான். அவரால் தாங்க முடியாத விஷயம் எதையும் தெரிவிக்காதீர்கள். முடிந்த வரை முழு ஆரோக்கியத்தையும் கொண்டு வரவே முயற்சிக்கிறோம். இதன் பிறகாவது அவரின் மனதிலே இறுக்கமின்றி, மகிழ்ச்சியோடிருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அதிக சத்தமில்லாத, அமைதி யான சூழ்நிலை அவசியம் தேவை" என்று தெரிவித்தார்.

அவர்களின் வீடு பொதுவாகவே அமைதியாகத் தான் இருக்கும்.

வாரம் முழுவதும் பள்ளியில் வேலை செய்வதால், மாலை நேரத்தில் அவள் எந்த வகுப்பும் எடுப்பதில்லை.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை இரண்டு மணி நேரம் மட்டும், பக்கத்திலிருந்து வரும் பிள்ளைகளுக்கு 'பரதநாட்டியம்' சொல்லிக் கொடுப்பாள்.



அதுவும் கூட, தாத்தா வெளியே நடக்கச் செல்லும் நேரத்தில்தான் வகுப்பு நடக்கும்.

அவர் திரும்பி வருகிற போது, கிட்டத்தட்ட பிள்ளைகள் அனைவருமே கிளம்பிச் சென்றிருப்பார்கள்.

பள்ளியில் நடக்கும் கலைநிகழ்ச்சிகளுக்காகத் தயாராகும் நடனத்தை, சில சமயங்களில் தாத்தாவே விரும்பிப் பார்ப்பதும் உண்டு.

சிறப்பான முறையில் ஆடும் பிள்ளைகளை அழைத்து, 'பலே' என்று பாராட்டுவதுடன், சின்னதாக ஒரு 'காட்பரி சாக்லெட்'டையாவது பரிசாகக் கொடுப்பார்.

எனவே, நடன வகுப்பு பிள்ளைகளுமே முடிந்த வரை அமைதியோடிருக்கவே முயற்சிப்பார்கள்.

அதனால், அமைதி குறைவதற்கு வாய்ப்பே யில்லை.

ஆனால், மகிழ்ச்சி...!

இப்படியொரு சூழ்நிலையில், அதை எப்படிக் கொண்டு வர முடியும்? லேசில் இயலுகிற விஷயமா என்ன? என்று தோன்றியது அவளுக்கு.

இருந்தாலும், அதற்காக அவள் முயற்சித்துத்தான் ஆக வேண்டும்.

தாத்தா நல்லபடியாகக் குணமாக வேண்டுமென்று வேண்டிக்கொண்டு, காரிடரில் போடப்பட்டிருந்த சேரில் அமர்ந்தவளின் கண்களிலே ஜீவன் தொலைந்திருந்தது.

கண்களைத் திறக்காமல் அசைவற்றுக் கிடந்தவரைப் பார்க்கப் பார்க்க, வேதனை கூடிக் கொண்டே போனது.

ஒரு நாள் முழுவதும் அப்படியே இருக்கவும், ரொம்பவே பயந்து போனாள் சௌந்தரியவதி.

கலக்கமுடன் எழுந்து, டாக்டரின் அறையை நோக்கிச் சென்றவள், அங்கிருந்து அவன்... அவர்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்ட அந்த தயாபரன் வெளியே வரவும், அவளின் முகத்தில் சினச் சிவப்புத் தோன்றியது. அப்போதைக்கு அதை ஒதுக்கிவிட்டு,

தயாபரனைத் தொடர்ந்து வெளியே வந்த டாக்டரிடம், "என் தாத்தாவின் உடல் நிலை இப்போது எப்படி இருக்கிறது டாக்டர்? அவர் இன்னமுமே கண் விழிக்கவில்லையே!" என்று கேட்டவளின் குரலில், அவளையும் மீறிய நடுக்கமிருந்தது.

"வயதான மனிதர் என்பதால், கொஞ்சம் மெல்லத்தான் முன்னேற்றமிருக்கும். இப்போது இதயத் துடிப்பு நார்மலுக்குத் திரும்பி விட்டதால், விரைவில் கண் விழித்து விடுவார். பயப்படத் தேவையில்லை" என்று, பெரியவரை 'செக்கப்' செய்து விட்டுக் கூறினார் டாக்டர்.

சற்றே மனம் சமாதானமடைய, சில நிமிடங்கள் கண்ணாடி வழியே பார்த்து விட்டு, பழைய மாதிரியே 'காரிடர்' சேரில் அமர்ந்தாள் அவள்.

கண்களை மூடிக்கொண்டு, சுட்டு விரலால் புருவ மத்தியில் அழுத்தியபோது, அருகிலிருந்த சேரில் யாரோ



அமர்வது போலிருக்கவும், கண்களைத் திறந்து திரும்பிப் பார்த்தாள்.

பார்த்த மாத்திரத்திலேயே, மீண்டும் சினச் சிவப்புத் தோன்றியது!

இவன் இன்னமும் இங்கே இருக்க வேண்டிய அவசியமென்ன?

செய்த பாதகத்திற்குப் பரிகாரம் செய்ய முற்படுகிறான் போலிருக்கிறது!

ஆனால் அந்தப் பாதகத்தை, அவ்வளவு இலகுவாக ஒதுக்கிவிட்டுப் போய்விட முடியுமா என்ன?

அங்கேயிருந்த இருக்கையில் அமர்ந்தவன், அத்தோடு இருந்திருந்தாலும் பரவாயில்லை. அதை விடுத்து...

"உங்களின் தாத்தா விரைவில் குணமாகி விடுவார் சௌந்தரியவதி. அவர் பழைய நிலைக்குத் திரும்புவதற்காக, நான் என்ன உதவி வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். எதுவாக இருந்தாலும் தயங்காமல் தெரிவியுங்கள்" என்று தயாபரன் கூறி முடிக்கும் போதே,

"உதவியா? உங்களிடமிருந்தா? இதுவரை நீங்கள் செய்திருப்பதே, இந்த ஜென்மத்திற்கும் போதுமே! நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் செய்திருப்பதை, எப்போதுமே மறக்க முடியாது. இனி எக்காரணத்தைக் கொண்டும் என்னிடம் பேசாதீர்கள். என் தாத்தாவின்

பொருட்டு, நீங்கள் இங்கே வரவேண்டிய அவசியமும் இல்லை" என்று, முகத்தில் அடிக்காத குறையாக வெளிப்பட்டது அவளின் வார்த்தைகள்.

மீண்டும் அவளிடமிருந்து ஒரு அவமதிப்பு!

உள்ளூர கடுமையான போதும் முடிந்த வரை வெளிக் காட்டிக் கொள்ளாமல், அவளை ஆழ நோக்குவது போல் பார்த்தான்.

அலட்சியமாக உதட்டை வளைத்து, முகம் திருப்பினாள் அவள்.

'உதவி செய்கிறானாம் உதவி. பெரிதாக வந்து விட்டான். இவன் உதவியில்லாமல் இங்கே யாராலும் எதுவும் செய்ய முடியாது பார்' என்பது அவளுக்கு!

அதற்கு மேல் அங்கே இருப்பது பயனற்றது என்பது போல, வேகமாக எழுந்து வெளியேறினான் அவன்.

## 3

இந்தப் பெண் சௌந்தரியவதி என்னதான் நினைத்துக் கொண்டிருக் கிறாள்?

அவனை ரொம்பவும் தான் அலட்சியப்படுத்துகிறாளே?

அவர்களின் வீட்டிற்குச் சென்றதே, வீணாகக் காத்திருந்து அவர்கள் ஏமாற்றமடைய வேண்டாம்



என்பதைத் தெரிவிக்கத்தானே! அவன் அங்கே போகாதிருந்தால், இந்த நிமிடம் வரை, நந்தன் குடும்பத்தாரிடமிருந்து எந்தவிதத் தகவலும் வராமல், நெஞ்சு படபடக்கத் தவித்துக் கொண்டுதானே இருந்திருப்பார்கள்.

என்னவென்று காரணம் தெரியாமல், அந்தப் பெரியவரின் மனஅழுத்தம் இன்னும் எவ்வளவு கூடியிருக்குமோ?

அவரின் மனஅழுத்தம் மேலும் தொடர்ந்திருந்தால், கை, கால் இழுத்துக் கொண்டு செயல் இழக்கவும் வாய்ப்பிருக்கிறது என்று டாக்டர் எச்சரித்தபோது, அவளும்தானே உடன் இருந்தாள்!

அது மாதிரியொரு பெரிய அசம்பாவிதம் நடக்காமல், விரைந்து வந்து விஷயத்தைத் தெரிவித்த தற்கு, அவனுக்கு நல்ல பாடம் தான் சொல்லிக் கொடுத்திருக்கிறாள் அந்தப் பெண் சௌந்தரியவதி.

அவனை, தயவு தாட்சண்யமின்றிக் கழுத்தை அறுப்பவன் என்று கூறி விட்டாளே!

எவ்வளவு மோசமான குற்றச்சாட்டு!

அத்தோடு மட்டும் விட்டு விடக் கூடாது என்பது மாதிரி, இன்னமும் என்னவெல்லாமோ அடுக்கினாளே!

இப்படிப்பட்டவளிடம் போய் வலியச் சென்று, 'உதவி வேண்டுமா?' என்று கேட்டானே. அவனுக்கு இது தேவைதான்.

இப்போதும் கூட, எப்படியோ போகட்டும் என்று விட்டுவிட முடியாமல்... பெரியவரிடம் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டாலோ... அன்றி, பாதிப்பு உண்டா னாலோ... தாமதிக்காமல் உடனே தனக்குத் தெரிவிக்கும் படி, மருத்துவமனை ஊழியர் ஒருவரிடம் கூறி ஏற்பாடு செய்த பிறகுதானே அங்கிருந்து கிளம்பினான்.

போகட்டும்... ஏதோ சின்னப் பெண், வேதனையில் வார்த்தைகளை வீசுகிறாள் என்று நினைத்து விட்டு விட முடியாமல், மனது முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

அந்த முணுமுணுப்பெல்லாம், அவன் தங்கையிட மிருந்து அழைப்பு வரும் வரைதான் நீடித்தது.

பிறகு, அன்புத் தங்கையின் மனம் கஷ்டப்படக் கூடாது என்று, முடிந்தவரை உற்சாகமுடனே பேச லானான் தயாபரன்.

"இரு தரப்புப் பெற்றோரிடமும் பேசி, அவர்களைச் சமாதானப்படுத்தும் வேலை என் பொறுப்பு! அதுபற்றி எந்தக் கவலையும் இல்லாமல், நீங்கள் இருவரும் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்து விட்டு வாருங்கள்" என்று தைரியம் கூறியவனுக்கு, அவன் நினைத்த மாதிரி சமாதானப்படுத்துவதென்பது, அவ்வளவு சுலபமாக முடிகிற விஷயமாகத் தெரியவில்லை.

ஏனென்றால், அவனுடைய பெற்றோரே அவன் மீது கடுங்கோபத்தில் இருந்தார்கள்.



தாங்கள் 'ஒத்து வராது' என்று உறுதியாகத் தெரிவித்து விட்ட பிறகும், மகன் இப்படியொரு காரியத்தைச் செய்திருப்பது, மகா பாதகமாகவே பட்டது அவர்களுக்கு.

அவர்கள் குடும்பத்தின் செல்வ வளமும், வாழ்வும் பற்றி அவனறியாததில்லையே!

ஐந்து தலைமுறைக்கும் முன்பாக, பத்தாயிரம் ரூபாயை முதலீடாகக் கொண்டு துவங்கப்பட்டு, இன்றைக்குக் கோடிகளிலே வளர்ந்து, 'தமிழ் நாடு' முழுவதும் கிளைகள் கொண்டு செயல்பட்டுக் கொண் டிருக்கிற, 'சுபதனம்' நிதி நிறுவனத்தின் பொறுப்பை ஏற்று நடத்திக் கொண்டிருப்பவனே அவன்தானே!

இத்தனைக்கும், ஐந்து தலைமுறைக்கும் சேர்த்து, வரமாக வந்து பிறந்த பெண் குழந்தை தாரிகா என்பதால், அந்த வீட்டின் இளவரசியாகத்தான் அவளைப் போற்றி வளர்த்தார்கள்.

அவள் ஒன்றைக் கேட்டு, 'முடியாது, வேண்டாம்' என்று பெற்றோர் மறுத்தார்கள் என்றால், அது அந்தப் பொல்லாத காதல் விவகாரத்தை மட்டும்தானே!

அந்த மறுப்பும் கூட, அவர்களின் செல்ல மகளுடைய நல்வாழ்விற்காகத்தானே!

செல்வச் செழிப்பிலேயே வாழ்ந்து வரும் மகள், ஒரு மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தவனோடு வாழ, எப்படிச் சாத்தியப்படும் என்பது அவர்களுக்கு.

தங்கையின் மீதுள்ள அதீத அன்பினால், தயாபரன் இப்படித் திருமணமே செய்து வைக்கக் கூடும் என்று, அவர்கள் ஒருபோதும் எண்ணவில்லையே!

எல்லா விஷயத்திலும், மகனின் முடிவு சரியாகத்தான் இருக்கும் என்ற எண்ணத்தையே அல்லவா ஆட்டம் காண வைத்துவிட்டான்.

ஏன் இப்படிச் செய்தாய்? என்று கொதித்துப் போய்க் கேட்டவர்களிடம்,

'தாரிகாவின் சந்தோஷமான எதிர்காலத்திற்காகத் தான்' என்று கூறிய மகனின் பதிலைக் கேட்டு, தலையிலேயே அடித்துக் கொள்ளலாம் போலிருந்தது பெற்றவர்களுக்கு.

"சந்தோஷமா? அது எத்தனை நாளைக்கு இருக்கப் போகிறது என்று, உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?" என அலட்சியமாகக் கேட்டு, ஏளனமாகப் பார்த்தார் பெற்றவர்.

அவனைப் பெற்றெடுத்த தாய்க்கும் அதே கருத்துதான்.

செல்வச் சீமாட்டியான தங்களின் மகள், அவர்கள் நிறுவனத்தின் கிளையிலேயே வேலை செய்யும் மனிதனை மணந்து, எப்படிச் சந்தோஷமாக வாழ முடியும்?

இந்தப் பெண் தாரிகாவிற்கு, புத்தி ஏன்தான் இப்படிப் போயிற்றோ?



அந்த நந்தன், ஒன்றுமில்லாத 'பாப்ப'ராக இருந் திருந்தாலாவது பரவாயில்லை. வேண்டும் மட்டும் கொடுத்து வசதியாக்கி விட்டிருக்கலாம்.

அப்படிச் செய்யவும் முடியாதபடி, ரோஷம் அதிக முள்ள சாதாரண 'மிடில் கிளாஸ்' குடும்பம்.

'நான் உன்னைத்தான் காதலிக்கிறேன் தாரிகா. உன் குடும்பத்தாரின் பணத்தை அல்ல' என்று, அந்த நந்தன் கூறியதாக, மகள் பெருமிதமாக அறிவித்தது தான், நன்றாக நினைவிருக்கிறதே!

நியாயமாகப் பார்த்தால், ஒரு பெண்ணை, அவளுக்காகவே மட்டுமே விரும்பி மணக்கிறேன் என்று நந்தன் கூறியது, பாராட்டி வரவேற்கக்கூடிய விஷயம் தான்.

அதுதான், அந்தத் திருமணப் பெண்ணுக்கு மரியாதையும் கூட.

ஆனால் இதெல்லாம், யாருக்கோ? எங்கேயோ? நடந்திருந்தால் பரவாயில்லை. லேடீஸ் கிளப் மூல மாகவே விழா நடத்தி, பரிசும் கொடுத்திருக்கலாம்.

மாறாக, எல்லாம் அவர்கள் வீட்டில் அல்லவா நடந்திருக்கிறது.

இதை ஏற்பதென்பது, செல்வ லட்சுமியாலோ, அவள் கணவர் சற்குணனாலோ முடியாது.

முடியவே முடியாது தான்!

அதற்காக அவர்கள் தங்களை விட வசதி குறைந்திருப்பவர்களை, மட்டமாக நினைத்தார்கள் என்றில்லை.

இது அவர்களுக்குச் சரிப்பட்டு வராது.

அவ்வளவுதான்!

ஆனால் தயாபரனும் அவ்வளவு லேசில் விட்டுவிடுவதாகத் தெரியவில்லை.

ஏனெனில் ஒரு சின்ன வாய்ப்புக் கிடைத்தாலும் போதும் விட்டு விடாமல், தங்கையைப் பற்றிப் பேசி, முயற்சி செய்து கொண்டேதான் இருந்தான்.

இடையில் ஒரு நல்ல விஷயமாக, ஹாஸ்பிடலில் இருக்கும் பெரியவரின் உடல்நிலை, ஆபத்தின்றி நல்லபடியாக முன்னேறுவதாகத் தகவல் வரவும், 'ஹப்பா...' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் தயாபரன்.

அன்றைக்கான அலுவலக வேலையை அவசர மாக முடித்துவிட்டு, மதிய உணவைத் தியாகம் செய்து விட்டு, ஹாஸ்பிடலுக்குச் சென்றான்.

என்னவோ தெரியவில்லை. அந்தப் பெரியவரிடம், ஓரிரு நிமிடங்கள் இதமாகப் பேச வேண்டும் போல், தோன்றிக் கொண்டே இருந்தது!

ஆனால், அதற்கு அன்று கொடுத்து வைக்க வில்லை என்பது போல, பெரியவரின் கையை வருடிக் கொடுத்தவாறு, ஏதோ மெல்லிய குரலில், அந்தப்



பெண் சௌந்தரியவதி பேசிக் கொண்டு இருப்பது, கண்ணாடிக் கதவின் வழியே தெரிந்தது.

இவளுக்கு, இவ்வளவு மென்மையான குரலில் கூடப் பேசத் தெரியுமா என்ன என்று, வியப்பாகிப் போயிற்று அவனுக்கு!

பரதநாட்டியப் படிப்புடன், நோயாளியைக் கவனிப்பது எப்படி என்பதைப் பற்றியும் பயின்றிருப் பாளோ?

மிகவும் அனுபவம் பெற்ற நர்ஸ் கூட, பெரியவரை இந்தளவிற்கு இதமாகப் பார்த்துக் கொள்வார்களா என்பது சந்தேகம்தான்!

தாத்தாவிற்கும் பேத்திக்குமான உரையாடலில் குறுக்கிட வேண்டாமென்று முடிவு செய்து, வெளி வராண்டாவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந் தான்.

சில நிமிட காத்திருப்பிற்குப் பிறகு, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் சௌந்தரியவதி. எதிரே அமர்ந்திருந்தவனைப் பார்த்ததும், அவள் முகம் எப்படி மாறியிருக்கும் என்பதைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

இருந்தாலும் அதை ஒதுக்கிவிட்டு, எழுந்து அவள் அருகே சென்றான்.

"உங்களுக்கு இங்கே என்ன வேலை? ஒருமுறை சொன்னால் தலைக்குள் விஷயம் ஏறாதா?" என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு.

அவனாலும்கூட நன்றாகவே திருப்பியடித்து விட முடியும்தான்...

"பரவாயில்லை... மருத்துவமனை என்பதை நினைவில் கொண்டு, கத்தாமல், பல்லைக் கடித்துக் கொண்டேனும் மெல்லவே பேசுகிறாய். ஒரு பொது இடத்திற்கு யார் வேண்டுமானாலும் வருவார்கள். உங்களைப் பார்க்கத்தான் வந்ததாக எப்படிச் சொல் வீர்கள் என்று திருப்பினால், இவள் முகம் எப்படிக் கன்றிச் சிவந்து போகும்" என்று நினைத்த போதும், அப்படிச் செய்ய வேண்டுமென்று அவனுக்குத் தோன்ற வில்லை.

'ஏன் தோன்றவில்லை?' என்று எழுந்த கேள்வியை, அப்போதைக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, "உங்கள் தாத் தாவைப் பார்த்துப் பேச வேண்டும் என்றுதான் வந்திருக் கிறேன்" என்றான் தெளிவாக.

"எதற்கு? இருக்கிற கொஞ்சம் நஞ்சம் உயிரையும், பிடுங்கி எடுத்து விட்டுப் போகவா?" என்றாள் கடுமை யாக.

செங்குளவி கொட்டினால்கூட, இவளின் வார்த்தை களைப் போல வலிக்குமா என்பது சந்தேகம்தான்!

"உன் நாக்கைக் கொஞ்சம் வெளியே நீட்டிக் காட்டுகிறாயா? நாக்கிற்குப் பதிலாக, கத்தி ஏதாவது இருக்கிறதா என்று தெரிந்து கொள்கிறேன்" என்றவனின் குரலில், என்ன இருந்தது? சட்டென்று யூகிக்க முடிய



வில்லைதான் என்றாலும், என்னவோ இருந்தது என்பது மட்டும் உறுதி.

"ஆமாம்... என் வார்த்தைகள் மட்டும்தான் இப்படி இருக்கிறது! உங்களின் செயலும், வார்த்தைகளும், அப்படியே மயிலிறகைக் கொண்டு வருடுவது போல, அவ்வளவு மென்மையானதாக இருக்கிறது. நீங்கள் நடந்து கொண்ட விதத்தைப் பற்றி, வெளியே சொல்லிப் பாருங்கள். ஆஹா! என்றுதான் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். எல்லாம் அவ்வளவு நியாயமான செயல் களாயிற்றே!" என்று, உதடு வளைய வெறுப்புடன் கூறினாள் அவள்.

இடவலமாக தலையை ஒருமுறை அசைத்து, 'கத்தியே தான்!' என்று புருவம் உயர முணுமுணுத் தவன், "இப்போது கிளம்புகிறேன். ஆனால் உன் தாத்தா நன்றாகப் பேசுகிற அளவிற்கு குணமான பிறகு, கட்டாயம் பார்க்க வருவேன்" என்றுவிட்டு, வேகமாகத் திரும்பிச் சென்றான்.

'தாராளமாக வா. ஆனால் அப்போதும் இதே மாதிரி திரும்பித்தான் போகப் போகிறாய். வீணாகப் போவது உன் நேரம் தானே, எனக்கென்ன வந்தது?' என்று, ஏளனமாக நினைத்தாள் சௌந்தரியவதி.

அந்த ஒரு வாரமும் நடந்த மருத்துவச் செல வினால், அவள் கணக்கிலிருந்த பணம் கிட்டத்தட்ட காலியாகி இருந்தது.

இரண்டு வருடத்தின் சேமிப்பு!

வீட்டைச் சுற்றியிருக்கிற நிலத்தையும் சேர்த்து, பாதுகாப்பாகக் காம்பவுண்ட் சுவர் கட்ட வேண்டுமென்று, தாத்தா ரொம்ப நாளாகவே சொல்லிக் கொண்டிருந்தார்.

ஆசையாக அவள் வளர்க்கிற பூஞ்செடிகளை, திருட்டுத்தனமாக சில ஆடு, மாடுகள் தின்று விட்டுப் போய்விடும் போது, மனதிற்கு ரொம்பவே கஷ்டமாக இருக்கும்.

அதுமாதிரி சமயத்தில் எல்லாம், கட்டாயம் சுவர் கட்டியாக வேண்டும் என்று தோன்றும்.

அதற்காகவே, தேவைக்கு மேல் செலவு செய்யாமல், பணம் சேர்த்தாள் எனலாம்.

இப்போது எல்லாம் செலவாகிப் போயிற்று என்பது, கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும், மறு நிமிடமே, 'போகிறது... தாத்தாவின் உயிரைக் காப்பாற்றத்தானே செலவானது' என்று, தானே சமாதானமும் அடைந்து கொண்டது.

தாத்தாவின் பழைய குரலில் 'கண்ணும்மா'வைக் கேட்ட பிறகுதானே, அவளுக்கு நிம்மதியாக மூச்சு விட முடிந்தது.

அவளைக் கலங்கித் தவிக்க வைத்த ஒரு வாரமும் அன்றோடு முடிந்தது.

'முருகா! இனி மருத்துவமனைப் பக்கம் போகிற நிலை வராமல் காப்பாற்றுப்பா!' என்று வேண்டிக் கொண்டு, தாத்தாவை வீட்டிற்கு அழைத்து வந்தாள்.



ஈஸி சேரில் சாய்ந்தபடி, டி.வி. நியூஸ் பார்த்துக் கொண்டிருந்தவரிடம், சத்துமாவு கஞ்சியைக் கொடுத்து குடிக்கச் செய்தாள்.

அவரின் கைகளிலும், கால்களிலும், வெகு சில சமயத்தில் நடுக்கம் ஏற்பட்டது.

அது மாதிரி சமயத்தில் எல்லாம், சட்டென எதையாவது பற்றிக் கொண்டு உட்காரவோ, சாய்ந்து நிற்கவோ செய்தார்.

எங்கேயாவது விழுந்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தில், பழைய மாதிரி வெளியே நடந்து விட்டு வருவதை, வேண்டாமென்று தடுத்து விட்டாள் சௌந்தரி.

வாசவனுக்கும் அதுவே சரியென்று பட்டது. அவருக்கு ஏதாவது ஒன்று என்றால், பேத்திக்குத்தானே சிரமம்.

முதலில் கொஞ்சம் ஒரு மாதிரியாக, வெளி மனிதர்களின் உறவே இல்லாமல் இருப்பது, சங்கட மாகத்தான் இருந்தது அவருக்கு.

தாத்தாவின் மனதைப் பற்றி பேத்திக்குத் தெரியாதா என்ன?

அதற்கும் ஒரு ஏற்பாடு செய்தாள் சின்னவள்.

வீட்டு வாசலைத் தாண்டி சற்றே தொலைவில் கிளைச் சாலை வந்துவிடும். சாலை வரையிருந்த அவர் களின் நிலத்தில், தாமாகவே வளர்ந்த, ஓரளவிற்குப் பெரிய வேப்ப மரம் ஒன்று உண்டு.

அதனுடைய சிலு சிலு காற்று, அடிக்கடி வீடு வரையும் கூட வந்துவிட்டுப் போகும்.

மடக்கி எடுத்துச் செல்ல வசதியாக நாடாக் கட்டில் வாங்கி, வேப்ப மர நிழலில் போட்டு, தாத்தா இளைப்பாற வசதி செய்து கொடுத்தாள்.

அவருக்கு ரொம்பவே சந்தோஷமாகிப் போயிற்று. "தேங்க்ஸ்டாம்மா. இப்போது தான் நன்றாக மூச்சு விட முடிகிறது. வேடிக்கை பார்த்துக் கொண்டு பொழுதும் போய்விடுகிறது" என்று உற்சாகமடைந்து கூறினார்.

அவளும் இதைத்தானே எதிர்பார்த்தாள். கிளை வழி சாலையென்பதால், எப்போதாவதுதான் பெரிய வாகனங்கள் வரும். மற்றபடி சைக்கிள், பைக்கை மட்டும் தான் பார்க்க முடியும்.

எனவே அதிகப் புகையின்றி, உடலுக்குக் கேடு விளைவிக்காமல், சுகாதாரமான காற்றே வீசியது.

இதையும் மனதில் வைத்துத்தான், இந்த ஏற்பாட் டையே அவள் செய்தாள்.

தாத்தாவின் உற்சாகம் அவளையும் தொற்றிக் கொள்ள, வீட்டைப் பெருக்கிக் கழுவி விட்டவள், கலைந்து கிடந்த பொருட்களையெல்லாம் உரிய விதமாக அடுக்கி வைத்தாள். பிறகு, ஒரு வாரமாகச் சேர்ந்திருந்த துணிகளையெல்லாம் துவைத்து உலர்த்தி விட்டு, தலைக்குக் குளித்தவள், சாம்பிராணி புகை போட்டு, சுவாமி படங்களுக்குப் பூ தூவி கற்பூர தீபம்



காட்டியபோது, வீடு கிட்டத்தட்ட பழைய நிலைக்கே திரும்பி விட்டதைப் போல உணர முடிந்தது.

கேட்டிருந்த விடுப்பு, நாளை ஒரு நாளுடன் முடிகிறது. இன்னும் சில நாட்கள், தாத்தாவை அருகில் இருந்து பார்த்துக் கொள்ள அவளுக்கு ஆசைதான். ஆனால் அவளின் சூழ்நிலையை அறிந்து, தொடர்ந்து இத்தனை நாள் விடுப்பு அளித்திருப்பதே பெரிய விஷயம் தான்.

இதற்கு மேலும் கேட்பது, நியாயமாகாது என்று தோன்றியது.

மதிய உணவிற்குப் பிறகு, வாரப் பத்திரிகை ஒன்றையெடுத்துப் புரட்டியவள், அப்படியே கண் அயர்ந்து விட்டாள்.

அடுத்தடுத்து ஒரே நாளில் செய்த அதிகப்படியான வேலைகள், அடித்துப் போட்ட மாதிரி அவளைத் தூங்க வைத்தது.

மாலை நான்கு மணிக்கு மேல், 'சௌமிம்மா' என்று தாத்தா அழைத்த பிறகுதான், கண்களையே திறக்க முடிந்தது.

கைகளை முறுக்கி சோம்பல் முறித்தபோது, அப்படியே காற்றில் மிதப்பது போலிருந்தது.

கொஞ்சம் நஞ்சம் மீதமிருந்த அலுப்பையும், முகத்தில் குளிர் நீர் அடித்து விரட்டினாள்.

டீ போட, பால் வாங்க வேண்டும்.

முன்பெல்லாம் இதுமாதிரியான வேலைகளை யெல்லாம், தாத்தா செய்து விடுவார். இனி அவள் தான் பார்த்தாக வேண்டும்.

தீர்ந்து போன சில மளிகை சாமான்களையும் குறித்துக் கொண்டு, சணல் பை ஒன்றை எடுத்துக் கொண்டு, வெளியே வந்து செருப்பை மாட்டியபடி, தாத்தா எங்கேயிருக்கிறார் என்று பார்த்தாள்.

வீட்டின் முன்பக்கப் படிகளில் வைக்கப்பட்டிருக்கும் தொட்டிச் செடிகளுக்கு, நிதானமாக நீர் ஊற்றிக் கொண்டிருந்தார் அவர்.

"இப்போதே இந்த வேலையை எல்லாம் செய்ய வேண்டுமா?" என்றபடி வந்து நின்ற பேத்தியைப் பார்த்து முறுவலித்தவர், "என்னடாம்மா... மலையை வெட்டுகிற வேலையையா செய்கிறேன். சின்ன ஜக்கில் தண்ணி மொண்டு செடிக்கு ஊற்றுகிற வேலை. இதைக்கூட செய்ய வேண்டாமென்றால் எப்படிடா?

"வெறுமனே விட்டத்தை வெறித்தபடி எவ்வளவு நேரம்தான் படுத்திருப்பது? சின்னச் சின்ன வேலை களையாவது செய்தால்தானே, எனக்கும் பொழுது போகும்.

"நீ வெளியே போகக் கிளம்பி விட்டாய் போலிருக் கிறதே. நேரமிருந்தால் டெய்லர் கடை வரை சென்று, மூன்று கதர் சட்டை தைக்கக் கொடுத்திருந்தேன். அதை வாங்கி வந்து விடுடாம்மா!" என்றார்.



"சரி... செய்யுங்கள். ஆனால், இன்றைக்கு இங்கேயிருப்பதற்கு மட்டும் ஊற்றினால் போதும். மற்றதற்கெல்லாம் நாளை, அடுத்த நாள் என்று செய் தால் போதும்" என்று அழகான முறுவலும், கொஞ்சம் கண்டிப்பான குரலிலுமே கூறிவிட்டு, விரைந்து நடந்தாள் சௌந்தரியவதி.

பேத்தியின் செல்லக் கண்டிப்பு, அவருக்கு இதமான சிரிப்பை உண்டாக்கியது.

அழகும், அன்பான குணமும், நல்ல பண்புமான பேத்தியை, தகுதியான மனிதன் ஒருவனின் கைகளிலே பிடித்துக் கொடுக்கிற வரை, தன்னைக் கடவுள் வைத்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, வேலையைத் தொடர்ந்தார் வாசவன்.

வெளியே வந்த வேலைகள் எல்லாம் முடிந்து விட, கடைசியாகப் பால் பாக்கெட்டை வாங்கிக் கொண்டு, முடிந்தவரை விரைவாக நடந்தாள்.

வாங்கியிருந்த சாமான்கள் கொஞ்சம் கனமாகவே இருந்ததால், தூக்கிக் கொண்டு வருவதற்கு சிரமமாகத் தான் இருந்தது.

'ஆட்டோ ஸ்டாண்ட்' தொலைவில் உள்ளதால், அந்தப் பக்கம் ஆட்டோ வருவதும் குறைவுதான். எனவே வீடு வரை நடந்தே தான் வரவேண்டியிருந்தது.

நான்கைந்து மாதம் கழித்தாவது, ஒரு 'ஸ்கூட்டி' வாங்கி விட்டால்தான் சரிப்படும். திடீரென்று ஒரு

தேவையென்றால், வண்டி இருப்பது தான் வசதி என்று தோன்றியது.

தாத்தாவையும் கூட அவ்வப்போது, வெளியே எங்காவது அழைத்துச் சென்று வரலாம்.

பாவம்... இவ்வளவு நேரமும் டீ கூட இல்லாமல் இருப்பாரே என்று, வேக எட்டுகளுடன் வீட்டருகே வந்தவளின் முகம் அப்படியே மாறிப்போனது.

காரணம்...

வேப்ப மர நிழலில் நிறுத்தப்பட்டிருந்த, 'ரோல்ஸ் ராய்ஸ்' கார்!

இது, அந்த நெட்டை மனிதன் தயாபரனுடைய தாயிற்றே!

அப்படியென்றால்...!

சட்டென்று திரும்பி, வீட்டுப் பக்கம் பார்வையை வீசினாள்.

## 4

**பா**ர்த்த மாத்திரத்திலேயே, அப்படியே பற்றிக் கொண்டு வந்தது.

அவள் சந்தேகப்பட்ட மாதிரியே, அங்கே அந்த நெட்டையனே தான் இருந்தான்.

வீட்டைச் சுற்றியிருக்கிற வெளிப்புற வராண்டாவில், பெரிய ஊஞ்சல் உண்டு.



அதிலே தாத்தா அமர்ந்திருக்க, எதிரே இருந்த மூங்கில் நாற்காலியில் தயாபரன் அமர்ந்திருந்து, வெகு இயல்பாக ஏதோ பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

எவ்வளவு தைரியமிருந்தால் வீட்டிற்கே வந்திருப்பான்.

அவள் அவ்வளவு தூரம் பேசிய பிறகும் வந்திருக்கிறான் என்றால், இவனையெல்லாம் என்ன செய்தால் தகும்?

வெட்கமில்லாமல் இவன்தான் வந்தான் என்றால், 'வெளியே போடா' என்று விரட்டியடிப்பதை விட்டுவிட்டு, அமரச் சொல்லி மரியாதை வேறு கொடுத்திருக்கிறாரே இந்தத் தாத்தா, இவரை என்ன சொல்ல?

உள்ளூரத் தோன்றிய அனல் முகத்தில் வெளிப்பட, அழுத்தமான காலடிகளுடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

"என்னடாம்மா... சாமான்கள் ரொம்ப கனக்கிறது போல, முகமே ஒரு மாதிரியாக இருக்கிறது. பையை முதலில் கீழே வை!" என்று வாசவன் பேத்தியுடன் இயல்பாகப் பேச, பேத்தியின் பார்வையோ தயாபரனைக் கோபமாகப் பார்த்துத் திரும்பிவிட்டு, "இந்த மனிதருடன் உங்களுக்கென்ன பேச்சு தாத்தா! இவர்களால் பட்டதெல்லாம் போதாதா? வெளியே போ என்று சொல்லாமல், எதற்கு உட்கார..." என்றவளை இடையிட்டு,

"முதலில் இப்படிப் பேசுவதை நீ நிறுத்தும்மா. என்ன பழக்கம் இது? வீடு தேடி வந்தவர்களை, முகத்திற்கு நேராக அவமதித்துப் பேசுவது ரொம்பத் தப்பு. பண்பற்ற செயலும் கூட. எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை" என்று, கண்டிக்கும் குரலில் கூறினார் தாத்தா.

இவன் முன்பாக இப்படிக் கண்டிக்கிறாரே என்று வருத்தமாக இருந்தாலும், "இவர்களைப் பற்றியெல்லாம் உங்களுக்குத் தெரியாது தாத்தா. கொஞ்சமும் நியாயமின்றி, நாம் எவ்வளவு துன்பம் அனுபவிக்க நேர்ந்தது? எல்லாம் இவர்களால்தானே?

"வேண்டாததைப் பற்றியெல்லாம் பேசினால், மீண்டும் உங்கள் உடல் நிலை பாதிப்படைந்து விடக் கூடுமென்றுதான், முன்பே, 'இனி வராதீர்கள்' என்று திருப்பியனுப்பினேன். அப்படியிருக்கும்போது, நான் இல்லாத சமயம் வந்து பேசுவது மட்டும் சரியா?" என்று கோபமுடனே கேட்டாள் சின்னவள்.

பெரியவர் மீண்டும் ஏதோ பேச எத்தனித்தபோது, "சரியில்லை தான். ஆனால் என்ன செய்வது? எனக்கு வாசவன் சாரிடம், மனதார மன்னிப்புக் கேட்க வேண்டியிருந்தது. அதற்கு நேரில் சந்தித்துத்தானே ஆக வேண்டும். என்னால் நீங்கள் அனுபவித்த வேதனையை, இல்லையென்று செய்ய முடியாது.

"ஆனால் பண நஷ்டத்தை ஈடுகட்ட முடியும். அதையாவது கட்டாயம் செய்து விட வேண்டும்



என்று முடிவு செய்துதான், ஹாஸ்பிடலில் செலவான தொகையை விசாரித்து, அதை 'செக்'காகக் கொண்டு வந்திருக்கிறேன். என்னால் உங்களுக்கு ஏற்பட்ட அதிகபட்சமான நஷ்டம். அதை 'நான்' ஏற்பது தான் நியாயம். இது உங்களுக்குச் சேரவேண்டிய, உங்களுடைய பணம். தயவு செய்து வாங்கிக் கொள்ளுங்கள் சார்!" என்று நிதானமான குரலில் கூறி, பாக்கெட்டிலிருந்து 'செக்'கை எடுத்துப் பெரியவரிடம் கொடுத்தான் தயாபரன்.

இரண்டு லட்சத்திற்கான செக்!

ஏனென்று தெரியாமல் முன்பை விட அதிகமாக, சுறுசுறுவென்று கோபம் வந்தது சௌந்தரிக்கு.

என்னிடம் இருக்கிறதென்று நீட்ட வந்துவிட்டானாக்கும்!

"யாருக்கு வேண்டும் உங்களின் பணம்? செய்வதையெல்லாம் திட்டமிட்டுச் செய்துவிட்டு, இப்போது பணத்தைக் கொடுத்துச் சரிசெய்யப் பார்க்கிறீர்களா? என்ன மாதிரி..." என்றவளை இடையிட்டு, "அவர் செய்ய நினைப்பது சரியான விஷயம் தான் சௌமி. மேற்கொண்டு நீ எதுவும் பேச வேண்டாம்" என்று பேத்தியிடம் பணித்து விட்டு, "இந்த செக்கை நான் வாங்கிக் கொள்கிறேன் தயாபரன்" என்று கூறி அவனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

நம்பவே மாட்டாத திகைப்பில் சௌந்தரி உறைந்து போக, "நன்றி சார். இப்போதுதான் எனக்குக் கொஞ்சம்

நிம்மதியாக இருக்கிறது. நான் கிளம்புகிறேன்'' என்று கூறிவிட்டு, தன் காரை நோக்கிச் சென்றான்.

தயாபரனின் கார் அங்கிருந்து சென்ற பிறகும் கூட, திகைப்பிலிருந்து விடுபடவில்லை சௌந்தரியவதி.

தன்னுடைய தாத்தாவா இப்படிச் சொன்னார்? எப்படிச் சொல்ல முடிந்தது அவரால்? என்று உள்ளூரக் கேள்வி எழுந்து கொண்டேயிருந்தது.

கையிலிருந்த செக்கை எடுத்துச் சென்று, அலமாரியில் வைத்துப் பத்திரப்படுத்திவிட்டு வாசவன் திரும்பி வரும் வரையுமே, அப்படியே தான் நின்றிருந்தாள் சௌமி.

"என்ன சௌமிம்மா... இன்னமும் நின்று கொண்டேயிருக்கிறாய்? பையைக் கொண்டு போய் வைத்து விட்டு, முதலில் முகத்தில் நீர் அடித்துக் கழுவி விட்டு வா. உன்னுடன் பேச வேண்டியிருக்கிறது" என்றார்.

எந்திரம் போல, சொன்னதைச் செய்துவிட்டுத் திரும்பி வந்த பேத்தியின் முகத்தைப் பார்த்தவருக்கு, ஒரு மாதிரியாக மனம் கனிந்து போயிற்று.

சிறு குழந்தையைப் போல, அவளின் கையைப் பற்றி அழைத்து வந்து சோஃபாவில் அமர வைத்து, தானும் அருகேயமர்ந்தவர், ஒரு பெருமூச்சை வெளியிட்டு விட்டு,

"என்னடாம்மா... இன்றைக்கு உன்னிடம் நான் கடுமையாக நடந்து கொண்டதைப் பார்த்து, திகைத்து



விட்டாயா? சாரிடாம்மா... உன் பேச்சை நிறுத்துவதற்கு, கண்டிப்பு காட்டுவதை விட எனக்கு வேறு வழி தெரியவில்லை.

"எந்தச் சூழ்நிலையிலும், வீடு தேடி வந்தவர்களை அவமதித்துப் பேசுவது தப்புதானேம்மா. மரியாதை தெரிந்தவர்கள் செய்கிற செயலா அது?" என்று எடுத்துக் கூறி, சமாதானப்படுத்த முயன்றார்.

ஆனால், அவ்வளவு லேசில் பேத்தி சமாதானமாகி விடுவாளா என்ன?

அதே சமயம், பேத்தியைப் பார்த்துப் பார்த்து வளர்த்தவருக்கு, அவள் மனதில் ஓடிக் கொண்டிருப்பதைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாமலா போய் விடும்?

சின்னவளின் தலையை வருடி, "தயாபரனிடம் இருந்து, நான் எப்படிச் செக்கை வாங்கினேன் என்று, அதிர்ச்சியாக இருக்கிறதாம்மா? அதை விடவும், எப்படி வாங்கலாம் என்று கோபமும் கூட, அப்படித்தானே!'' என்று, சரியாகப் பாயின்ட்டைப் பிடித்தார் வாசவன்.

சௌமி, 'ஆமாம்' என்பது போலத் தலையை ஆட்டினாள்.

"நியாயமாகவே, அந்தப் பணம் நமக்குச் சேர வேண்டியதுதாம்மா. நன்றாக யோசித்துப் பார்த்திருந்தால், உனக்கே புரிந்திருக்கும். என்னவோ, உன் கோபம் அதை மறைத்து விட்டது. போகிறது விடு.

"எனக்கு, திடீரென்று உடல் நிலை சரியில்லாமல் போனதற்கு என்ன காரணம்? உன் நிச்சயதார்த்தம் நின்று போன அதிர்ச்சி. அந்த அதிர்ச்சிக்கு, தயாபரன் தானே பிரதான காரணம். எனக்கு இயல்பாக, தானாகவே முடியாமல் போயிருந்தால், நம்முடைய பணத்தை செலவழித்தது நியாயம்.

"அப்படியில்லை என்கிற போது, காரணமான வர்கள் பொறுப்பேற்பது தான் சரி. இப்போது நடந்த எதையும், நாம் கேட்கவும் இல்லை, எதிர்பார்க்கவும் இல்லை. அவர்களாகவே தப்பு, சரி தெரிந்து, அவர் களால் ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்ய வருகிறார்கள். நாம் ஒன்றும், வெறுமனே யாரோ சும்மா கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளவில்லையே சௌமிம்மா.

"வழியில் போகிறவர் மீது இடித்து விட்டால், வண்டி உரிமையாளர் அடிபட்டவரை ஹாஸ்பிடலில் சேர்த்து, அங்கே ஆகிற மருத்துவச் செலவை ஏற்பது நடைமுறை. ஒரு வகையில், இதுவும் அதுபோலத்தான். அதனால் தான் வாங்கினேன். ஊர் உலகத்திலே நடக்கிற வழக்கமெல்லாம் உனக்கும் தெரியும் தானே! இப்போது சொல்! நான் செய்தது சரியா, இல்லையா?" என்று கேட்டார் வாசவன்.

அதுவரை, மனதை அடைத்து உறுத்திக் கொண் டிருந்த ஏதோ ஒன்று, வழி கிடைத்து விட்டாற் போல விலகிச் செல்வதை அவளால் உணர முடிந்தது.



உறுத்தல் விலகுகிறது என்றால்...!

தாத்தா சொன்னது போல, சரிதானா?

அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லை யென்றால், அவள் மனம் லேசாக வாய்ப்பேயில்லை.

தாத்தா செக்கை வாங்கிய போது இருந்த கொதிப்பும், அதிர்ச்சியும் குறைந்து, மனம் இயல்பு நிலைக்குத் திரும்புகிறதே!

ஆழமான பெருமூச்சுடன், "சாரி தாத்தா... எனக்கு, இங்கே தயாபரனைப் பார்த்ததும், அடக்கமாட்டாத கோபம் வந்து விட்டது. செக்கை நீட்டியதும், இன்னும் கோபம் கூடிவிட்டது. தயாபரனின் செயல் சரிதான் என்று, அப்போது என்னால் ஒத்துக்கொள்ள முடிய வில்லை.

"உங்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இப்போது புரிகிறது தாத்தா. நீங்கள் கண்டிக்கிற அளவிற்கு நான் நடந்து கொண்டு விட்டேன். இனி இப்படி நடக்காது. சாரி..." என்று நிதானமாகக் கூறி, மன்னிப்புக் கேட்டாள் சௌந்தரியவதி.

"நீ புரிந்து கொள்வாய் என்று தெரியும்டா..." என்று மென்மையாகப் புன்னகைத்தவர், "சீக்கிரமாக டீ போட்டுக் கொடுத்தால், இன்னமும் சந்தோஷம். நேரம் ஆக ஆக என்னவோ போலிருக்கிறது" என்று பேச்சை மாற்றி, பேத்தியின் சிந்தனையை வேறு பக்கம் திருப்பி னார்.

"இதோ உடனே கொண்டு வருகிறேன்" என்று, கிச்சனுக்குள் விரைந்தாள் சௌமி.

இருவரும் சேர்ந்தமர்ந்து டீயைப் பருகி முடித்து விட்டு, வாங்கி வந்திருந்த சாமான்களைப் பிரித்து, வழக்கமாக வைக்குமிடத்தில் அடுக்கினார்கள்.

டெய்லரிடமிருந்து வாங்கி வந்த சட்டைகளின் அளவு, சரியாக இருக்கிறதா என்று பார்த்து விட்டு, பீரோவில் கொண்டு வைத்தார் வாசவன்.

இரவு உணவிற்குப் பிறகு, சற்று நேரம் டி.வி. நியூஸ் பார்த்துக் கொண்டிருந்த தாத்தாவிடம், மாத்திரைகளையும் தண்ணீர் டம்ளரையும் கொடுத்தாள்.

கனமான பையைத் தூக்கிக் கொண்டு நடந்ததாலோ என்னவோ, கடுகடுவென கால்கள் வலித்தது.

சமையலறைப் பாத்திரங்களை ஒதுக்கி வைத்து விட்டு, வெதுவெதுப்பான நீரில் குளித்தவள், கட்டிலில் படுத்து கண்மூடிய சில நிமிடத்திற்குள்ளாகவே, துயிலில் ஆழ்ந்து போனாள்.

மறுநாள், சூரிய ஒளி ஜன்னல் வழியே வீட்டிற்குள் நுழைந்த பிறகுதான், சோம்பலுடன் கைகளை முறுக்கியவாறு எழுந்தாள் சௌந்தரியவதி.

'இன்னும் சற்று நேரம் ஓய்வு கொடேன்' என்று கெஞ்சியது உடம்பு.



தன் சொந்த வேலைகளையெல்லாம் முடித்த பிறகு, காலில் சலங்கையின்றி, கிட்டத்தட்ட இருபது நிமிடம் நாட்டியம் ஆடிய பிறகுதான், அவளுக்குப் புத்துணர்ச்சியாக இருந்தது.

கடந்த பத்து நாட்களாக அனுபவித்த மன அழுத்தமும், உடல் அலைச்சலும் தொலைதூரம் ஓடி விட்டதைப் போல உணர்ந்தாள்.

காலை வேளை உணவிற்காக தோசை ஊற்றி, அதன் மேல் சீவி வைத்திருந்த கேரட், பீன்ஸ்ஸை லேசாகத் தூவி, மேலே மூடி வைத்து, ஆவியிலே வேக விட்டு எடுத்தாள். தொட்டுக் கொள்ள புதினா சட்னியுடன், பருப்பு பொடி, நல்லெண்ணை தயார்.

சாப்பிடுவதற்கு தாத்தாவை அழைத்தபடி, வீட்டின் வலப்பக்கம் சென்றாள்.

மோட்டார் பம்ப் செட் அருகேயிருந்த சின்னத் தொட்டி மீது அமர்ந்து, எதைப் பற்றியோ ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தார் அவர்.

அவருடைய பார்வை சென்ற திசையைப் பார்த்தவளின் முகம், சட்டென்று வாடிப் போயிற்று.

அவள் ஆசையுடன் வளர்த்த மல்லிகைச் செடிகளையெல்லாம், கால்நடைகள் ஒடித்தும், மிதித்தும் வைத்திருந்ததோடு, மரம் முழுவதும், கிட்டத்தட்ட ஒன்றரை முழத்திற்குத் தொங்கிக் கொண்டிருந்த முருங்கைக் காய்கள், ஒன்றைக்கூடக் காணவில்லை.

என்ன அட்டூழியம்?

இந்தத் திருட்டு வேலைக்கு, ஒரு எல்லையே இல்லையா?

வீட்டில் யாருமில்லையென்றால், இப்படித்தான் அத்துமீறி உள்ளே வந்து நாசம் செய்வதா? என்று, ஆத்திரமாக வந்தது அவளுக்கு.

"முதலில் இதற்கு ஒரு வழி செய்தாக வேண்டும் தாத்தா!" என்று தீவிரமான குரலில் கூறினாள்.

"செய்து விடலாம் சௌமிம்மா. இப்படியே சும்மா விட்டுக் கொண்டிருந்தோம் என்றால், திருடுபவர்களின் கை ஓங்கி விடும். தயாபரன் கொடுத்த செக்கை, இன்றைக்கே கலெக்ஷனுக்குப் போட்டு விட்டு வா. இதற்கு மேலும் காம்பௌண்ட் சுவர் கட்டாமல் இருந்தால் சரி வராது" என்று முடிவாகக் கூறினார் வாசவன்.

அவளுக்கும் அதுவே சரியாகப் பட்டது.

இருவரும் சேர்ந்து காலை உணவை உண்டு முடித்து விட்டு, சுவர் கட்ட சுமாராக எவ்வளவு செலவாகு மென்று கணக்கிட்டார்கள்.

"என் கணக்கில், இருபத்து எட்டாயிரம் இருந்ததாக ஞாபகம் சௌமிம்மா. அதில், இருபதாயிரத்தை எடுத்து முன்பணமாகக் கட்டி, உனக்குப் பிடித்த மாதிரி ஸ்கூட்டி ஒன்றை வாங்கிக் கொள். வெளியே போய் வர வசதி யாக இருக்கும். மீதிப் பணத்தை மாதத் தவணையாகக் கட்டி விடலாம்" என்று சொன்னார் வாசவன்.



தேவையான ஆவணங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, நேராகப் பாங்கிற்குச் சென்றாள்.

அங்கே செய்ய வேண்டிய வேலைகளைச் செய்து முடித்து விட்டு, ஒரு ஆட்டோவைப் பிடித்து, 'டி.வி.எஸ். ஷோ ரூம்' போக வேண்டும் என்று கூறி அமர்ந்தாள்.

கல்லூரி வரையுமே சைக்கிளில் சென்று வந்த தால், ஸ்கூட்டி ஓட்டுவது ஒன்றும் பெரிய கஷ்டமில்லை தான்.

இருந்தாலுமே, ஓட்டும்போது எப்படியிருக்கும் என்று ஆர்வமாகவே இருந்தது.

கண்ணாடிக் கதவுகள் பளபளக்க, ஒய்யாரமாக நின்று கொண்டிருந்த பலவித வண்டிகளுக்கு மத்தியில், அவளுக்குப் பிடித்த 'பேபி பிங்க் கலர், ஸ்கூட்டி பெப் ப்ளஸ்' நின்று கொண்டிருந்தது.

இன்றைக்கெல்லாம் ஒரு வண்டி வாங்க வேண்டு மென்றால், அதற்குத் தேவையான அனைத்தையும், நிறுவனமே முன்நின்று செய்து கொடுப்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

'வாடிக்கையாளர் சேவை மையம்', வாடிக்கை யாளர்களை சிரமமின்றி கவனித்துக் கொள்வதோடு, அவர்களை மிகவும் மரியாதை மிக்கவர்களாக உணர வைப்பதைக் கண்டாள் சௌந்தரியவதி.

ஆர்.டி.ஓ. அலுவலக வேலைகளையும் கூட, நிறுவனமே முன்நின்று செய்து விட்டு, அன்றே அவளிடம் வண்டியையும் ஒப்படைத்து விட்டார்கள்.

அங்கேயே பெட்ரோல் போட்டு, 'டிரையல்' பார்த்த வர்கள், முதல் இரண்டு சுற்றுக்கு மட்டும் ஒரு பெண் டிரெய்னரை பின்சீட்டில் அமரச் சொன்னார்கள்.

ஒரு மணி நேரத்திற்குள் நெளிவு சுளிவுகளோடு ஸ்கூட்டியை ஓட்டப் பயின்று கொண்டாள் அவள்.

தனியாக ஓட்டிக் கொண்டு வந்தபோது, அப்படியே ஜிவ்வென்று வானத்தில் பறப்பது போலிருந்தது.

காலையில் சென்ற பெண், மாலை நான்கு மணியாகியும் திரும்பவில்லையே என்று, இரண்டு தெருவைக் கடந்து மெயின் ரோடு வரை நடந்து சென்று பார்த்தார் வாசவன்.

போனை ஸைலென்ஸில் போட்டு விட்டாள் போலும்! இல்லையென்றால் எடுக்காதிருக்க மாட்டாளே! என்று யோசித்தபடியே நின்றிருந்தவரின் பார்வையில், அழகாக ஸ்கூட்டி ஓட்டியவாறு வந்த பேத்தி பட்டாள்.

'சர்'ரென்று வந்து தாத்தாவின் முன்பாக நின்று, சந்தோஷப் புன்னகையுடன் ஸைடு ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியவள், அவரின் கைகளைப் பற்றிக் கொண்டு, "எப்படியிருக்கிறது தாத்தா?" என்றாள்.

பேத்தியின் முகத்திலிருந்த பரபரப்பான சந்தோஷம், அவரின் நினைவுகளை, பல ஆண்டுகளுக்குப் பின் னோக்கிச் செல்ல வைத்தது.



சௌந்தரிக்கு, ரொம்பச் சின்ன வயதில் வாங்கிக் கொடுத்த சைக்கிளுடன் சரி.

அதுவும் கூட, இந்த ஊருக்கு வரும் முன்பாகவே பழையதாகி உடைந்து போயிற்று.

பேத்தி கொஞ்சம் வளர்ந்த பிறகும் கூட, பெரிய சைக்கிள் வாங்கித் தர வாசவனுக்குப் பயமாகத்தான் இருந்தது.

அவரின் அழகான செல்லக் கண்ணம்மா, எங்கேயாவது விழுந்து அடிபட்டு விட்டால் என்னாவது என்ற பயம்!

ஆனால் சில நாட்களுக்குள்ளாகவே, ஒரே பெண் பிள்ளையை இப்படிப் பொத்திப் பொத்தி வளர்ப்பது சரியல்ல என்று தோன்றியது.

சௌந்தரி ஒன்பதாம் வகுப்பிற்குச் சென்றபோது, சர்ப்ரைஸாக, கறுப்பு நிற லேடீஸ் சைக்கிள் வாங்கிக் கொண்டு வந்தார் வாசவன்.

வாசலில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளைச் சுற்றிச் சுற்றி ஆர்ப்பரித்தவள், 'ரொம்ப தேங்க்ஸ் தாத்தா' என்று அவரின் கைகளைப் பற்றிக் கொண்டு, முகம் முழுக்கப் புன்னகையுடன் குதித்தாள்.

என்னவோ நேற்றுதான் நடந்தது போல, ஒன்று விடாமல் நினைவு வந்தது.

அதற்குள் நெடுநெடுவென வளர்ந்து, இன்றைக்கு எவ்வளவு அழகாக வண்டியை ஓட்டிக்கொண்டு வருகிறாள்.

"தாத்தா... நான் கேட்டு எவ்வளவு நேரமாகிறது?" என்று, பற்றியிருந்த கையை சலுகையுடன் குலுக்கினாள்.

பேத்தியின் சந்தோஷத்தைப் பூரிப்புடன் ரசித்தபடி, "பிரமாதம் சௌமிம்மா. இன்றைக்கே வண்டியுடன் வருவாய் என்று நினைக்கவில்லை. எனக்கு சர்ப்ரைஸ் கொடுக்கத்தான், போன் செய்த போது எடுக்காமல் இருந்தாயா?" என்று சிரிப்புடன் கேட்டார்.

செல்லக் கண் சிமிட்டலுடன், தலையாட்டினாள் சின்னவள்.

'கடவுளே! என் பேத்தி எப்போதும் இப்படி சந்தோஷமாக இருக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டு, ஸ்கூட்டியில் அமர்ந்தார் வாசவன்.

"நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள் தாத்தா" என்று கூறிவிட்டு, வீட்டை நோக்கி ஸ்கூட்டியை ஓட்டினாள் சௌந்தரியவதி.

## 5

மறுநாள் முதல், பள்ளி வேலைக்குச் செல்ல வேண்டும்.

நாள் முழுவதற்கும், தாத்தாவிற்குத் தேவையான அனைத்தையும் எடுத்து டேபிள் மேல் வைத்து விட்டு, 'உடம்பிற்கு ஏதாவது சின்ன அசௌகரியம் என்றாலும், உடனே எனக்கு போன் பண்ண வேண்டும்' என இருமுறை கூறியபிறகே வேலைக்குக் கிளம்பினாள்.



விடுமுறை எடுத்ததால், விட்டுப் போயிருந்த எல்லா வகுப்புகளையும் நடத்த வேண்டியிருந்தது.

அதனால், அடுத்து வந்த நான்கு நாட்களுக்கு, ஓய்வின்றி வகுப்பெடுத்தாள்.

தொடர்ந்து நாட்டிய வகுப்பெடுத்ததாலோ என்னவோ... ஓய்விற்காக அவள் கால்கள் கெஞ்சின.

அப்படிப்பட்ட நேரத்தில், பஸ்ஸில் இடிபட்டுக் கொண்டு ஏறி இறங்குவது இன்னமும் கஷ்டம்தான்.

ஆனால், அந்தக் கஷ்டமின்றி ஸ்கூட்டியில் வருவது, இதமாக இருந்தது.

நான்கு நாட்கள் கழித்து, தாத்தாவின் நண்பர் மூலமாக, கட்டிட வேலை செய்யும் மேஸ்திரி ஒருவர் வீட்டிற்கு வந்தார்.

வீட்டையும், அதைச் சுற்றியுள்ள இடத்தையும் சேர்த்து, ஆறு அடி உயரத்திற்கு மதில் சுவர் எழுப்பலாம் என்று முடிவு செய்யப்பட்டு, கட்டுமானப் பொருட்கள் வாங்குவதற்காக 'அட்வான்ஸ்' பணத்தைக் கொடுத்தார்கள்.

இரண்டு நாட்களுக்குள் மணல், செங்கல், சிமெண்ட் எல்லாம் வந்து சேர்ந்து விட, மீதிப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

அடுத்து வந்த நல்ல நாளில், பூமியைத் தோண்டி வேலையை ஆரம்பித்தார்கள் பணியாளர்கள்.

பணமிருந்தால், எந்த வேலையும் மடமடவென்று நடந்து விடுமோ?

பூமியைத் தேவையான அளவிற்கு ஆழமாகத் தோண்டி மண்ணை வெளியே எடுத்து விட்டு, அதிலே, உறுதியான அஸ்திவாரம் அமைத்த ஒரு வாரத்திற்குப் பிறகு, வேலை மிக வேகமாக நடந்தது.

ஊஞ்சலில் அமர்ந்து, வேலை நடப்பதைப் பார்வையிட்டபடி பொழுதைப் போக்கினார் வாசவன்.

அஸ்திவாரம், கருங்கல், அதன் மேல் செங்கல் என்று ஒவ்வொரு அடுக்கும், உறுதியாவதற்குத் தேவை யான அளவு அவகாசம் கொடுத்தே கட்டப்பட்டது.

வீட்டின் பின்பகுதி சுவரின் மேல் மட்டும், பாது காப்பிற்காக உடைந்த கண்ணாடித் துண்டுகள் பதிக்கப் பட்டது.

வீட்டின் நேர் எதிரே, பெரியதும், சின்னதுமாக இரண்டு 'கேட்' வைக்க இடம் விட்டிருந்தார்கள்.

ஒரு வாரம் பத்து நாட்களுக்கு சுவர் முழுவதற்கும், இரு வேளையும் 'ஹோஸ்' போட்டுத் தண்ணீர் விட்டார்கள்.

அப்படியொரு மாலை நேரத்தில் தான், மீண்டும் அவர்கள் வீட்டிற்கு வந்தான் தயாபரன்.

அவன் பார்வை, வீட்டைச் சுற்றியும் எழும்பி யிருந்த சுவரை, மெச்சுதலோடு நோக்கியது.



பறித்த வேப்பிலைக் கொத்துகளை, தண்ணீரில் அலசி எடுத்துக் கொண்டு திரும்பியவளின் பார்வையில் பட்டான் தயாபரன்.

அவளை நேராகச் சந்தித்தவன், "நான் வந்தது உனக்குப் பிடிக்காது என்பது தெரியும். ஆனால் எனக்கு வந்தாக வேண்டிய சூழ்நிலை. உன் தாத்தாவின் மருத்துவச் செலவிற்கான பில் எல்லாம் தேவைப் படுகிறது. நான் செக்காகக் கொடுத்ததால், கட்டாயம் செலவிற்கான பில் தேவையென்று ஆடிட்டர் தெரி வித்தார். அதையெல்லாம் கொடுத்தாயென்றால், நான் கிளம்பி விடுவேன்" என்று கூறினான்.

இவன் கேட்டு வந்திருப்பதைக் கொடுப்பது தான் சரியென்று தோன்றவும், "வந்து உட்காருங்கள். தாத்தா உள்ளேதான் இருக்கிறார். வரச் சொல்கிறேன்" என்று வேகமாக மொழிந்தவள், அதைவிட வேகமாக விரைந்து சென்றாள்.

உட்காரச் சொல்கிறாளா...! இவளா...! என்று வியப்பாகிப் போயிற்று அவனுக்கு.

வீட்டிற்குள் சென்றவள், தயாபரனின் வருகையைப் பற்றி தாத்தாவிடம் கூறிவிட்டு, சமையலறைக்குள் போனாள்.

சமையல் அறையில் இருந்தவளின் காதில், தயாபரனின் குரல் தெளிவாகவே கேட்டது.

"இது ரொம்ப நல்ல ஐடியா சார். சுற்றுச் சுவர் கட்டினாலே, இடத்தின் மதிப்பு மேலும் கூடிவிடும்.

அதைவிட முக்கியம், பாதுகாப்பாக இருக்கிறது என்ற உணர்வு" எனப் பாராட்டுவது போல் கூறியவன், தான் வந்த விஷயத்தையும் தெரிவித்தான்.

"சௌமிம்மா எல்லாவற்றையும் கவனமாக எடுத்து வைத்திருப்பாள் தயாபரன்" என்று வாசவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வெண்மை நிறக் கவருடன், டிரேயில் இரு கப் 'டீ'யையும் கொண்டு வந்து வைத்து விட்டு, "எடுத்துக் கொள்ளுங்கள்" என்றுரைத்தாள் சௌந்தரியவதி.

நடப்பதை நம்ப முடியாதவன் போல் பார்த்தவன், "தேங்க் யூ" என்று கூறி, டீயைப் பருகினான்.

அடுத்த சில நிமிடத்திற்கெல்லாம் தயாபரன் கிளம்பிவிட, "இதுதான் சௌமியின் இயல்பு. அன்று செய்த தவறு இப்போது சரியாகி விட்டது பார்" என்று புன்னகையுடன் கூறினார் வாசவன்.

மனதினுள் இருந்த சின்ன இறுக்கம் தளர்ந்து, அவளின் உதடுகளும் முறுவலித்தன.

சுவர் வேலை முழுவதும் முடிந்து, பச்சை வண்ணம் அடித்ததோடு, இரண்டு இரும்பு கேட்டும் போடப்பட்ட போது, உண்மையிலேயே வீட்டின் அழகும், மதிப்பும் கூடித்தான் தெரிந்தது.

மூன்று பெண் வேலையாட்களை அழைத்து வந்து, தோட்டத்தைக் கொத்திக் களையெடுத்துச் சுத்தம் செய்த பிறகு, இன்னமும் அழகானது.



சுத்தப்படுத்தப்பட்ட தோட்டத்திலே கொத்தமல்லி, புதினா, சிறுகீரை, புளிச்சக் கீரை, வெண்டை விதைகளை உரிய விதமாகப் பயிரிட்டாள் சௌந்தரியவதி.

மாலை நேரங்களில் தாத்தாவும், பேத்தியும் உரையாடியபடியே, பயிர்களுக்கு நீர் பாய்ச்சினார்கள்.

எந்தவித சேதாரமும் இன்றி, அழகிய பச்சை நிறத்தில், மண்ணை முட்டிக்கொண்டு வெளிவந்தன பயிர்ச் செடிகள்.

எவ்வளவோ நாட்களுக்கு முன்பாக, தாத்தா வாங்கி வந்து வைத்த எலுமிச்சை செடியை, மேய்ச்சலுக்கு வந்த கால்நடைகள் மிதித்து ஒடித்து விட்டுப் போய்விட, அந்தச் செடி வளராமல் அப்படியே கட்டையாக நின்று விட்டிருந்தது.

இப்போது எலுமிச்சைச் செடியைச் சுற்றியும், மக்கிப் போன இலை எருவைக் கொட்டிக் கிளறிவிட்டு நீர் பாய்ச்சவும், பொடிப் பொடியாகத் துளிர் விட்டு கண் சிமிட்டியது செடி.

காய்ந்து கொட்டும் இலைகளை, காலை மாலை நேரங்களில் கூட்டிப் பெருக்கியவள், சின்னதாக ஒரு குழியைத் தோண்டி அதிலே குப்பைகளைக் கொட்டி, அவ்வப்போது அதன் மேல் கொஞ்சம் மண்ணைக் கொட்டி, தண்ணீரும் ஊற்ற, அது விரைவாக மக்கி, இயற்கை உரமாகியது.

வேறு பழ வகை மரக்கன்றுகள் சிலதும், வாங்கி நட வேண்டும் என முடிவு செய்தவளுக்கு, பள்ளியில் இருந்த அதிகப்படியான வேலை காரணமாக, நேரமே கிடைக்காமல் போனது.

நாட்கள் விரைவாகக் கடந்து சென்று கொண் டிருந்த போது, அவர்களைக் காண, சுதர்சனம் - ராதை இருவரும் வாசவனின் வீட்டிற்கு வந்தார்கள்.

வாசவன் மருத்துவமனையில் இருந்த போதே, இரண்டு, மூன்று முறை வந்து பார்த்து, சௌந்தரிக்கு ஆறுதலும், தைரியமும் கூறிச் சென்றார்கள்.

பிறகு வாசவன் கண் விழித்து விட்டார் என்றதை அறிந்து, மீண்டும் வந்து பார்த்து விட்டுப் போனார்கள்.

"இப்படியெல்லாம் அசம்பாவிதமாக நடக்குமென்று, நாங்கள் நினைக்கவேயில்லை சௌந்தரிம்மா. கடைசி நிமிடம் வரை எங்களை நம்ப வைத்து ஏமாற்றி விட்டான் அவன். எங்களால் நீங்கள், இவ்வளவு கஷ்டப்படும்படி ஆகிவிட்டதே என்று..." மனதார வருந்தி, மன்னிப்புக் கேட்டார்கள்.

பாவம், பெற்ற மகனும், அவனுடைய புது உறவுகளும் செய்த தப்பிற்கு, இவர்களை நொந்து எந்தப் பயனுமில்லையே. நம்ப வைத்து ஏமாற்றியதில் இவர்களுக்குத் துளி அளவும் பங்கில்லை என்கிற போது, இவர்களிடம் முகம் திருப்புவதில் அவளுக்கு விருப்ப மில்லை.



எனினும்... யாரையும், எதற்காகவும், கட்டாயப் படுத்தக் கூடாது என்று தாத்தா சொல்லுவார்கள். அப்படிக் கட்டாயப்படுத்துவதால் மனதினுள் விலகிச் செல்லும் தன்மையும், சில நேரங்களில் வெறுப்பும் தான் உண்டாகுமாம்.

'நந்தன் தன் மனதிலிருப்பதை உங்களிடம் தெரிவித்த பிறகும், நீங்கள் என்னுடைய விஷயமாக முடிவெடுத்தது தவறுதானே ஆன்ட்டி. நந்தன் மீது மட்டுமே பிழை கூற முடியாதே!' என்றுரைத்தாள் சௌந் தரியவதி.

"நீ சொல்வது எங்களுக்குப் புரியாமல் இல்லை சௌமிம்மா. நந்தன் தேர்ந்தெடுத்த பெண் குணமுள்ள வளாக இருந்திருந்தால், நாங்கள் ஏன் மறுக்கப் போகிறோம்?

"தான் நினைப்பதெல்லாம், நடந்தே ஆக வேண்டு மென்று நினைக்கிற பணக்காரத் திமிர், அவளின் ரத்தத் திலேயே ஊறி விட்டிருக்கிறது. இவன் அதைக்கூடப் புரிந்து கொள்ள முடியாத நிலையிலிருக்கிறான்.

"அவளால் ரொம்பவே கஷ்டப்படப் போகிறான். அப்போது தெரியும், ஏன் வேண்டாமென்று மறுத்தோம் என்பது. போகட்டும்... அவர்களைப் பற்றிப் பேசி இனி என்ன ஆகப் போகிறது?" என்றவள் தொடர்ந்து,

"ஆனால் இந்த நந்தன் இப்படிச் செய்தது, ஒரு வகையில் நல்லதுதா.ன் சௌமி. அதுவும் உனக்கு

ரொம்பவே நல்லதுதாம்மா. என்ன அப்படிப் பார்க்கிறாய்? உண்மையாகத்தான் சொல்கிறேன். அந்தத் தாரிகாவை மணக்க இவ்வளவு தகிடுதத்தம் செய்தவன், உன்னை எப்படி மணப்பான்? அப்படியே மணந்திருந்தாலும், சந்தோஷமான வாழ்வென்பது கனவாகத்தான் இருந்திருக்கும்.

"பிறகு உன் வாழ்க்கை கேள்விக் குறியாகிப் போயிருக்குமே! அது, இப்போது நடந்ததை விடப் பெரும் துயரம். அப்படி நேர்ந்து விடாமல், கடவுள் காப்பாற்றியதாக நினைத்து ஆறுதல் அடைவோம்" என்றார்கள் நிம்மதியான குரலில்.

கடைசியாகக் கிளம்பிச் சென்றபோது, "நீங்கள் துளியும் வருத்தப்பட வேண்டாம் வாசவன் சார். உங்கள் பேத்திக்கு சந்தோஷமான... நல்ல வாழ்க்கையை கடவுள் அமைத்துத் தருவார். சௌந்தரியவதிக்கு அப்படியொரு நல்வாழ்வு அமைவது தான், எங்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும்.

"ஏனென்றால், சௌந்தரி எங்கள் வீட்டிற்கு மருமகளாக வரமுடியாமல் போய் விட்டிருந்தாலும், அவளை, நாங்கள் எங்கள் மகளாகத்தான் நினைக்கிறோம்" என்றார் சுதர்சனம்.

அதை ஆமோதிப்பது போல, சௌமியின் தலையை வாஞ்சையுடன் வருடிவிட்டாள் ராதை.

"உங்கள் இருவரின் அன்பையும் எண்ணும்போது, ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது" என்று ஆழ்ந்த குரலில் கூறினார் வாசவன்.



"இந்த மனநிலையிலேயே, தயவுசெய்து இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் சார்" என்று கூறி, இரண்டு ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டுகளை பையில் இருந்து எடுத்து... முன்பக்கமிருந்த வாசவனிடம் கொடுக்க முற்பட்டவாறே, "உங்களுக்கு மருத்துவச் செலவு அதிகளவிலே ஆகியிருக்கும். அதிலே பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதுதான் நியாயமென்று எங்களுக்குத் தோன்றியது.

"ப்ளீஸ்! தவறாக எண்ணாமல் வாங்கிக் கொள்ள வேண்டுகிறோம் சார்! அப்போதுதான் எங்களுக்குக் குற்ற உணர்விலிருந்து கொஞ்சமாவது விடுதலை கிடைக்கும்!" என்று தாழ்மையோடு கூறினார் சுதர்சனம்.

"இதற்கெல்லாம் அவசியமில்லை சுதர்சனம்! முதலில் இந்தப் பணத்தை நீ உள்ளே வை. வைப்பா என்கிறேன் இல்லையா?" என்றவர், "முதலில் ஒரு பெரிய தொகை செலவானது உண்மைதான். ஆனால் அந்தச் செலவு முழுவதையுமே தயாபரன் ஏற்றுக் கொண்டு விட்டார். அவர் தானப்பா உன் மகன் திருமணம் செய்திருக்கும் பெண்ணின் அண்ணன்!"

"உங்கள் கஷ்டத்தின் மூல காரணம் நான்தான் சார்! நீங்கள் அனுபவித்த உடல் வலியையும், மன வலியையும் என்னால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் நீங்கள் செலவு செய்ததை திருப்பிக் கொடுப்பது தான் நியாயம்!" என்று கூறி செக் ஒன்றைக் கொடுத்தார்.

"சௌமிக்கு அதில் சற்றும் உடன்பாடில்லை. ஆனால் எனக்கு தயாபரனின் பேச்சு சரியென்றே தோன்றியது. அதனால் அதை ஏற்றுக் கொண்டேன் சுதர்சனம்!

"இதிலே ஒரு விஷயத்தைக் கவனித்தாயா? அவர்களும் உங்களைப் போலவே இந்த விஷயத்தில் இதுதான் நியாயமென்று யோசித்திருக்கிறார்கள்! என்னவோ, எல்லோரையும் கடவுள் நல்லபடியாக வைத்திருக்கட்டும்!" என்று முழு மனதுடன் கூறினார் வாசவன்.

இந்தச் செய்தி சுதர்சனம் - ராதைக்குப் புதிதாயிற்றே!

புதியதோடு, வியப்பானதும் கூட.

பரவாயில்லை. தங்களுக்கு விருப்பமில்லாத திருமணத்தை முன்நின்று நடத்தியிருக்கும் அந்தத் தயாபரன்... வாசவன் சார் விஷயத்திலாவது நியாயமாக நடந்து கொண்டிருக்கிறானே?

அந்த மட்டிலும் திருப்தி அடைந்து கொள்ள வேண்டியதுதான்! என்று நினைத்தவர்கள்... மீண்டும் நேரம் கிடைக்கும்போது வருவதாகக் கூறி, விடை பெற்றுக் கொண்டு கிளம்பினார்கள்.

அன்று மாலையில் அரைமணி நேரம் பர்மிஷன் பெற்று, பள்ளியிலிருந்து கிளம்பி நேராக தோட்டக் கலைத் துறை அலுவலகத்திற்குச் சென்றாள் சௌந்தரியவதி.



அவள் தேடி வந்த இருவகை மரக் கன்றுகளும் அங்கே இருந்தன. சின்ன மண் தொட்டியிலிருந்த மா, சப்போட்டா செடிகளை வாங்கிக் கொண்டு திரும்பிய போதுதான், அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

லேசாக இருள் படரத் தொடங்கி விட்டதே என்று, கிளை வழிப் பாதையில் வண்டியைத் திருப்பிக் கொண்டு விரைந்தவளுக்கு... தன் கண்களையே நம்ப முடியவில்லை.

ஏனெனில், அவளை நோக்கி வேகமாக நடந்து வந்து வண்டியை நிறுத்தும்படி சைகையோடு கையை ஆட்டியவன் நந்தன்!

## 6

நந்தன்!

பெயரை முணுமுணுத்த போதே, அவளுக்குள் கோபம் தோன்றிவிட்டது எனலாம்.

இந்த மனிதன் எப்போது சென்னைக்கு வந்தான்?

அதுவும் திடீரென்று அல்லவா அவள் கண் முன்னே வந்து நிற்கிறான்.

எங்கிருந்து வந்திருக்கக் கூடுமென்ற சுற்றியும் பார்த்தபோது... சற்றே தொலைவில் இருந்த சின்னப் பூங்கா தென்பட்டது.

அங்கிருந்துதான் வந்திருக்க வேண்டும்.

எதிர்பாராமல் பார்த்ததில் கொஞ்சம் திகைத்திருந்த போதும்... என்னவோ ஒன்றுமே நடக்காத மாதிரி... என்ன சாதாரணமாக முன்னால் வந்து நிற்கிறான்.

எவ்வளவு நெஞ்சழுத்தம்!

தப்பு செய்தவனே தலை நிமிர்ந்து வரும்போது, அவள் ஏன் திகைக்க வேண்டும்?

நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி, நாலு கேள்வியாவது நறுக்கென்று தைக்கிற விதமாகக் கேட்க வேண்டாமா?

தமிழில் என்ன வார்த்தைகளுக்கா பஞ்சம்?

இந்த எண்ணம் தோன்றிய உடனே... வண்டியை நிறுத்திவிட்டு, இறங்கி நிமிர்ந்து நின்றாள் சௌந்தரியவதி.

நிமிர்ந்து நின்றவளின் முகம், அந்த மாலை மங்கிய வேளையிலும்... சினத்தால் சிவப்பதைக் கண்டு, நந்தனின் பார்வை கூர்மையானது.

பிறகு ஒரு பெருமூச்சை வெளியிட்டவன், அவள் பார்வையை நேராகச் சந்தித்து, "உன்னிடம் சற்று நேரம் பேச வேண்டும் சௌந்தரியவதி... ப்ளீஸ்!" என்று அமைதியான குரலில் கேட்டான்.

எவ்வளவு பெரிய விஷயத்தைச் செய்து விட்டு... என்ன இயல்பாகக் கேட்கிறான்?

'மலை விழுங்கி மகாதேவன்!' என்பார்களே... அது இவனைப் போன்றவர்களைத் தானோ!



இந்த அமைதியான குரலில் இருந்து, பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்றால் எப்படி?

எனவே... "முதலில் நீங்கள் யார் சார்? என்னிடம் பேசுவதற்கு உங்களுக்கு என்ன விஷயமிருக்கிறது?" என்று அதே அமைதியான குரலில் திருப்பிக் கேட்டாள்.

முகத்தில் அடித்தாற் போன்ற பதிலில்... அவனுடைய முகம் கன்றிப் போனது.

பலத்த அமைதியோடு கடந்த சில கணங்களுக்குப் பிறகு... நிமிர்ந்தவனின் பார்வையில் ஒருவித நிதானம் இருந்தது.

எதிரே இருப்பவர்களை ஒரு முறையேனும் யோசிக்க வைக்கிற நிதானம்!

"உன் கோபமும், அதனால் வெளிப்படுகின்ற வார்த்தைகளும் நியாயமானதே. என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அதுவும், உன் தாத்தா மறுஜென்மம் எடுத்து வந்திருக்கிற அளவிற்குக் கஷ்டப்பட்டதை நேரில் பார்த்த நீ... இந்தளவிற்கு அமைதியாக என்னிடம் பேசுவதே வியப்புதான்!" என்றவனை வெறித்து நோக்கி...

"அப்படியென்றால்... இங்கே நடந்த எல்லா விஷயமுமே உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. எப்படி? தயாபரன் மூலமாகவா?

"ஆமாம். எங்களை வேதனைப்படுத்த நீங்கள் யார் சார்? உங்களுக்கும் உங்களைச் சார்ந்தவர்களுக்கும் அந்த அதிகாரத்தை யார் கொடுத்தது?" என்று ஆத்திரமுடன் சூடாகக் கேட்டாள்.

"பின்விளைவுகள் இந்தளவிற்கு இருக்கக் கூடுமென்று எண்ணவில்லை சௌந்தரியவதி! வெறும் நிச்சயதார்த்தம் தானே நிற்கப் போகிறது... அதற்குப் பெரிதாக முக்கியத்துவம் கொடுக்க மாட்டீர்கள் என்று சாதாரணமாக நினைத்து விட்டோம். தயவு செய்து மன்னித்து விடுங்கள்!" என்று வருத்தமான குரலில் கூறினான்.

"நீங்கள் சாதாரணமென்று நினைத்துச் செய்கிற விஷயத்தினால்... மற்றவர்கள் பாதிப்பில்லாமல் இருக்க வேண்டும் நந்தன்! இல்லையெனற்றால் அது பெரும் பாவத்திற்கு ஈடான விஷயம்தான்!

"எனக்கென்று இருக்கும் ஒரே ஒரு இரத்த உறவு, என் தாத்தா மட்டும் தான். அவரையும் இழந்து விடுவேனோ என்று நான் அனுபவித்த மனவேதனையை... உங்களைப் போன்றவர்களால் எல்லாம் சுலபத்தில் உணர முடியாது. இனியாவது, உங்களால் யாரும் வேதனைப்படாதவாறு நடந்து கொள்ளுங்கள்!" என்றாள் பழைய குரலிலேயே.

ஒருமுறை கண்களை அழுந்த மூடித் திறந்து, "சக மனிதரின் வேதனையை உணர முடியாத அளவிற்கு... எங்கள் மனது கல் அல்ல சௌந்தரியவதி! இதை உண்மையாகவே நீ உணருகின்ற நாள் ஒன்றும் வரும். எங்களால் முக்கியமாக என்னால் நீங்கள் அனுபவித்த கஷ்டத்திற்காக... மனதார மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!" என்று கூறி, சற்றும் தயங்காமல் சாலை



யென்றும் பாராமல்... தன் இரு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டான் நந்தன்.

அவன் குரலின் உணர்வும், கண்களின் பிரதி பலிப்பும் அவளை நிதானிக்கச் செய்ததோடு யோசிக்கவும் வைத்தது.

இந்த மாதிரியொரு சம்பவம்... இதுவரை அவள் வாழ்வில் நடந்ததில்லை.

கடந்த சில பல வாரங்களாக... என்னென்னவோ நடந்து விட்டிருந்த போதும்... இது முற்றிலும் வேறாகத் தெரிந்தது.

ஒரு மனிதன், தன் சுய கௌரவத்தை ஒதுக்கி வைத்து விட்டு... இப்படித் தெருவில் நின்று கும்பிட்டுக் கேட்பதென்பது, சாதாரணமான விஷயமல்ல.

அதற்கென்று பக்குவப்பட்ட மனது வேண்டும். நியாய, அநியாயம் பற்றி ஆழமாக யோசிக்கத் தெரிந்தவனாயிருக்கவும் வேண்டும்.

ஆனால் இப்படிப்பட்டவன், ஏன் அவள் விஷயத்தில் அப்படி நடந்து கொண்டான்?

'பின்விளைவுகள் இந்தளவிற்கு இருக்கக் கூடுமென்று எண்ணவில்லை!' என்றானே... ஒருவேளை அப்படித்தானோ? உடன் இருந்தவர்களின் அப்போதைய உபதேசத்தை ஏற்றுத்தான் அப்படி நடந்து கொண்டு விட்டானோ?

அப்படியும் இருக்கலாம்!

அதுவுமில்லாமல்... நந்தனுக்கு அந்தப் பெண் தா... தாரிகாவின் மீது அதீத காதலாயிருக்க வேண்டும்.

எங்கே அவளை இழந்துவிடப் போகிறோமோ என்ற எண்ணமே கூட, பல விஷயங்களையும்... அவை எவ்வளவு முக்கியமானதாக இருந்திருந்தாலும்... அவற்றைப் பின்னுக்குத் தள்ளியிருக்கலாம்!

மேலும், 'என் தங்கையின் மகிழ்ச்சியான வாழ்வு தான் எனக்கு முக்கியம்!' என்று அப்படியொரு சூழ்நிலையிலும் உறுதியாகக் கூறிய தயாபரன், தங்கையின் கழுத்திலே தாலி ஏறுகிற வரை நந்தனை விட்டிருக்க மாட்டான்.

தன்னுடைய பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி, எல்லாவற்றையும் முன்நின்று நடத்தியிருக்கிறான் என்றால், அந்த தயாபரனுக்கும் தான்... தங்கையின் மீது எவ்வளவு அன்பிருக்க வேண்டும்?

நினைத்ததை நிறைவேற்றித் தருகின்ற அண்ணன் இருக்கும்போது, தாரிகா தன் காதலனை கணவனாக்கிக் கொண்டதிலே வியப்பில்லைதான்!

நடந்து முடிந்த ஒரு விஷயத்தில் மூன்று பேருக்குப் பங்கிருந்த போதும், நந்தன் கொஞ்சம் வேறு விதமோ என்று இப்போது தோன்றியது அவளுக்கு!

ஏனெனில், 'நந்தன் கேட்டுக் கொண்டதின் பேரில் வந்ததாகத்தானே...' முதல் தடவையாக வந்த போது தயாபரன் கூறினான்.



கொண்டு வந்த தகவலினால், விபரீத விளைவு உண்டான போதும், உரிய நேரத்தில் தகவலைத் தெரிவிக்கச் செய்துவிட வேண்டும் என்கிற வரை நந்தன் யோசித்திருக்கிறான் என்பது உண்மைதானே!

நந்தனின் பெற்றோர் கூட, மகனின் திருமண விஷயத்தைக் கேட்டதும்... அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல்... அதிர்ந்து உறைந்து போய் ஃபோனை சுவிட்ச் ஆஃப் செய்து விட்டு... பிறகு ஓரளவாவது திடப்படுத்திக் கொண்டு தானே ஆன் செய்ததாக ஆன்ட்டி கூறினார்கள்.

வருத்தமும், குற்ற உணர்ச்சியுமாகப் பேசியவர்களை, அவள் தான் சமாதானப்படுத்தினாள் என்றாலுமே... ஏதோ ஒருவித உறுத்தல் மட்டும் மனதினுள் குடைந்து கொண்டு தானே இருந்தது.

விஷயம் எவ்வளவு கடினமானதாக இருந்திருந்தாலும், ஆன்ட்டியும் அங்கிளும் வீட்டிற்கு வந்து தெரிவித்திருந்தால்... கொஞ்சமாவது பரவாயில்லாமல் இருந்திருக்குமே என்று தோன்றியது, நினைவிற்கு வந்தது. போகட்டும். அவர்களும் கொஞ்சம் வயதானவர்கள் என்பதால், விஷயத்தைப் பெரிதாக நினைக்காமல் விட்டுவிட முடியும்.

அதே சமயம், நந்தன் மீதான கோபத்தைத் தொடர்வதும், இனி சரியில்லை என்றே தோன்றியது.

அவரவரின் திருமணம் அவரவரின் சொந்த விஷயம்!

அதில் அடுத்தவரின் கட்டாயமோ... குறுக்கீடோ இருக்கக் கூடாது. அப்படி இருக்கும் பட்சத்தில், அதை எதிர்த்துக் கொண்டு செல்வது இயல்புதானே!

சற்றும் தேவையில்லாமல், உன்னால் நாங்கள் பாதிக்கப்பட்டோமே என்பதுதான்... அவளை இவ்வளவு தூரத்திற்குப் பேச வைத்தது.

ஆனால் நந்தன் கைக்கூப்பி மன்னிப்பு வேண் டியதும்... அவளுக்கு என்னவோ ஒரு மாதிரியாகிப் போயிற்று.

நமக்குப் பிடிக்காத விஷயம் நடந்தால், அதையே நினைத்து நினைத்து... மனதோடு உடலையும் கஷ்டப் படுத்திக் கொள்வது முழு முட்டாள்தனம்.

அதைச் செய்வதால் ஒரு பிரயோஜனமும் இல்லை.

விஷயத்தை அடியோடு ஒதுக்கி வைத்து விட்டு, வேலையில் நாட்டத்தை உண்டாக்கிக் கொள்வது மட்டுமே நல்லது, என்பதுதான் அவளுக்கு.

எனவே, அதற்கு மேல் வார்த்தைகளைக் கொட்டாமல், எதிரே இருந்தவனை நேருக்கு நேராக நோக்கியவளின் முகம்... மெல்ல இயல்பிற்குத் திரும் பியது.

"நடந்து முடிந்தவற்றைப் பற்றி... இனி எப்போதும் பேச வேண்டாம், நந்தன்! இங்கேயே, இந்த நிமிடத் தோடு விட்டு விடலாம். அதுதான் எல்லோருக்குமே



நல்லதென்று தோன்றுகிறது. இப்போது, உங்கள் மீது எனக்கு எந்தவிதமான கோபமும் இல்லை. உண்மை யாகத்தான் சொல்கிறேன்.

"குற்ற உணர்ச்சி ஏதாவது இருந்தால், அதை யெல்லாம் ஒதுக்கித் தள்ளி விடுங்கள். உங்களின் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்!" என்று நிதானமாகப் பேசினாள் சௌந்தரியவதி.

"தேங்க் காட்!" என்று இழுத்துப் பிடித்திருந்த மூச்சை நிம்மதியாக விட்ட நந்தன்... "ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ் சௌந்தரி! நீங்கள் இவ்வளவு விரைவாக என் நிலைமையைப் புரிந்து கொண்டு மனம் மாறி மன்னித்து விடுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. நிம்மதி யாக மூச்சு விடுவது, எவ்வளவு சந்தோஷமான விஷய மென்பது இப்போதுதான் முழுமையாகப் புரிகிறது!" என்றவனின் முகம் தெளிந்திருந்தது.

"நேரமாகிறது நந்தன்! நான் கிளம்புகிறேன்..." என்று சிறு முறுவலுடன் கூறிவிட்டு, தன் வண்டியைக் கிளப்பிக் கொண்டு விரைந்தாள் அவள்.

உற்சாக நடையுடன் நந்தன் திரும்பிச் செல்வது... கண்ணாடியில் தெரிந்தது.

மனிதர்களின் மனம் தான் எவ்வளவு விரைவாக மாறிக் கொண்டே போகிறது!

நந்தனைக் கண்டதுமே தோன்றிய கடுங் கோபம், இப்போது நிச்சயமாக அவளிடமில்லை.

ஏனோ அவளின் சிறு முறுவல், முழுப் புன்னகை யாகி, முகம் முழுவதற்கும் பரவியது.

அந்தப் புன்னகை அடியோடு காணாமல் போகும் விதமாக... மறு திருப்பத்திலேயே சடர்ன் பிரேக் போட்டபடி வந்து நின்றது, அந்த நீளமான கார்.

காரிலிருந்து இறங்கி, கதவை அறைந்து சாத்தியவன், தயாபரன்!

இப்படி நடக்கக் கூடுமென்று சற்றும் எதிர்பார்க்க வில்லை என்றாலும், தானும் சட்டென்று சுதாரித்து... வண்டியை நிறுத்தியவளின் முகம் முழுவதற்கும் சினச் சிவப்புப் படர்ந்திருந்தது.

முட்டாள்! இப்படியா இடித்துத் தள்ளுவது போல வண்டியைக் கொண்டு வந்து நிறுத்துவது என்று உறுத்து விழித்த போதுதான்... அவனும் கூட, அவளை அதே மாதிரி தான் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பது தெரிந்தது.

என்ன அநியாயம் இது? என சுறுசுறுவென்று தோன்றியபோது, "நந்தனிடம் வெறும் ஐந்து நிமிடம் பேசியதினாலேயே உன் முகம் அவ்வளவு பிரகாசிக்கிற தென்றால்... அது நல்லதற்கல்ல சௌந்தரியவதி!

"ஏனென்று காரணம் தெரியவில்லை என்றாலும், உன்னிடம் இப்படிப் பேச வேண்டியிருப்பதை நினைத்து எனக்கும் வருத்தமாயிருக்கிறது தான்.



"அதற்காகப் பேச வேண்டியதை இடையில் விட்டுவிட முடியாது. லுக் சௌந்தரி! முன்பு உன் மனதில் நந்தனைப் பற்றி என்ன நினைத்திருந்தாய் என்பது தெரியாது. ஆனால் இனி, எதுவும் நினைக் காதிருப்பது தான் எல்லோருக்கும் நல்லது.

"முக்கியமாக உனக்கு நான் சொன்னது புரிந் திருக்குமென்று நினை!" என்றவனை...

"போதும் தயாபரன்!" என்று கூறியதோடு, ஒரு கையையும் உயர்த்திக் காட்டி இடையிட்டு நிறுத்தியவள், "நான் என்ன நினைக்க வேண்டும்... வேண்டாம் என்பது பற்றி நீங்கள் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் எனக்கில்லை.

"என் நலனைப் பற்றி சொல்வதை விட்டு விட்டு, இப்படி விஷயம் என்னவென்றே தெரியாமல் உளறிக் கொட்டுகிறீர்கள் பாருங்கள். இதை முதலில் நிறுத் துங்கள். அது தான் உங்களுக்கு நல்லது!" என்று சூடாகத் திருப்பிக் கொடுத்தவள்... அவன் முகம் மேலும் இறுகுவதை லட்சியமே செய்யாமல் விரைந்து கிளம்பி விட்டாள்.

இப்படியெல்லாம் பேசுவதற்கு... அவனுக்கு எவ்வளவு திமிர் இருக்க வேண்டும்?

அவனுக்கு அவன் தங்கை உயர்வென்றால்... அதை அவனோடு தான் வைத்துக் கொள்ள வேண்டும்!

தன்னை இழித்துரைத்துப் பேசுவதற்கு இவன் யார்?

நடந்து முடிந்ததையே பேசுவதால் யாருக்கு என்ன பிரயோஜனம் என்று நினைத்து... கொஞ்சம் இறங்கி வந்தால், அவளையே குற்றம் சாட்டிப் பேசி விட்டானே...!

தான் இதுவரை பார்த்திராத அந்த தாரிகாவிற்காக... அவள் அண்ணன் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்.

ஆனால் அது சௌந்தரியின் மரியாதையைப் பாதித்தால்... அந்த தயாபரன் ரொம்பவே வாங்கிக் கட்டிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கும்!

இன்னும் நன்றாக உறைக்கிற மாதிரி ஏதேனும் சொல்லியிருக்க வேண்டும். உடனே கிளம்பியிருக்கக் கூடாது... என்று தனக்குத் தானே முணுமுணுத்துக் கொண்டு வீட்டை அடைந்தபோது, நன்றாகவே இருட்டி விட்டிருந்தது.

லைட்டைப் போட்டு விட்டு... அவளுக்காக வராண்டாவிலேயே காத்துக் கொண்டிருந்தார் வாசவன்.

இப்படிக் கடுகடுவென்ற முகத்துடன் சென்றால், தாத்தா என்னவென்று கட்டாயம் விசாரிப்பார் என்பது சமயத்தில் நினைவு வர... முகபாவனையைச் சட்டென்று சரிசெய்தாள்.

"என்னடாம்மா! இன்றைக்கு வெளிவேலை ஏதாவது இருந்ததா? முகம் ஒரு மாதிரியாக இருக்கிறது? சரி. முதலில் இந்த டீயைக் குடி!" என்று கூறியவாறே, அருகே இருந்த ஃப்ளாஸ்க்கை எடுத்து டீயை ஊற்றினார்.



அந்த இடைவெளியில், தோட்டத்துப் பைப்பில் நீர் பிடித்து, முகத்தைக் கழுவிக் கொண்டு திரும்பினாள் சௌமி.

"உங்களுக்கு எதற்கு வீண் சிரமம் தாத்தா! நான் வந்து டீ போட்டிருப்பேனே!" என்றவளிடம்...

"காலையிலிருந்து இரவு வரை நீ எத்தனை செய்கிறாய்? வெறும் பத்து நிமிஷத்து வேலை. இதில் என்னடா சிரமம்?" என இயல்பாக மொழிந்தவரிடம்... மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு... இரவு உணவு வேலைகளைச் செய்யச் சென்றாள்.

இயந்திரம் போல கைகள் வேலைகளைச் செய்ய... மனது மட்டும் அமைதியின்றி கொதித்துக் கொண்டே தான் இருந்தது.

அதை வெளிக்காட்டாமல் நடமாடுவது இன்னமும் சிரமமானதே!

அவளின் நல்ல நேரமோ என்னவோ? வாசவனுக்குப் பேத்தியின் முகத்தில், பெரிதாக எவ்வித மாறுதலும் தென்படவில்லை போலும். இல்லையென்றால், உணவிற்குப் பின்னர் நடக்கும் வழக்கமான சிறு உரையாடல் முடிந்ததும்... எப்போதும் போல் உறங்கச் சென்றிருக்க மாட்டார்.

விளக்குகளை அணைத்து விட்டு, கண்களை இறுக மூடிக் கொண்டு படுத்த போதும்... சௌந்தரியவதியின் அறைப்பக்கம் கூட நித்திராதேவி வருவதாயில்லை.

அப்படியும், இப்படியுமாக திரும்பித் திரும்பிப் படுத்தவள்... ஒருவாறு விடியற்காலையில் தான் கண் அயர்ந்தாள்.

மறுநாள் நடக்கப் போகின்ற விஷயங்கள் பற்றி அவளுக்குத் தெரிந்திருந்தால், அந்த விடியற்காலை உறக்கம் கூட வந்திருக்காது என்பது மட்டும் திண்ணம்!

## 7

மறுநாள், மதியவேளையை நெருங்கிக் கொண்டிருந்தது நேரம்.

அப்போது, அவளின் செல்ஃபோன் ஒலி எழுப்பவும், உணவு இடைவேளைக்கு மணி அடிக்கவும் சரியாக இருக்கவே... யாரென்று பார்த்தவளின் புருவம் நெறிந்தது.

அழைப்பு நந்தனிடமிருந்து!

நேற்றைய பின்பாதி சம்பவத்தின் நினைவில், செல்லை ஆன் பண்ணவே தயக்கமாக இருந்தது, சௌந்தரியவதிக்கு.

பேசாமல் ஆன் பண்ணாமல் விட்டு விட்டால் என்ன? என்ற யோசனையோடு இடையிட்டு நிறுத்துவது போல... இரண்டாவது முறையாகவும் நீளமாக ஓசையெழுப்பியது செல்.

இதற்கு மேலும் எப்படி எடுக்காமல் இருப்பது?

"ஹலோ!" என்ற அவளின் குரலைக் கேட்டதும்...



"தொந்தரவிற்கு மன்னித்து விடுங்கள் சௌந்தரி! வேறு வழியின்றிதான் அழைக்க வேண்டியதாயிற்று. உங்களால் ஒரு உதவி தேவைப்படுகிறது. சிரமம் பாராமல், உங்கள் பள்ளிக்கு அருகே இருக்கிற காஃபி டே ஷாப்பிற்கு வர முடியுமா? ப்ளீஸ்!" என்று கேட்டான் நந்தன்.

உதவி தேவைப்படுகிறது என்று வாய் விட்டுக் கேட்ட பிறகு, 'வர இயலாது' என்று கூறுவதற்கு, அவளால் முடியவில்லை.

'அது நாகரீகமல்லவே!' என்றே தோன்றியது. வேண்டாமென்று தடுக்க முயன்ற உள்ளுணர்வையும் மீறிப் போகத்தான் செய்தாள்.

நந்தன் கூறிய இடத்தை அடைந்தவள்... அங்கே அவன் தலையைப் பிடித்தவாறு, ஒருவித வெறித்த பார்வையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு, விஷயம் ஏதேனும் பெரியதாயிருக்குமோ என்று தோன்றியது.

அருகே சென்று "நந்தன்!" என்று குரல் கொடுக்கும் வரையுமே, அதே வெறித்தப் பார்வையுடன் தான் இருந்தான்.

திடுக்கிட்டாற் போல் தலையை உலுக்கிக் கொண்டு, "ஸாரி சௌந்தரி! நான் உங்களைக் கவனிக்கவில்லை!" என்றவன்... ஆர்டர் செய்திருந்த காஃபி வரவும், அவள் பக்கமாக ஒரு கப்பை எடுத்து வைத்து விட்டு... தான் ஒன்றை எடுத்துப் பருகினாள்.

இந்த நேரத்தில், சூடாகப் பானம் அருந்துகிற பழக்கமில்லையென்றாலும், மரியாதைக்காக கொஞ்சம் குடித்துவிட்டு... நந்தனைப் பார்த்தாள்.

இப்போது அவன் முகம் சற்றுத் தெளிந்திருந்தது. அது சரிதான் என்பது போல... பருகிய காஃபி கப்பை ஓரமாக நகர்த்தி வைத்து விட்டுத் திரும்பியவன்... நிதானமாக மூச்சிழுத்துவிட்ட பிறகு... அவளிடம் பேச ஆரம்பித்தான்.

"இன்று காலையில் என் பெற்றோரைச் சந்திக்கச் சென்றிருந்தேன் சௌந்தரி! கோபத்தில் திட்டுவார்கள், ஆத்திரப்படுவார்கள் என்று நினைத்திருந்ததற்கு முற்றிலும் மாறாக, அவர்களின் நிதானமான அணுகுமுறையும், அமைதியான பேச்சையும் நினைத்தால்... என்னை ஒரேயடியாக வெறுத்து ஒதுக்கி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது.

"எல்லாம் சரியாகி விடுமென்று இப்போது நினைக்க முடியவில்லை!" என்றான், நெற்றியை நீவியவாறு.

"நீங்கள் இந்த அளவிற்குச் சொல்கிறீர்கள் என்றால்... அப்படி என்னதான் நடந்தது, நந்தன்?" என்று கேட்டாள் அவள்.

"அவர்களுக்கு இப்போதெல்லாம் கோவையில் இருக்கவே விருப்பமில்லையாம். காரணம், நான் அங்கே இருப்பதாலாம். கேட்கும்போது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?



"ஆத்திரப்பட்டுப் பேசுவதைக் காட்டிலும்... அழுத்தமான அமைதியுடன் பேசுவது தான் பெரிய விஷயம். அதைத்தான் செய்தார்கள். கோவையில் உள்ள வீட்டையும், டிபார்ட்மெண்ட் ஸ்டோரையும் விற்று விட்டு, சென்னைக்கு வந்து விடலாம் என்று முடிவு செய்திருக்கிறார்களாம்.

"என் அம்மாவின் விருப்பமான உலகம், எங்கள் வீடுதான். அதே மாதிரிதான் அப்பாவிற்கு டிபார்ட்மெண்ட் ஸ்டோர். தொடர்ந்தாற் போல அரைமணி நேரம், அவர் ஒரே இடத்தில் அமர்ந்து நான் பார்த்ததில்லை. ஸ்டோர் முழுவதையும் சுற்றிக் கொண்டேயிருப்பார்.

"சிறிய அளவிலே ஆரம்பித்து, ஓரளவிற்குப் பெரியதாகவே வளர்த்ததில், அப்பாவிற்கு எப்போதும் பெருமிதம் உண்டு.

"வீடும் ஸ்டோரும் அருகருகே இருந்தாலுமே கூட, அம்மா எப்போதாவது தான் வருவார்கள். அப்படி வரும் சமயத்தில், அப்பாவின் முகத்தைப் பார்த்தால்... பத்துப் பதினைந்து வயது குறைந்து விட்ட மாதிரி, அவ்வளவு உற்சாகமாகத் தெரிவார்.

"அம்மாவுடன் சேர்ந்து நடந்தபடியே, புதிதாக ஏதாவது மாற்றம் செய்திருந்தால் அதைக் காட்டுவார். 'இதை இன்னும் இப்படிச் செய்யலாமா?' என்று அம்மா சொன்னாலே போதும். அதை அப்படியே செய்து முடிப்பார்.

"ஆட்கள் இல்லாத இடங்களில் எல்லாம்... ஒருவரின் கை, இன்னொருவரின் கையைப் பற்றியபடி தான் இருக்கும். ஓரிரு தடவையேனும், ரதிம்மாவும் நந்துப்பாவும் அழைக்கப்பட்டிருக்கும்!

"அப்போதெல்லாம் எனக்குத் தோன்றியதுண்டு, இந்த அப்பா என்ன, 'கோடு கிழித்துத் தாண்டாதீர்கள்!' என்று அம்மா சொன்னால், அதை அப்படியே செய்வார் போலிருக்கிறதே என்று. ஆனால் பிறகுதான் புரிந்தது. அப்படிச் சொல்லுபவர் மனதிற்குப் பிடித்தவராக இருக்கும் பட்சத்தில், அப்படி நிற்பது ரொம்பவே சந்தோஷமான விஷயம் என்பது..." என்றான் சட்டென்று நெகிழ்ந்த குரலில்.

சொந்த அனுபவம் பேசுகிறது போலும். இல்லையென்றால், இப்படியொரு சூழ்நிலையிலும் கூட... குரல் இந்தளவிற்கு நெகிழ வாய்ப்பில்லை.

எதிரே இருந்தவளின் கிண்டலான பார்வை, அவனை எங்கிருந்தோ நிகழ்கால விஷயத்திற்கு இழுத்து வர...

"இது மாதிரியான சந்தோஷங்கள் நிறைந்தது தான்... எங்கள் குடும்பம், சௌந்தரி! இப்படியொரு குடும்ப அமைப்பிலிருந்து நான் ஒதுக்கப்படுவதை... என்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும், சொல்லுங்கள்!

"அவர்களுக்கு விருப்பமில்லாத திருமணத்தைச் செய்தேன் என்பதற்காக... இவ்வளவு பெரிய தண்டனை கொடுப்பது, நியாயமே இல்லை என்பது தான் எனக்கு.



"அத்துடன், இதனால் அவர்களும் கூட சந்தோஷமாக இருக்கப் போவதில்லை. கோவை வாழ்வை அவர்கள் எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பது, இப்போது உங்களுக்கே புரிந்திருக்கும்.

"என்னால் அவர்கள், அதை ஏன் இழக்க வேண்டும்? முடிந்த வரை விரைவாக அலுவலகத்தில் தெரிவித்து, வேறு கிளைக்குச் செல்ல ஏற்பாடு செய்கிறேன். அது வரை அவர்கள் அவசரப்பட்டு முடிவெடுத்து விடாதபடி, நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும், சௌந்தரி!"

"நானா! என்னால் எப்படி முடியும்?"

"இப்போதைக்கு உங்களால் மட்டும் தான் முடியும். ஏனெனில் என் பெற்றோர், இப்போது உங்களைத்தான் மகளாக நினைக்கிறார்களாம். அப்படி நினைக்கும் போதுதான், கொஞ்சமாவது மனதிற்கு ஆறுதலாக இருக்கிறதாம்.

"உங்களைப் போல ஒரு பெண்ணைத் திருமணம் செய்யாமல் ஏமாற்றினேன் என்பது தான் பெருங் கோபம். அதனால்... இது பற்றி நீங்கள் பேசினால் நிச்சயம் காது கொடுத்துக் கேட்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

"உங்களிடம் உதவி கேட்கிற தகுதியோ, உறவு முறையோ இல்லை என்பது, நன்றாகவே தெரியும். இருந்தாலும் எனக்கு வேறு வழியில்லை சௌந்தரி... ப்ளீஸ்!" என்று கேட்டவனின் குரல், லேசாக கரகரப்பதைப் போல் தோன்றியது. எனவே...

"நீங்கள் கேட்டிருப்பது சாதாரண உதவி தான் நந்தன்! அதற்கு எதற்குப் பெரிய பெரிய வார்த்தைகள் எல்லாம் சொல்கிறீர்கள்? ஒரு அன்பான குடும்பம் பிரிவதில் எனக்கும் விருப்பமில்லைதான்.

"கட்டாயமாக உங்கள் பெற்றோரைச் சந்தித்துப் பேசுகிறேன். நம்பிக்கையோடு இருங்கள். நல்லதே நடக்கும்!" என்று தைரியப்படுத்துவது போல் கூறினாள் அவள்.

ரொம்பவும் நன்றி தெரிவித்தவன்... அவர்களிடம் பேசிய பிறகு தனக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டு... இருக்கையை விட்டு எழுந்தான்.

அந்த ஷாப்பின் தரையில், இதமான பச்சை வண்ணத்தில் நீளமாக கோடுகள் வரையப்பட்டு டிசைன் செய்திருந்தார்கள்.

நந்தன் அடுத்த எட்டு எடுத்து வைத்தால், அது கோட்டைத் தாண்டித்தான் வைக்க வேண்டும்.

சற்று முன் பேசி கோடு கிழிப்பது குறித்த பேச்சு நினைவு வந்தவனைப் போல... லேசான முறுவல் தோன்றியது அவனுக்கு.

"அடடா! இது ஒன்றும் உங்கள் மனைவி கிழித்து வைத்த கோடு அல்ல நந்தன்! அதனால் நீங்கள் தைரியமாகத் தாண்டி விட்டுப் போகலாம்!" என்று அவன் முகத்தைப் பார்த்திருந்தவளாக... கேலி செய்து சிரித்தாள் சௌந்தரியவதி.



இந்தப் பெண் கண்டு கொண்டதோடு, கேலி வேறு செய்கிறாளே... என்று எண்ணியவனின் முறுவல் பெரிதாக, "நல்ல வேளையாக ஞாபகப்படுத்தினீர்கள். இல்லையென்றால், எவ்வளவு நேரம் இங்கேயே நின்றிருப்பேனோ தெரியவில்லை. தேங்க்ஸ்ம்மா!" என்று பதிலுக்குத் தானும் கேலி செய்வது போல் கூறியவன்... சந்தோஷமான ஒரு தலை அசைவுடன் கிளம்பிச் சென்றான்.

அடுத்து வந்து சில நிமிடங்கள், அது ஐந்தோ... பத்தோ என்று சரியாகச் சொல்ல முடியாதபடி, அவளிடம் இதமான அமைதி தோன்றியது.

ஒரு கையால் கன்னத்தைத் தாங்கியவாறு அமர்ந் திருந்தவளின் மனதினுள் பல விதமான எண்ணங்கள் தோன்றின.

சில இனிய கற்பனைகளும் மின்னலிட... அதன் விளைவாக கன்னங்கள் கதகதப்பாகி, கற்பனையின் முடிவில் அவள் கண்ட அந்த முகம் அவளைத் திகைத்துச் சிலிர்க்க வைத்ததோடு, உடல் முழுவதையுமே படபடக்க வைத்து விட்டது.

அவளுக்கா? அவளுக்கா இப்படித் தோன்றியது!

வெறும் கற்பனைதான் என்றாலும் கூட... இது எப்படிச் சாத்தியம்?

தனக்கு ஏன் இப்படித் தோன்ற வேண்டும், கடவுளே! என்றவள்... படபடப்பைக் குறைக்கும்

முயற்சியாக, எதிரே மூடி வைக்கப்பட்டிருந்த பெரிய தம்ளர் தண்ணீர் முழுவதையும், ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

இப்போது உடல் சற்று திடமாகியதைப் போல் உணர்... சில முறை கை விரல்களை இறுக மூடித் திறந்தாள்.

குறும்பான புன்சிரிப்பும், கிண்டலான புருவ உயர்வும், அந்த முகத்திற்கு அவ்வளவு பாந்தமாக அமைய வேண்டுமா... என்ன?

அத்துடன், ஒரு கணம் தான் என்றாலும், அந்த முகம் அவளைத் தடுமாற வைத்தது உண்மை என்பது, அவள் மனதிற்குத் தெரியுமே...!

இப்படித் தனக்குள்ளேயே குழப்பமும் கேள்வியுமாக அவள் அமர்ந்திருந்த போது, இத்தனைக்கும் காரணமாக அவள் நினைத்துக் கொண்டிருந்த... அந்த முகத்துக்குரியவனான தயாபரனே எதிரே வந்து நின்றான்.

எதிரே வந்து நின்றவனின் முகத்தைப் பார்த்தவளுக்கோ... கடித்துக் குதறியெடுக்கவெனத் தயாராக நிற்கின்ற சிங்கத்தின் நினைவுதான் வந்தது.

ஒரே முகம் தான்.

ஆனால், கற்பனைக்கும் நிஜத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்?

தன்னையும் மீறி, ஏனோ அவளின் கால்கள் எழுந்து நின்றன.



"நீ இந்தளவிற்கு வெட்கம் கெட்ட ஜென்மமாக இருப்பாயென்று நான் சற்றும் நினைக்கவில்லை. என்னவோ நேற்று கையை உயர்த்தி... ரொம்ப ஒழுங்கு மாதிரிப் பேசிவிட்டுப் போனாய்?

"இப்போது அப்படிப் பேசேன் பார்க்கலாம். எனக்கு வருகின்ற ஆத்திரத்திற்கு, உன்னை என்ன செய்தாலும் தகுமென்று தோன்றுகிறது. ஆனால், தன் பேத்தி ரொம்ப... யோக்கியம் என்றெண்ணிக் கொண்டிருக்கிறாரே உன் தாத்தா... அந்த வயதான மனிதரின் முகத்தை எண்ணி... கையைக் கட்டிக் கொண்டு பேசாமல் இருக்க வேண்டியதாகி விட்டது. இல்லையென்றால்..." என்று பல்லைக் கடித்தபடி, தன் ஆத்திரத்தைக் காட்டினான்.

அதிர்ச்சியில் கண்கள் விரிய... சில நொடிகளுக்கு என்ன பேசுவதென்றே தோன்றாமல், அப்படியே நிற்கத் தான் முடிந்தது, அவளால்!

கையைக் கட்டிக் கொண்டிருக்கிறானாமா? இல்லையென்றால் எட்டி அறைந்து விடுவானாமா?

அவளையா இவன் இப்படிச் சொல்வது? என்று, அவனுக்கு இணையாகவே கோபம் தோன்றிய போதும், அதையும் மீறி ஏதோ ஒன்று அவளின் தொண்டையை அடைக்கச் செய்துவிட... அந்த இடைவெளி, அவளின் குரலை பலமிழக்கச் செய்து விட்டதோ?

ஏனெனில்... "நீங்கள் இந்தளவிற்குக் கோபப்படும்படி இப்போது அப்படி என்ன நடந்து விட்டது,

தயாபரன்?" என்று கேட்ட குரலில், நிச்சயம் முழுமை யான கோபம் வெளிப்படவில்லை என்பதை... அவளுமே உணரத்தான் செய்தாள்.

"இன்னும் என்னடி நடக்க வேண்டும்? அதுதான் கண் எதிரிலேயே பார்த்துத் தொலைக்க வேண்டி யிருந்ததே... நந்தன் சென்ற பிறகு, உன் முகத்தில் தோன்றிய மாறுதலும், கனவிலே மிதந்தபடி நீ அமர்ந்திருந்த விதத்தையும் இல்லையென்று மறுக்க முடியுமா உன்னால்? அல்லது வேறு விளக்கம் தான் தர முடியுமா?" என்று கண்கள் சிவப்பேற, தெறித்துக் கொண்டு வந்தன வார்த்தைகள்.

அவனுடைய 'என்னடி!'யிலேயே அதிர்ந்திருந்த வளுக்கு, அடுத்து அவன் கேட்டதற்கு என்னவென்று பதிலளிக்க முடியும்?

உண்மையைச் சொன்னால், நம்புவானா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்கட்டும்.

முதலில் அதை எப்படி வெளியே சொல்ல முடியும்? அதுவும் இவனிடமே? நடக்கக் கூடிய விஷயமா இது? என்று அவளுக்குள் பல விதமாக எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்க...

"என்ன? பதில் சொல்லத் துப்பில்லாமல் நிற்கிறாய்! ஏதாவதொரு கற்பனைக் கதையை அளந்து விடலாமென்று தோன்றினால், அந்த எண்ணத்தை விட்டுவிடு. இவ்வளவுக்குப் பிறகும் உன்னை நம்பு வதற்கு, நான் முட்டாள் அல்ல!



"நேற்றையச் சம்பவத்திற்குப் பிறகும், ஏனென்று தெரியாமல்... ஒருவேளை உன்னிடம் அனாவசியமாக நான் கடுமையாக நடந்து கொள்கிறேனோ என்று ஒருமுறை தோன்றியது. ஆனால் அது தேவையற்றது என்பதை இப்போதும் நிருபித்து விட்டாய்.

"சொல்லப் போனால் யாரையும் சந்தேகித்து நான் இந்தப் பக்கமாக வரவில்லை. முக்கியமான அலுவலக ஃபைல்களை மறந்து விட்டுச் செல்கிறாரே.. விமான நிலையத்தை அடைவதற்கு முன்பாக நந்தனைப் பார்த்தாக வேண்டுமென்று, சுலப வழியென்று முடிவு செய்து தான் இந்தப் பக்கம் வந்தேன். வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாகிப் போயிற்று.

"நந்தன்... அந்த மனிதரை நான் வேறு விதத்தில் அணுகிக் கொள்கிறேன். இப்போது நீ தான் எனக்கு முதல் பிரச்சனை! நான் பார்த்ததை, என் தங்கை பார்த்திருந்தால்... அதை ஒருபோதும் மன்னிக்க மாட்டாள்.

"நந்தனுடன் ஒரு பெண் உரிமையுடன் சிரிக்கிறாள் என்றால், அது என் தங்கையாக மட்டும் தான் இருக்க வேண்டும். இருக்க முடியும். நீ உள்ளே நுழைய முயல்வதை, நான் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்பேன் என்று நினைக்காதே.

"குறுக்கு வழியில் செல்ல நினைக்கும் உனக்கு, கொஞ்சமும் தயவே காட்ட மாட்டேன் தெரிந்து கொள். பிறகு ரொம்பவும் அசிங்கப்பட்டுப் போவாய்.

"இந்தப் பழக்கத்திலிருந்து நந்தனை வெட்டிவிடு. அவரை நம்பி, ஒருத்தி தன் வாழ்க்கையையே ஒப்படைத் திருக்கிறாள். அதுவும் குடும்பத்தினரை எதிர்த்துக் கொண்டு.

"உனக்கு, உன்னுடன் கொட்டமடித்து ஆட்டம் போட ஒருவன் தேவையென்றால் சொல். அதற்கு, நான் தயாராக இருக்கிறேன். எனக்கு வேறு யாருடனும் கமிட்மெண்ட்ஸ் கூட இல்லை.

"அத்துடன்... நான் வசதி வாய்ப்பில், நந்தனை விட பல மடங்கு அதிகமாக இருப்பவன் என்பது, உனக்கு கூடுதல் நன்மையாயிற்றே...!" என்று, ஏளனமும் குரூரமாகவும் கூறினான் தயாபரன்.

திகைப்பின் உச்சம் போல, அவளுடைய கைகள் தானாக உயர்ந்து வாயைப் பொத்திக் கொள்ள... சட்டென்று கண்களில் நீர் அரும்பியது.

சற்று முன் தோன்றிய இனிய கற்பனைகள் அனைத்தும் நொறுங்கி விழ... ஸ்தம்பித்துப் போய் நின்றாள் சௌந்தரியவதி.

அவளுடைய ஸ்தம்பிப்பு, அவனுக்குத் தூண்டி விட்டாற் போலானதோ?

"என்னடி தாங்க முடியவில்லையா? இப்படி ஆணி அடிப்பது மாதிரிச் சொன்னால் தான், தலைக்குள் ஏறும் போல?" என்று உதட்டோர வளைவுடன் அலட்சியமாகக் கேட்டவன், தொடர்ந்து... அவளை ஒரு மாதிரி வெறித்து நோக்கி,



"ரொம்ப நல்லவள், நியாயமானவள் மாதிரி... இப்படியொரு முகத்தைப் பெற, உனக்குக் கொஞ்சமும் தகுதியே இல்லை தெரிந்து கொள். சீ!" என்று, வெறுப்புடன் முகம் சுளித்துக் கூறியவன், கடைசியாக ஒருமுறை, கடுமையாக எச்சரிப்பது போல பார்த்து விட்டு, அங்கே நிற்பதே பாவம் என்பது மாதிரி விரைந்து சென்று விட்டான்.

அவன் கார்க் கதவை அறைந்து சாத்திய வேகத்தில், அவளின் உடல் சிலிர்த்துப் போனது.

அந்தச் சிலிர்ப்பே அவளை நிகழ்வுக்கும் கொண்டு வர... சட்டென்று திரும்பி சுற்றும் முற்றும் பார்த்தபோது, ஓரிருவர் ஒரு மாதிரி கேவலமாகப் பார்ப்பது போல் தோன்ற, இன்னமும் கூசியவளாக... நெருப்பிலிருந்து தப்பிக்கிற வேகமுடன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினாள் அவள்.

# 8

**மீ**ண்டும் பள்ளிக்கு வந்து சேரும் வரை, வண்டியை எங்கும் முட்டிக் கொள் ளாமல் அவள் வந்தது வியப்புதான்!

ஏனெனில், அவ்வளவு தூரத்திற்கு கலங்கிப் போயிருந்தது, அவள் உள்ளம்.

காது கொடுத்துக் கேட்க மாட்டாத அளவிற்கு, என்னென்னவெல்லாம் பேசிவிட்டான். பாவி!

அவளைப் பார்த்தால் அவ்வளவு மோசமானவள் போலவா தெரிகிறது. பொது இடம் என்று கூடப் பாராமல், எப்படி அசிங்கப்படுத்தி விட்டான்?

உதவி செய்யவென்று போனது, இப்படி அவமானப் பட்டுத் திரும்புவதற்குத் தானா?

என்ன நடந்தது என்று விளக்கம் கேட்கக் கூடவா தகுதியற்றுப் போய் விட்டாள்.

என்னவோ, நந்தனை வேறு விதமாகப் பார்த்துக் கிழிப்பதாகச் சொன்னானே!

நந்தன் வாய்மொழியாக நடந்தது தெரியும் போது, முகத்தைக் கொண்டு போய் எங்கே வைத்துக் கொள்வான். முட்டாள்!

அவன் எங்கே வேண்டுமானாலும் கொண்டு போய் வைத்துத் தொலைக்கட்டும்.

அதனால் எல்லாம், பட்ட அவமானம் இல்லையென்று ஆகிவிடப் போகிறதா? இல்லையே என்று, கண்கள் பனித்துத் தொண்டையை இறுக்கியது.

நாட்டிய வகுப்பறையை அடைந்தபோது, மணி மணியான நீர்த்துளிகள் கன்னங்களில் வழிந்தோட, ஒரு மூச்சு பொங்கி அழுதே விட்டாள் சௌந்தரியவதி.

அடுத்த பாடவேளைக்காக மணி அடித்த சத்தத்தில் தான், சட்டென்று எழுந்து சென்று, குளிர் நீர் அடித்து முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள்.



சீ! எவனோ, என்னவோ உளறினான் என்பதற்காக அழுதோமே என்று, கொஞ்சம் கேவலமாக இருந்தாலுமே...

இப்போது தான், கொஞ்சமாவது மனம் லேசானதைப் போல் உணரவும் முடிந்தது.

அதையே நினைத்துக் கொண்டிருந்தால் சோர்வு தான் கூடும் என்பதால், பிடிவாதமாக மனதை வேலையில் செலுத்தினாள்.

ஏழாம் வகுப்புப் பிள்ளைகளின் வருகை, அதற்கு உதவியும் செய்தது எனலாம்.

பள்ளி முடிந்து வீட்டிற்குத் திரும்பியபோது, மீண்டும் நடந்த சம்பவம் மனதிற்குள் ஆட்டம் போட ஆரம்பித்து விட்டது.

தாத்தாவிற்கு முன்பாக, இயல்பாக இருப்பது போலக் காட்டிக் கொள்வதற்கே, அவள் கஷ்டப்படத்தான் வேண்டியிருந்தது.

நேரம் நள்ளிரவைத் தாண்டிச் சென்று கொண்டிருந்த போதும், தூக்கமின்றி அப்படியும் இப்படியுமாக நடந்து கொண்டுதான் இருந்தாள்.

உள்ளேயிருந்த கோப உஷ்ணம், வெளியே வியர்வையாகக் கொட்டுவதைப் போல் தோன்ற, மின் விசிறியின் வேகத்தைக் கூட்டினாள்.

அப்போதும் கூட பெரிதாகப் பயனில்லாமல் போகவும், சட்டென்று அறைக்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள்.

கையில் டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு, தாத்தா விழித்து விடாதபடி கவனமாக நடந்து சென்று ஹால் கதவையும் திறந்து, தோட்டத்தை அடைந்தாள்.

வீட்டின் மதில் சுவரும், இரும்பு கேட்டும் கூடுதல் பாதுகாப்பை உணர்த்த, மெல்ல அடியெடுத்து வைக்க லானாள் சௌந்தரியவதி.

சின்னச் சின்ன உயிரினங்களின் ரீங்காரம், கத்தும் சத்தம் என்று, எல்லாமே ரசனைக்கு உரியவையே.

ஆனால் இன்று, அதெல்லாம் காதிலேயே விழாத மாதிரி நடந்தாள்.

ஏன்... எப்போதும் ஆசை தீர நின்று வாசம் பிடிக்கும் 'ராமர் பாண' மல்லிகையின் வாசனையினால் கூட, அவளைக் கவர முடியாமல் போயிற்று!

மனதின் வலியை, அவளின் சோர்வான நடையே வெளிப்படுத்த, வெறுமனே வானத்தை வெறித்துக் கொண்டு அப்படியே நின்றாள்.

நிலவும், அதைச் சுற்றியிருந்த ஒளிவட்டமும்... அவளை மெல்ல அமைதியடைய வைக்க முயன்றதோ?

ஆனால் அமைதிக்குப் பதிலாக, ஒரு பெரிய பெருமூச்சுதான் வெளிப்பட்டது.

களங்கமற்றவர்களை, தூய உள்ளமுள்ளோர் களை, இந்த நிலவுடன் தானே ஒப்புமைப்படுத்திக் கூறுவார்கள்.



இப்படியொரு முகத்தைப் பெற, அவளுக்குத் தகுதியே இல்லை என்று கூறிவிட்டானே ஒருவன்.

எப்படி முடிந்தது?

அவளென்ன அப்படிப்பட்ட கீழ்த்தரமானவளா? நியாயமற்ற குற்றச்சாட்டு என்று தெரிந்தாலுமே, இப்படி வலிப்பதை அவளால் ஒன்றும் செய்ய முடிய வில்லையே...?

மீண்டும் கசிய முயன்ற கண்களை, அழுந்த மூடிக் கொண்டு நின்றபோது, ஏதோ ஒன்று முரண்பாடாக அவளை நோட்டமிடுவது மாதிரி தோன்ற, சட்டென்று கண்களைத் திறந்து கொண்டு திரும்பினாள்.

திரும்பியவளின் விழிகள், திகைத்துப் போய் விரிந்தன.

ஏனெனில், கேட்டிற்கு வெளியே நின்று கொண் டிருந்தவன், அவளின் அமைதியைக் குலைத்த தயாபரன்.

இந்த நேரத்தில்... இவனுக்கு இங்கே என்ன வேலை?

பொது இடத்தில் அசிங்கப்படுத்தியது போதா தென்று, இங்கே வீடு வரை வந்துவிட்டானோ என்ற நினைவே அவளைச் சிலிர்க்கச் செய்தது.

இதை அவள் எப்படி சமாளிக்கப் போகிறாள் என்று தவித்தவளின் கண்களில், கேட் உட்புறமாக

பூட்டியிருப்பது படவும், 'ஹப்பா...!' என்றொரு சின்ன நிம்மதி தோன்றி, தோன்றிய விரைவிலேயே மறைந்தும் போனது.

இவன் பாட்டிற்கு, வெளியில் நின்றே கத்த ஆரம்பித்து விட்டானென்றால்...

'அய்யோ கடவுளே!' என்று அவள் குறுகியபோது,

'இங்கே வா!' என்று, சைகையில் கையசைத்துக் காட்டினான் தயாபரன்.

'எதற்காக அழைக்கிறான்?' என்று, கால்கள் வெடவெடக்கவே ஆரம்பித்து விட்டது அவளுக்கு.

இந்த நேரத்தில் இவனை யாராவது பார்த்தால், என்ன நினைப்பார்கள்? முட்டாள்!

யார் என்ன நினைத்தால் எனக்கென்ன என்றல்லவா நிற்கிறான்!

பாதிப்பென்று வந்தால் அவளுக்குத் தானே? இன்னும் நன்றாகக் கேவலப்படட்டும் என்ற எண்ணம் போலும்...!

ஊஹூம்... இனி ஒரு கணம்கூட வெளியே நிற்பது நல்லதல்ல என்ற முடிவோடு, சட்டென்று திரும்பி வேகமாக நடக்க முற்பட்டாள்.

அப்போது, "ப்ளீஸ் சௌமி! போகாதே. நில்!" என்று, மிக மெல்லிய... ஆனால் தெளிவான குரலில் கூறினான் தயாபரன்.



அந்தக் குரலில் இருந்த மென்மை, பிரேக் போட்டாற் போல் அவளை நிற்க வைக்க...

"உன்னிடம் மன்னிப்புக் கேட்டாக வேண்டுமென்று தான், விடியும் வரை காத்திருக்க முடியாமல் கிளம்பி வந்தேன். ப்ராமிஸ் சௌமிம்மா!" என்று தொடர்ந்ததும், அவன் குரலே தான்!

மணிக்கணக்காக மனதை அழுத்திக் கொண்டிருந்த வலி, சட்டென்று விலகிச் சென்றுவிட, வேகமாகத் திரும்பியவளின் முகத்தில் தோன்றிய பலவிதமான உணர்வுகளை, என்னவென்று வார்த்தைகளால் வடிப்பது?

"இப்போதாவது இந்தக் கோட்டையின் கதவுகளைத் திறந்துவிடக் கூடாதா?" என்றவனுக்கு, பதிலாக...

"இதோ!" என்று மின்னலாக வீட்டிற்குள் சென்று திரும்பினாள்.

உள்ளே வந்து நின்றவனின் பார்வை, அவள் முகத்தில் நிலைத்தபோது...

ஏனோ அவளின் இதயம், கூடுதல் வேகமெடுத்துத் துடித்ததுடன், அவன் மீதிருந்த கடுங்கோபம் என்ன ஆனதென்று அவளுக்கே தெரியவில்லை.

"வந்து, நந்தனிடம் எப்போது பேசி உண்மையைத் தெரிந்து கொண்டீர்கள்? அவருடன் எதுவும் பிரச்சனையாகிவிடவில்லையே?" மெலிதானதொரு குரலில் வினவினாள் சௌமி.

ஒரு நீளமான பெருமூச்சை வெளியிட்டு விட்டு, "இதுவரை, நந்தனிடம் நான் எதுவும் பேசவோ... கேட்கவோ இல்லை!" என்றான் அமைதியாக.

"பி... பின்னே?" என்று முன் எப்போதும் இல்லாத அளவிற்குத் திகைத்தவள், தலையை ஒருமுறை வேகமாக ஆட்டிவிட்டு, "பிறகு எப்படி மன்னிப்புக் கேட்க வந்தீர்கள்? நந்தனிடம் பேசினால் தானே... நடந்த உண்மை என்னவென்று உங்களுக்குத் தெரிய வரும்?"

"அதற்கு அவசியமில்லை சௌமிம்மா!" என்றவன், இரண்டெட்டு முன்னே வந்து நின்று, அவளின் முகத்தைத் தன் கைகளால் நிமிர்த்தி, "இந்த முகம் தப்பு செய்யாது. செய்யவும் முடியாது என்பதை, என் மனதே எனக்குப் புரிய வைத்துவிட்டது. என் புத்தி, ஏன் என்னை அரக்கன் மாதிரிப் பேச வைத்ததென்று, என் மீதே வெறுப்பாக இருக்கிறது. எவ்வளவு மட்டமான வார்த்தைகளால் உன்னைக் கூறு கிழித்தேன்.

"பொது இடமென்றும் பாராமல், ஒரு பெண்ணின் ஒழுக்கத்தைப் பற்றி அசிங்கமாகப் பேசுமளவிற்கு, சுயநலம் பிடித்தவனாக இருந்ததை நினைத்தால்... சீச்சீ! நல்லதைக் கற்றுக் கொடுத்து வளர்த்த என் பெற்றோருக்குமே, நான் அநியாயம் தான் செய்திருக்கிறேன்.

"அநியாயத்தின் உச்சமாக, நந்தனை விட நான் பணக்காரன், அவனை விட்டுவிட்டு என்னைப் பிடித்துக் கொள், உனக்குக் கூடுதல் நன்மை என்றேனே...



"அதிர்ச்சியில் நீ வாயைப் பொத்திக் கொண்டு, கண்களில் நீருடன் என்னைப் பார்த்த பார்வை... அப்போதே உள்ளூர என்னவோ நறுக்கென்று வலிக்கத் தான் செய்தது.

"ஆனால்... எதற்காக வலிக்க வேண்டும் என்று, அதற்கும் ஆத்திரம் தான் தோன்றியது. அதையும் உன்னிடமே காட்டும் வெறியில்தான், மேலும் நெருப்பினால் சுடுவது போலவே பேசினேன்.

"என்னுள் இவ்வளவு தரங்கெட்டத்தனமா என்பதே, இப்போதுதான் தெரிகிறது. நல்ல வேளையாக, இப்போதாவது தெரிந்து கொண்டேனே என்பது நிம்மதியாக இருந்தாலும், இதுவரை என்னால் உனக்கு நேர்ந்த வேதனைகளுக்கும், அவமானங்களுக்கும், நான் என்ன பிராயச்சித்தம் செய்ய முடியும்?" என்று குரல் கரகரத்தவன்...

அவளின் கண்களை நேராகச் சந்தித்து, "இதுவரை நீ, என்னால் காயப்பட்ட எல்லா விஷயங்களுக்காகவும், மிகவும் மனம் வருந்தி, மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் சௌமிம்மா... ப்ளீஸ்!" என்று, தொண்டையடைக்கக் கூறியதோடு நில்லாமல், 'மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை சொல்லேன்...' என்பது போல் பார்த்தான்.

இந்த தயாபரனின் ஒரு சௌமிம்மாவில், அவளின் மனது இப்படியா பிசைந்து தடுமாற வேண்டும்?

ஏன்? என்ற காரணத்தைத் தேடிச் சென்று, மனதைக் குழப்பிக் கொள்ள அவளுக்கு விருப்ப மில்லை.

குறைந்த பட்சமாக இப்போதைக்கு, இந்த நிமிடத்து மனநிலையைக் கெடுத்துக் கொள்ள... துளியும் விருப்பமே இல்லை என்பது மட்டும் உறுதி.

தப்பை உணர்ந்து, வருந்திக் கேட்கும் மன்னிப்பு மதிப்புமிக்கது. அதைக் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது, எப்போதோ சிறு வயதில் காதில் விழுந்த ஞாபகம் அவளுக்கு.

எனவே, அவனை மன்னித்து விட்டதைத் தெரி விப்பது போல, கண்களின் இமைகளை, மென்மையாக மூடித் திறந்தாள் சௌந்தரியவதி.

கண்கள் முழுவதும் நிரம்பிய நன்றியுடன், அவளின் கைகளைப் பற்றியவன், சில கணங்கள் கடந்து சென்ற பிறகே, ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன், "நான் கிளம்புகிறேன் சௌமி. மறவாமல் எல்லாக் கதவுகளையும் பூட்டி விட்டு, நிம்மதியாகத் தூங்கு. குட் நைட்!" என்றுரைத்து விட்டு கிளம்பிச் சென்றான் தயாபரன்.

கார் கதவைத் திறந்த பிறகு, லேசாகத் தலையைத் திருப்பி அவன் புன்னகைத்தபோது, அவளின் இதயம் கூடுதல் வேகமெடுத்துத் துடித்ததோடு, எங்கேயோ வானில் பறந்து செல்வதைப் போல, உடம்பெல்லாம் லேசாகிப் போயிற்று.



அந்தப் பெரிய கார், தெருவின் கடைசி திருப்பத் தையும் தாண்டிச் சென்று மறையும் வரையுமே... அப்படியேதான் நின்றாள்.

பிறகு கேட்டைப் பூட்டி விட்டுத் திரும்பி வந்தபோது, 'ராமர் பாண' வாசனையை ஆசையோடு நுகர்ந்தபடி, சில பூக்களையும் பறித்தெடுத்துக் கொண்டு, வீட்டிற்குள் சென்றாள்.

நிமிடத்திற்கு நிமிடம் மாறிக் கொண்டே இருக்கிற மனித வாழ்க்கையில்தான், எவ்வளவு விஷயங்கள் அடங்கியிருக்கிறது.

இருளுக்குப் பிறகு வெளிச்சம் நிச்சயம் என்பார்கள். அது எவ்வளவு உண்மையோ, அது போலத்தான் வேதனைக்குப் பிறகு மகிழ்ச்சியும் நிச்சயம் போல...

சில நிமிடங்களுக்கு முன்பு வரை, நெஞ்சு முட்டும் வேதனையுடன் எப்படித் தவித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் இப்போது...

அவளை, ஒருவித இதமான உணர்வு ஆட் கொண்டு, உற்சாகப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறது!

அந்த உற்சாகம், ஏனோ அவளை விடியற்காலை வரையுமே உறங்கவிடவில்லை.

தேவையான அளவிற்கு உறங்க முடியாமல் போனால், மறுநாள், சோம்பித் தெரிவது தானே இயல்பு?

அவளோ, இயல்பிற்கு மாறாக மிகவும் சுறுசுறுப்பாக இயங்கினாள்! அவள் மட்டுமா?

# 9

அந்த மறுநாளின் விடியல், தயாபரனையும் கூட சாதாரணமாக இருக்க விடுவதாயில்லை.

வழக்கமாக, ஜாகிங் முடிந்ததும், சோஃபாவிலே வசதியாகச் சாய்ந்து கொண்டு, ஒரே மூச்சாகப் பேப்பரைப் படித்து விட்டுத் தான் மற்ற வேலைகளைத் தொடருவான்.

இன்றோ அவன் கால்கள் வீட்டிற்குள் செல்லாமல், சுற்றியுமிருந்த தோட்டத்திற்குள் நுழைந்தது.

வண்ண மலர்கள் குலுங்கிய விதவிதமான அத்தனைச் செடிகளையும், என்னவோ அன்றைக்குத் தான் புதிதாகப் பார்ப்பது போலிருந்தது.

பொதுவாக அந்த வீட்டு மனிதர்களுக்கு, செடி கொடிகளுடனெல்லாம் நின்று பேசிக் கொண்டிருக்க நேரமில்லை.

தங்கமும், சந்தன வர்ணமும், தந்தமாக மின்ன... கடற்கரை சாலையில், கம்பீர கர்வமுடன் நின்றிருந்தது, அவர்களின் பங்களா.

அப்படிப்பட்ட பங்களாவைச் சுற்றியும், பசுமையான தோட்டம் இல்லையென்றால் எப்படி?



'இவ்வளவு பெரிய தோட்டமா? என்ற பிரமிப்பு, பார்ப்பவர்களிடம் தோன்ற வேண்டாமா? அந்த வகையில் இருக்க வேண்டும்' என்று கூறியதோடு, வீட்டுத் தலைவி ஒதுங்கிக் கொண்டாள்.

'நீங்கள் என்னப்பா சொல்கிறீர்கள்?' என்று கேட்ட பிள்ளைகளிடம், 'உங்களின் விருப்பம் போல் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் நன்றாயிருக்க வேண்டும்...' என்றதோடு தலைவரும் கிளம்பி விட...

முழுத் தோட்டத்தையுமே, இப்படியிருக்க வேண்டும் என்று முடிவு செய்து செயல்படுத்தியது, தயாபரன் தான்.

தன் பொழுதுபோக்குகளுக்கு மத்தியில், எப்போதாவது, 'இப்படிச் செய்யலாமாண்ணா?' என்று தாரிகா சொன்னதை, அப்படியே செய்யும்படி உத்தரவிடுவான் அவன்.

ஒவ்வொரு தலைமுறையினரின் ரசனைக்கேற்ப, பாரம்பரிய வீட்டில் மாற்றம் நடப்பதைப் போலத்தான், இதையும் செய்தார்கள் அவர்களின் குடும்பத்தார்.

உடையவர்கள் கவனித்தாலும் இல்லையென்றாலுமே, பணியாளர்கள் தங்களின் பராமரிப்பை செவ்வனே செய்தார்கள்.

கவனிக்க யார் இருந்தாலும் இல்லையென்றாலும், அவரவரின் வேலை தானாக நடந்து கொண்டே இருக்க வேண்டும்.

அதுதான், அவர்களின் வீட்டிலும், அலுவலகங்களிலும் எழுதப்படாத விதி.

அனாவசியமாக எந்தவித சருகுகளும் கீழே கிடக்காமல், தோட்டம் பளிச்சென்று இருந்தது.

தயாபரன் நிதானமாக நடந்தபடி சுற்றியும் பார்வையை ஓட்டியபோது,

காய்கறிகள் நிரம்பிய மூங்கில் கூடையுடன், வேகமான நடையுடன் வீட்டின் பின்புறத்திலிருந்து வந்தான் தோட்டக்காரன்.

"என்ன பொன்னையா! அதற்குள்ளாகவே வெண்டையும், தக்காளியும் விளைய ஆரம்பித்து விட்டதா? குட்!" என்று, நாலு வார்த்தை பேசி விட்டு நடையைத் தொடர்ந்தான்.

வீட்டின் மொட்டைமாடியில், தாயும் தந்தையும் வியர்க்க வியர்க்க நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தார்கள்.

கடற்கரையில் சேரும் கூட்டத்திற்கு முன்னால், மாடியில் காலை நேரச் சூரிய வெப்பத்தை அனுபவித்தபடி, இப்படி நடப்பதே நன்றாக இருக்கிறது என்பது அவர்களின் கருத்து.

பல நேரங்களில் அவனுக்குமே அப்படித் தோன்றுவதுண்டு தான்.

இருந்தாலும், இதமான வெளிச்சமுடன், மெல்ல வெளியே வரும் சூரியனைப் பார்த்தவாறு ஓடுவது, அவனுக்குப் பிடித்தமான விஷயம்.



சிவப்பு நிறத்திலே, கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த செடியருகே சென்றவன், ஒரு கொத்தைக் கையிலெடுத்து ரசித்தவாறே மாடியின் மறுபக்கமாகப் பார்த்த போது, அவன் ரசனைக்குள் என்ன தோன்றியதோ?

முதலில் நம்ப மாட்டாமல் பிரமித்தவனின் பார்வை, சில கணங்களுக்குப் பிறகு, மீண்டும் பழைய படி ரசனைக்கே திரும்பியது.

என்ன எண்ணுகிறான் என்று, இலகுவாக கண்டுகொள்ள முடியாத ஒரு இளம் புன்னகையுடன், வீட்டிற்குள் சென்றான் அவன்.

அலுவலகத்திற்குச் சென்ற பிறகும் கூட, அவன் மனநிலை அப்படியேதான் தொடர்ந்தது.

சில நாட்களாகவே, சரியான இழுபறி என்று நினைத்திருந்த வேலைகள் கூட, அன்றைய தினம் நல்லபடியாக முடிந்தது.

அன்று மாலை டீ வேளையின் போது, "என்னப்பா... இன்றைக்கு ஏதேனும் விசேஷமா? இரு மடங்கு துடிப்புடன் தெரிகிறாய்?" என்று தந்தை கேட்டே விட...

ஒரு கணம் சட்டென விழி உயர்த்தி விட்டு, "ம்... கிட்டத்தட்ட அப்படித் தான் அப்பா. ஆனால், இப்போதைக்கு இதற்கு மேல் எதுவும் சொல்ல முடியாது. ப்ளீஸ்!" என்று நைஸாக நழுவிச் சென்றான்.

அன்றைய இரவு உணவிற்குப் பிறகு, மாடி ஊஞ்சலில் அமர்ந்தபடி, "நந்தன் அலுவலகத்திற்கு வந்திருந்தார் போலிருக்கிறது!" என்று மனைவியிடம் சற்குணம் கூறியபோது, படியேறிக் கொண்டிருந்த தயாபரன் மேலே செல்லாமல் அப்படியே நின்று விட்டான்.

"அவர் மட்டுமா வந்திருந்தார்?" என்று, பரபரப்பை வெளிக்காட்டாதவாறு கேட்ட தாயின் குரலில் என்னவோ இருந்தது.

தந்தை மௌனமாக இருக்கவும், "ஏனாம்? அவர் வரும்போது, அவளுக்கு வருவதற்கு என்னவாம்? எல்லாம் ஈகோ!" என்றவள் தொடர்ந்து, "எதற்காக வந்தார் என்பதை, தயாவிடம் கேட்கவில்லையா?" என வினவ...

"தேவையென்றால், தயங்காமல் நிச்சயம் சொல்வான் என்பதால்... கேட்கவில்லை!" என்றார் கணவர்.

"அதுவும் சரிதான். இருந்தாலும் மனதிற்குள் என்னவோ போலிருக்கிறது குணா! இந்தப் பெண் தருவிற்கு, இவ்வளவு ரோஷம், பிடிவாதம் கூடாதுப்பா. நான் தான் ஆத்திரத்தில் 'பேசாதே!' என்று கூறினேன் என்றாலும், இத்தனை நாட்கள் கடந்த பிறகும், அதையே பிடித்துக் கொண்டு நிற்பதா?

"எப்படி இருக்கிறாளோ என்னவோ என்று, நமக்குத் தானே இங்கே அடித்துக் கொள்கிறது!" என்று புலம்பினாள் மனைவி.



"எல்லாவற்றையும் முன் நின்று நடத்தியது மகன் தானே! அவனால் முடிந்த வரை சிக்கல் வராமல் தங்கையை நன்றாக வாழ வைக்கத் தேவையான எல்லாவற்றையும் செய்வான்.

"விடு செல்வா! நீ அலட்டிக் கொண்டு, மீண்டும் உடம்பைக் கெடுத்துக் கொண்டு படுத்து விடாதே!" என்று மனைவியின் கையைப் பற்றிக் கூறினார்.

வந்த வழியே திரும்பிய தயாபரனுக்கு, பலத்த யோசனை தோன்றியது.

பெற்றோரின் மனது மெல்ல எதார்த்தத்திற்குத் திரும்புகிறது. அதோடு, தருவிற்காக உள்ளூரக் கவலையுடனும் இருக்கிறார்கள். எல்லோரையும் ஒன்று சேர்க்க... இது சரியான தருணம்.

விடாமல் முயன்றால், நிச்சயம் நல்ல முடிவே அமையும்.

அதே சமயம் நந்தனின் பெற்றோரையும் சந்தித்துப் பேச வேண்டும்.

சற்றுக் கடினமாகத்தான் இருக்கும். இருந்தாலும் எதிர் கொண்டுதான் ஆக வேண்டும்.

'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்.' அதோடு நடந்த விஷயங்களால், சௌந்தரியவதிக்குப் பெரிய பாதிப்பில்லை என்பதையும் காட்ட வேண்டும்.

அதற்கு அவளையே அழைத்துச் செல்வதைவிட சிறந்த வழி வேறில்லை என்று தோன்றவும், மறுநாள் காலையில் அவள் வீட்டிற்குச் சென்றான்.

அன்று ஞாயிறு விடுமுறையென்பதால், சாவ தானமாக வீட்டு வேலையில் இறங்கியிருந்தவள்... தயாபரனின் காரைக் கண்டு புருவம் உயர்த்தினாள்.

தாத்தா, வீட்டின் பின்பக்கமாக நீர் பாய்ச்சிக் கொண்டிருந்ததால், வந்தவனை எதிர்கொள்ள வேண் டியது அவளது வேலையாயிற்று.

வீட்டிற்குள் தானே இருக்கிறோம் என்று, டைனிங் டேபிள் மீது கழற்றிப் போட்டிருந்த சுடிதார் துப்பட்டாவை வேகமாக எடுத்துத் தோள்களின் இருபக்கமும் விழும்படி போட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

அருமையான அடர் சிவப்பு வண்ணச் சுடிதாரில், தோகை போல விரிந்திருந்த கேசத்திற்கு, வேகமாக கிளிப் மாட்டியபடி அவனை எதிர்கொண்டு, "வாருங்கள்!" என்றாள்.

நாற்காலியில் அமர்ந்து, அவளை ஆழ நோக்கி அளவிட்டவனின் பார்வையைத் தவிர்க்க... "என்ன விஷயம்?" என்று கேட்டாள்.

புரிந்து கொண்டாற் போல... நாற்காலியில் இலகுவாகச் சாய்ந்தவன், "நந்தனின் பெற்றோர், இப்போது இந்த ஊரில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர்களுடன் பேச வேண்டும் என்று நினைக்கிறேன். அப்போது நீயும் உடனிருப்பது நல்லதென்று தோன் றியது!" என்றவனை இடையிட்டு...

"யாருக்கு நல்லது?" என்றது அவள் குரல்.



'எனக்காகக் கொஞ்சம் உதவி செய்ய முடியுமா? என்று வெளிப்படையாகக் கேட்க வேண்டியது தானே? என்னவோ... நல்லதென்று தோன்றியதாம். கொஞ்சம் கீழே இறங்கி வந்து கேட்டால், கௌரவம் குறைந்து விடுமாக்கும்?

பார்க்கலாம்... இப்போது என்ன சொல்லப் போகிறான் என்றெண்ணியவாறு பார்த்தாள்.

சரியாகப் பாயிண்ட்டைப் பிடிக்கிறாளே என்று, முறுவல் தோன்றத்தான் செய்தது. இருந்தாலும் அதை உள்ளுக்குள்ளேயே கட்டுப்படுத்திக் கொண்டு, "ஏன்? எல்லோருக்கும் தான்!" என்றான்.

"அடடா! கொஞ்சம் விளக்கிச் சொல்றீங்களா சார்!" என்றாள் வேண்டுமென்றே.

"தாராளமாகச் சொல்கிறேன். முதலாவதாக, நந்தனின் பெற்றோருக்கு உன் மீது நிறைய அன்பிருக் கிறது. உன்னைத் திடீரென்று பார்க்கும் போது நிச்சயம் சந்தோஷப்படுவார்கள்.

"அந்தச் சமயத்தில், நடந்த விஷயங்களைப் புற்றிக் கூறும் போது, கோபப்பட்டாலும் கூட... பிறகு நிதானமாக யோசிக்கவும் வாய்ப்பிருக்கிறது. அவர்கள் 'யோசிக்கிறோம்...' என்று சொன்னால் கூடப் போதும். இரண்டு குடும்பத்தையும் சமாதானப்படுத்தி விடுவேன். எனக்கு நம்பிக்கை இருக்கிறது!" என்றான் அவன்.

"எல்லாம் சரி தான். ஆனால், இதில் நான் எந்த இடத்தில் நுழைந்து நன்மையடைந்தேனாம். அதையும்

சொல்லி விட்டீர்களென்றால் நன்றாக இருக்குமே...!" என்றாள், இதழோரம் எழுந்த சிறு புன்முறுவலுடன்.

"அம்மாடியோவ்! இதற்கு மேல் தாக்குப் பிடிக்க என்னால் முடியாது. விட்டு விடு. உனக்கு இப்போது என்ன வேண்டும்? 'தயவு செய்து என்னுடன் வந்து, எனக்கு உதவி செய்யேன்' என்று நேரிடையாகக் கேட்க வேண்டும். அதுதானே?

"இதோ, இப்போதே கேட்கிறேன். ப்ளீஸ்... எனக் காக நாலு நல்ல வார்த்தைகள் பேசி, அவர்களின் மனம் மாற உதவி செய்யேன்..." என்று கேட்டுப் பெரிதாக ஒரு கும்பிடும் போட்டான்.

ம்... என்று யோசிப்பது போல அவள் பாவனை செய்ய...

அப்போதுதான் அருகே வந்தார் போல, "என்ன தம்பி எப்போது வந்தீர்கள்? நலமா?" என்று விசாரித்த வாறு முன் படிகளில் ஏறி வந்தார் வாசவன்.

"ரொம்பவே நலம் சார்! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று பதிலுக்கு நலம் விசாரித்தான்.

"இப்போது எவ்வளவோ பரவாயில்லை தம்பி!" எனப் புன்னகைத்தவர், "ஏதாவது முக்கியமான விஷயமா? இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்களே?"

"ஆமாம் சார்!" என்று அவன் விஷயத்தைக் கூற...

"ஓ! ரொம்ப நல்லது. சௌமிம்மா கூட, இன்று அவர்களைப் பார்க்கப் போவதாகத்தான் காலையில்



சொன்னாள்!" என்று வாசவன் தெரிவித்தபோது, கண்கள் இடுங்க சட்டென்று அவளை நோக்கினான் தயாபரன்.

உள்ளூரத் தோன்றிய புன்னகையுடன், அவள் விழிகள் கிண்டலாக அவனை எதிர்கொண்டது.

அவனை இவ்வளவு நேரமாக கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு, கடைசியில் கிட்டத்தட்ட கெஞ்சவே வைத்தாளே...!

எல்லாம் வேண்டுமென்றே செய்திருக்கிறாள். கொஞ்சம் பொல்லாத பெண்ணாகத்தான் இருக்கிறாள். இவளிடம் சற்று எச்சரிக்கையுடன் தான் இருக்க வேண்டும் போலிருக்கிறது என்றெண்ணினான் தயாபரன்.

"என்னடாம்மா! நீயும் இப்போதே போகிறாயா?" என்று கேட்டார் வாசவன்.

'ம்... போனால் வேலை முடியும்!' என்ற நினைத்த படி, தலையசைத்தாள் அவள்.

ஒரு இடத்திற்குப் போகும் போது, இரண்டு வாகனம் அவசியமல்ல என்றே அவளுக்கும் தோன்ற, தயாபரனின் அழைப்பை ஏற்று அவன் காரிலேயே சென்றாள்.

சொகுசுக் காரின் பயணம், உடம்பிற்குச் சுக மாகவே இருந்த போதும், கிளம்பிய சற்று நேரம் வரையும், இருவரும் மௌனமாகவே இருந்தார்கள்.

அடுத்ததாக எதிர்கொள்ளப் போகிற விஷயத்தைப் பற்றி யோசித்தானோ...? தயாபரனின் முகத்தில் தீவிரம் தெரிந்தது.

கார் ஓட்டும் போது, கவனம் வேறு எதிலும் இருக்கக் கூடாது என்பார்களே என்று நினைத்தபோது, நெரிசலான இடங்களிலும் கூட இலகுவாக ஓட்டி, பாதையில் கவனம் இருப்பதை வெளிக்காட்டினான் அவன்.

"நந்தனின் பெற்றோர் பழகுவதற்கு எப்படிப்பட்டவர்கள் சௌமி?" என்று முதலில் பேச ஆரம்பித்தவன் அவன் தான்.

"நல்ல மனிதர்கள். என்னிடம் அன்பாகத்தான் பழகுகிறார்கள். ஆனால் உங்களிடம்...?" என்று நிறுத்தினாள்.

"ம். அது கொஞ்சம் கஷ்டம் தான். இருந்தாலும், எதையும் எதிர்கொண்டுதானே ஆக வேண்டும். அவர்களின் இடத்திலிருந்து பார்த்தால் தானே அந்தக் கஷ்டம் எப்படிப்பட்டதென்று தெரியும். இத்தனை வருடங்களாக எப்படியெல்லாமோ வளர்த்திருப்பார்கள்.

"அவர்களுக்குத் தெரியாமல்... அவர்களின் மகனுக்குத் திருமணம் செய்து வைக்க எனக்கு எந்த அதிகாரமும் இல்லை.

"எதிர்காலத்தில், உன் பிள்ளைக்கு இப்படி யாராவது திருமணம் செய்து வைத்தால், நீ ஒத்துக்



கொள்வாயா? என்று கேட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!" என்று கூறி ஒரு நெடிய மூச்சையும் வெளியிட்டவனுக்கு, அவனையும் மீறி பளிச்சென்று புன்னகை தோன்றியது.

அவனுடைய புன்னகை, அவளின் கண்களை அகலமாக்கி... இப்போது இந்தப் புன்னகை எதற்காகவோ? என்று தோன்றவும் வைத்தது.

அவள் கண்களில், மனதைப் படித்தவனாக, " 'அடியே... என்று கூப்பிட பெண்டாட்டியே வரவில்லையாம். அதற்குள் பிள்ளைக்குப் பெயர் வைத்தானாம் ஒருவன்!' என்று கிராமத்துப் பக்கம் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

இப்போது அது எனக்கே பொருந்துவது போன்ற சூழ்நிலை அமைந்ததை நினைத்துத் தான் சிரித்து விட்டேன்!" என விளக்கம் கொடுத்தபோது, அவளுக்கும் மெல்லிய முறுவல் தோன்றியது.

பார்க்கலாம்... இதற்கு என்ன தான் சொல்கிறான் என நினைத்தவள்...

"அதனாலென்ன... அப்படி ஏதாவது நடந்தால், கற்றுக் கொள்கிறேன் என்று சொல்ல வேண்டியது தானே!" என்று கூற...

"அது முடியாதே!" என்றான் தயாபரன் உடனே.

முடியாதா? அப்போது ஊருக்கு மட்டும் தான் உபதேசமாக்கும். சரியான சுயநலவாதியாக அல்லவா இருக்கிறான் என்றெண்ணிய போது,

"அதற்குள் ரொம்பத் தூரம் சென்று விட்டாய் போலிருக்கிறது..." எனச் சின்னதாக வாரியவன், "நான் முடியாது என்றதற்கு, சரியான காரணம் இருக்கிறதும்மா. இப்படி நம்பாமல் பார்க்காதே. உண்மைதான்!

"நீயே சொல். எனக்கு இன்னமும் மனைவி யென்று ஒருத்தி வரவேயில்லை. எதிர்காலத்தில் பிறக்கப் போகிற பிள்ளையிடம், சரிபாதி உரிமை அவளுக்கும் உண்டு. அப்படியிருக்கும் போது, நான் மட்டுமாக 'சரி'யென்று சொல்கிற அதிகாரம் எனக்குக் கிடையாது.

"வீட்டுப் பெண்களுக்குமாகச் சேர்த்து, தாங்களே முடிவெடுக்கிற ஆணாதிக்கம் எங்கள் வீட்டில் இல்லை..." என்றவன், சொன்னது சரிதானே என்பது போல... அவள் புறம் ஒரு பார்வை பார்த்து விட்டுத் திரும்பி னான்.

நம் தேசத்தில், முழு மனதோடு, பெண்களுக்குச் சம உரிமை வழங்குகிற குணமுள்ள மனிதர்கள் இருப்பது, மகிழ்ச்சியான விஷயம்தான்.

இவனுக்கு மனைவியாக வரப் போகிற பெண் அதிர்ஷ்டசாலியே! அவள் எங்கே இருக்கிறாளோ? எப்படி இருப்பாளோ? என்று ஓடிய சிந்தனையைச் சட்டென்று தோன்றிய ஒரு திடுக்கிடலுடன் நிறுத்தியபோது...

கையில் வைத்திருந்த பர்ஸ் நழுவி கீழே விழுந்து... அதிலிருந்த சில பொருட்கள் சிதறின.



அப்போது தயாபரனின் இருக்கைக்கு அருகிலும், ஏதோ விழுந்த மாதிரி இருந்தது.

அவ்வப்போது அவளையும் கவனித்தவனாக, "ரொம்பவும் முக்கியமான விஷயம் பற்றிய யோசனை போலிருக்கிறது..." என்று கூறிவிட்டு, காரை வேகம் குறைத்து... சாலையின் ஓரமாக நிறுத்தி விட்டு, கீழே விழுந்த பொருட்களை எடுக்கலானான்.

நல்லவேளையாக, எதைப் பற்றி யோசித்தாய் என்று கேட்டு, அதிலேயே நிற்காமல் போனானே... இல்லையென்றால், அவள் என்னவென்று பதில் சொல்லியிருப்பாள்? உன் வருங்கால மனைவியைப் பற்றி யோசித்தேன் என்றா?

கடவுளே! அவளைப் பற்றி என்ன நினைப்பான்? மதில் மேல் பூனை மாதிரி - கிண்டலாகப் பேசினால் சரி. அது இல்லாமல், என்னைப் பற்றி நீ ஏன் இதெல்லாம் யோசிக்க வேண்டுமென்று கேட்டால், அவளால் என்னவென்று பதில் சொல்ல முடியும்?

"ஹலோ மேடம்! என்ன? இன்னமும் பூலோகத் திற்கு வந்து சேரவில்லை போலிருக்கிறது?" என்று லேசாகத் தலையை நிமிர்த்தி அவன் கேட்க...

ஏனென்று தெரியாமல், அவளின் கன்னங்களில் இதமான இளஞ்சூடு பரவியது. அதை மறைக்கும் முயற்சியாகவே, வேகமாகக் குனிந்து பொருட்களை எடுத்து பர்ஸில் போட்டாள்.

கடைசியாக பர்ஸை, அழுந்த மூடியபோது, அவளின் விரல்கள் லேசாக நடுங்குவதைக் கண்டவன்...

"அடடா! எதற்கு இவ்வளவு பதற்றம்?" என்றவன், அவள் முகத்தை உற்று நோக்கி, "உன் கன்னங்களில் தோன்றியிருக்கிற சிவப்பைப் பார்த்தால்... எனக்கென்னவோ நீ என்னைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தாயோ என்று தோன்றுகிறது.

"என்ன அப்படித்தானா?" என்று குறும்பான சிரிப்புடன் கேட்டு, அவளைத் திகைப்படைய வைத்தான்.

அவனுடைய சிரிப்பு, 'இது வெறும் கிண்டல் தான்!' என்று தைரியம் கொடுக்க... தன்னுடைய திகைப்பை வெளிக்காட்டாமல் மறைக்க முயன்றபடி, "மனதிற்குள் பெரிதாக ஹீரோ என்ற எண்ணமாக்கும். ஆமாம். உங்களைப் பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தேன் என்று சொல்லி, உங்களை அசடு வழிய வைக்க வேண்டும் என்று தான் தோன்றுகிறது. இருந்தாலும் போகட்டும் என்று விடுகிறேன்!" எனத் தலையை நிமிர்த்தி, லேசான கர்வ அலட்சியம் போல் கூறினாள்.

"அசடு வழிவேனா? ரொம்பவும் தவறான கணிப்பு. உன்னைப் போல ஒரு அழகான பெண், வெறும் வாய் வார்த்தையாகத்தான் என்றாலும், 'உன்னை நினைத்தேன்' என்று சொல்வது, எனக்கு எவ்வளவு சந்தோஷமான பெருமைக்குரிய விஷயமென்று உனக்கென்னம்மா தெரியும்? அதையெல்லாம் அடியேனின் பாக்கியமாக அல்லவா கருதுவேன்!" என்று கூறி,



அவளைத்தான் அசடு வழிய வைக்கச் செய்தான் தயாபரன்.

"என்னது!" என்று விழிகள் அகன்று விரிந்தன அவளுக்கு.

## 10

இவன்! இவனென்ன உண்மையாகத் தான் உளறுகிறானா? என்று அவளையே ஒரு கணம் தடுமாற வைத்தது, தயாபரனின் முகபாவனை!

சமாளித்துக் கொண்டு, "இந்த மாதிரி விஷயங்களில், சாருக்கு ரொம்ப அனுபவம் போலிருக்கிறது. வார்த்தைகள் அப்படியே உருகி வழிகின்றதே?" என்றாள்.

"அனுபவத்திற்கு என்னம்மா குறை? அது அவ்வப்போது நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது..." என்றான் சிறு அசட்டையான குரலில்.

அவ்வப்போது நிகழ்வதா? ம்... இருக்கலாம்.

வசீகரத் தோற்றமும், வசதியுமாக இருக்கும் இவனிடம், அப்படி எத்தனைப் பெண்கள் 'உன்னை நினைத்தேன்!' என்ற சொல்லியிருக்கக் கூடும். ஒரு நான்கைந்து? அல்லது அதற்கும் மேலாகவா?

"என்ன? நான் சொன்னது உண்மைதானா என்று தோன்றுகிறதா! சர்வ நிச்சயமாக உண்மையேதான். எவ்வளவு தான் இனிப்பாக இருந்தாலும், பொய்

சொல்வதில் எனக்கு விருப்பம் இருப்பதில்லை!" என்று கூறித் தோள்களைக் குலுக்கினான்.

"ம்... நீங்கள் சொன்ன எல்லாவற்றையும் நம்புகிறேன். ஆனால் நீங்கள் சொன்ன விஷய மெல்லாம், உங்களுக்காக நடந்ததா என்று சொல்ல முடியவில்லை என்றாலும் மூன்று கோடி ரூபாய் மதிப் புடைய இந்த ரோல்ஸ் ராய்ஸ் காரை, பணம் இருக்கிறது என்பதற்காக, யார் கேட்டாலும் கார் கம்பெனி கொடுத்து விடாதாமே...?

"வாங்க நினைப்பவர்களின் பாரம்பரியம், செல்வ வளம், சமூக அந்தஸ்தை கணக்கில் கொண்டு தான் தருவார்கள் என்று பத்திரிகையில் படித்த ஞாபகம். ஸோ...!" என்று அழகான புன்முறுவலுடன், தொடர்ந்து ஏதோ சொல்ல முற்பட்டவளை...

"அம்மா... தாயே! போதும் போதும். இதற்கு மேலும் என் மூக்கை உடைத்து, முகத்தை டேமேஜ் செய்யாதே. பிறகு என்னாலேயே பார்க்க முடியாமல் போய் விடப் போகிறது!" என்று கூறித் தடையற்று சிரித்தவன்... தொடர்ந்து, "இந்தக் காரை வைத்து, உன்னால் எனக்கு இப்படியொரு மூக்குடைப்பு நிகழக் கூடுமென்று தெரிந்திருந்தால் உண்மையாகவே இதை வாங்கலாமா... வேண்டாமா? என்று யோசித்திருப்பேன். ஆனால்... இனிமேல் அதற்கு வழியில்லையே?" என்று பெருமூச்சு விட்டவனிடமிருந்து, ஏதோ ஒருவித இறுக்கம் விலகிச் சென்றிருந்தது.



இருவரிடையேயும், இயல்பாகவே இருந்த நகைச் சுவை உணர்வும், ஒருவரை ஒருவர் அவ்வப்போது வாரி விட்டுக் கொண்டு சென்றதாலுமோ என்னவோ?

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பை விரைவாகவே சென்றடைந்தார்கள்.

ஒற்றைப் படுக்கையறை மட்டும் கொண்ட சின்ன பிளாட்.

இந்த மாதிரியொரு இடத்தில், அவன் தங்கை எப்படி வாழ முடியும்? அவள் வசதியாக வாழ்ந்தவ ளாயிற்றே... என்ற நினைவை அடுத்துத் தோன்றிய, ஒருவேளை... அவளுக்கு இங்கே இடமில்லை என்பதை சொல்லாமல் சொல்லத்தான், ஒற்றைப் படுக்கையறை பிளாட்டா? என்ற நினைவு பின்னுக்குத் தள்ளியது.

ஸ்டீயரிங் வீலில் இறுகிய அவனுடைய கைகள் எதையோ உணர்த்த, "இப்போதே எதிர்மறையாக எண்ண வேண்டாம் தயாபரன்! முடிந்த வரை நான் உங்களுக்குச் சாதகமாகவே பேசுகிறேன்..." என்றுரைத் தாள் சௌந்தரியவதி.

நன்றி தெரிவிக்கும் விதமாக, லேசாக முறு வலித்துத் தலையசைத்தான் அவன்.

காலிங் பெல்லை அழுத்தி விட்டுக் காத்திருந்த வினாடிகளில், குண்டூசி விழுந்தால் கூடப் பெரும் சத்தம் எழும்புமளவிற்கு, அமைதி நிலவியது அங்கே.

முகம் முழுவதும் புன்னகையுடன் கதவைத் திறந்து, "சௌமிம்மா! வா... வா..." அன்புடன் அணைத்துக் கொண்டாள் ராதை.

சில கணங்களின் நலம் விசாரிப்பிற்குப் பிறகு தான் அருகே பக்கவாட்டில் நின்றிருந்த தயாபரன் கண்களில் பட்டான், அந்தப் பெண்மணிக்கு.

ராதை யோசனையோடு சௌமியைப் பார்க்க, "இவர் தயாபரன் ஆன்ட்டி. உங்களையும் ஆங்கிளையும் பார்த்துப் பேச வேண்டுமென்று வந்திருக்கிறார்!" என்று சின்னவள் கூற...

"தயாபரனா!" என்றவளின் பார்வை சட்டென்று இடுங்க... "அந்தப் பெண்ணுடைய சகோதரன்!" என்றாள்.

"ஆமாம்!" என்று சௌமி தலையசைக்க...

ஒருமுறை கண்களை மூடித் திறந்தாள் ராதை.

அச்சிறு இடைவெளியிலேயே, 'தாரிகாவை மருமகளாக எண்ணவில்லை என்றாலும் போகிறது. ஆனால் அவளின் பெயரைக் கூட கூற விரும்பவில்லை என்றால் எப்படி?' என்று தோன்றியது அவனுக்கு.

"வீடு தேடி வந்தவர் யாராக இருப்பினும், உள்ளே அழைத்துப் பேசுவதுதான் பண்பு என்பார் என் கணவர். எனக்கும் அவர் கருத்தில் மறுப்பு இருந்ததில்லை. உள்ளே வாருங்கள், தயாபரன்!" என்றாள் ராதை.



வெளியில் கிளம்புகிறவராய் ரெடியாகி, அறையை விட்டு ஹாலுக்கு வந்த சுதர்சனம், முகத்தில் எதையும் வெளிக்காட்டாமல், "வாருங்கள் தயாபரன்! உட்காருங்கள்..." என்று கூறினார்.

'தயாபரனை முன்பே தெரியுமா?' என்பது மாதிரிப் பார்த்த மனைவிக்கு, 'தெரியும்!' என்று கண்களாலேயே பதிலளித்தார்.

"நீயும் உட்கார் சௌந்தரிம்மா! வாசவன் சார் நலமாக இருக்கிறாரா?" என்று விசாரித்தார்.

மூவருக்குமாக மாம்பழச் சாறு எடுத்து வந்து கொடுத்து விட்டு, கணவர் அருகே சோஃபாவில் அமர்ந்தாள் ராதை.

மரியாதைக்காக கொஞ்சம் குடித்து விட்டு, "நன்றி!" என்றான் தயாபரன்.

"என்ன விஷயம் சொல்லுங்கள்?" என்றார்.

"எப்படி ஆரம்பிப்பது என்று தயக்கமாக இருந்தாலும், வேறு வழியில்லை சார்! நடந்து முடிந்து விட்ட எல்லா விஷயங்களுக்காகவும் நேரில் மன்னிப்புக் கேட்கத்தான் வந்தேன். முடிந்து விட்ட விஷயத்தை ஒதுக்கி விட்டு, அவர்களை ஏற்றுக் கொள்ளலாம் இல்லையா?

"எவ்வளவு நாளைக்குத் தொடர்ந்தாலும், ஏதோ ஒரு நாள் இந்தக் கோபத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துத் தானே ஆக வேண்டும்!" என்று பிசிரற்ற குரலில், நிதானமாகக் கூறினான் தயாபரன்.

"இதுதானே உங்கள் மூவரின் திட்டமாகவும் இருந்தது? நீங்கள் மூன்று பேர் மட்டும் தானா! இல்லை... உங்கள் வீட்டில் மற்றவரின் பங்கும் உண்டா?" என்று வெளிப்படையான கோபத்துடனே பேச ஆரம்பித்தார் சுதர்சனம்.

"இல்லை சார்! இதில் அவர்களுக்கு, எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. உங்களுக்கு எதனாலோ, தாரிகாவை மருமகளாக ஏற்க விருப்பமில்லாமல் போனது போலவே, நந்தனை மருமகனாக ஏற்பது முடியாது என்பதுதான் என் பெற்றோருக்கும்.

"ஆனால், சேர்ந்து வாழப் போகிறவர்களின் விருப்பம் உறுதியாக இருந்ததால், ரகசியமாகச் செய்து வைக்க வேண்டியதாயிற்று. என்றாவது ஒரு நாள் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை இருந்தது உண்மை தான்.

"ஆனால் அதைத் திட்டமிட்டு காய் நகர்த்தியதாகச் சொல்ல முடியாது!" என்றான் தெளிவாக.

"சரி. வேறு வழியின்றியே அப்படி நடந்ததாக இருக்கட்டும். எங்களை வேண்டாமென்று நினைத்து, தங்கள் இஷ்டத்திற்கு நடந்து கொண்டவர்களை, நாங்கள் எதற்காக மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும்? அவரவரின் வழியில் போக வேண்டியது தானே?" என்றார் சுதர்சனம்.



கணவரின் பேச்சை ஆமோதிப்பவராக ராதை அமைதியாகவே இருக்க... மீண்டும் தயாபரனே ஆரம்பித்தான்.

"இதை இப்படியே விட எனக்கு விருப்பமில்லை சார்! விட்டுவிட்டால், எப்போதும் ஒருவித உறுத்தல் இருந்து கொண்டே இருக்கும். அந்த உறுத்தல், எதையும் நிம்மதியாகச் செய்ய விடாது.

"உண்மையாகச் சொல்லுங்கள் சார்! நீங்கள் உங்கள் மகனை விலக்கி வைத்து விட்டு, நிம்மதியாகவா இருக்கிறீர்கள்? வெளியே காட்டிக் கொள்ளவில்லை என்றாலும், உள்ளூர தவித்தவாறுதான் நடமாடுவீர்கள். எங்கள் வீட்டில் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்.

"இதே மனநிலை தொடர்ந்தால், உங்களின் உடல் நிலையும் அல்லவா பாதிக்கும்? உங்களுக்குப் பிடிக் கிறதோ, இல்லையோ? நாம் உறவினர்களாகி விட்டோம். நீங்கள் ஆரோக்கியமுடன் இருக்க வேண்டும் என்பதிலே, எனக்கு உண்மையான அக்கறை இருக்கிறது!" என்று ஆழமான குரலிலே தெரிவித்தான் தயாபரன்.

"உங்களின் அக்கறைக்கு நன்றி சொல்வதுதான் சரி. ஆனால் எனக்கு அப்படிச் சொல்லத் தோன்ற வில்லை. நடந்த விஷயங்களுக்கு மூளையாகச் செயல் பட்டது நீங்கள் தானே! அப்படி எதுவும் நடக்காமல் இருந்திருந்தாலே... நாங்கள் நன்றாக இருந்திருப்போம்.

"எல்லாவற்றிற்கும் மேலாக இதிலே சௌந்தரியும், வாசவன் சாரும் எவ்வளவு வேதனையை அனுபவித் திருப்பார்கள். அக்கம் பக்கம் தெரிந்தவர்கள், என்ன வாயிற்று? என்று கேட்டபோது எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கும்?

"இதில் கஷ்டப்படுத்தவென்றே, காதுபட என்ன வேண்டுமானாலும் பேசுகிறவர்கள் எத்தனை பேர்? இவர்களுக்கு உங்களால் என்ன நியாயம் செய்துவிட முடியும் தயாபரன்?" என இறுக்கமான முகத்துடனே கேட்டார் சுதர்சனம்.

இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறான் என்று, அவன் முகத்தைப் பார்த்தாள் சௌந்தரியவதி.

பேச்சுவார்த்தை இன்னும் சீரியஸாக போகப் போகிறதோ என்றெண்ணியபோது... நிதானமாக ஆழ மூச்சிழுத்து விட்டு, தன்னைத் தயார்ப்படுத்தியவன், பிறகு, "என்னைப் பொறுத்த வரை, சௌந்தரி விஷயத் தில் அநியாயமாக நான் எதுவும் செய்துவிடவில்லை. சொல்லப் போனால், அந்தச் சமயத்தில், நான் அப்படி நடந்து கொண்டதுதான் சரி. நியாயமும் கூட. என் மீது இருக்கும் கோபத்தை ஒதுக்கிவிட்டு, இருவரும் இப்படி யோசித்துப் பாருங்களேன்...

"இன்னொரு பெண்ணை விரும்புகிற ஒருவனை மணந்து கொண்டு, உங்களின் பிரியத்துக்குரிய சௌந்தரி, எப்படி சந்தோஷமாக வாழ முடியும்?



"சந்தோஷம் இருக்கட்டும். முதலில் நிம்மதியாக இருந்திருக்க முடியுமா? சொல்லுங்கள்!

"நீங்கள் என்ன நினைத்துக் கொண்டு இருந் திருப்பீர்கள் என்றால், இதை நான் சௌமியுடன் கொஞ்சம் பழகிய பிறகுதான் உறுதியாகச் சொல்கிறேன். இப்படியொரு பெண் மனைவியாக வரும்போது, நிச்சயம் உங்கள் மகனுடைய மனது மாறிவிடும் என்றுதானே நினைத்திருந்தீர்கள்...

"ஆனால், சர்வ நிச்சயமாக அப்படி எதுவுமே நடந்திருக்காது சார். நிஜம்!

"தாரிகாவைத் தவிர வேறு ஒரு பெண்ணை நந்தன் ஏற்றிருக்கவே மாட்டார். அவர்களின் நேசம் அவ்வளவு உறுதியானது.

"நீங்கள் சொல்லுங்கள் ஆன்ட்டி! உங்கள் மகனுட னான உங்களின் வாழ்வு, ஆனந்தமாகத் தானே இருந்தது. ஒரே பிள்ளையென்று ரொம்பவும் பாசமுடன் வளர்ந்ததாகத்தான் நந்தன் சொல்லியிருக்கிறார். எது செய்தாலும், அது மற்றவரின் அபிப்பிராயத்தைக் கேட்ட பிறகுதான் செயல்படுத்தப்படும் என்றார்.

"உங்களைப் பற்றி விசாரித்தபோது கிடைத்த பதில், நான் எதிர்பார்த்ததை விடவே நல்லவிதமாக இருந்தது. ஒருவர் மீது ஒருவர், மிகவும் அன்பாக இருப்பீர்களாம் என்றார்கள்.

"இப்படிப்பட்ட குடும்பத்தில் ஒரு அங்கமாக இருந்த நந்தன், உங்களின் மறுப்பையும் மீறித் திருமணம்

செய்திருக்கிறார் என்றால்... பிறகு எல்லாம் சரியாகி விடும் என்ற உங்கள் எண்ணம் எப்படி நடந்திருக்கும்?

"எந்தப் பெண்ணாக இருந்தாலும், கணவன் மனதில் இன்னொருத்தி இருப்பதை விரும்புவாளா? பிறகு குடும்ப வண்டி எப்படி ஓடும்?

"நீங்கள் நல்லதென்று நினைத்துச் செய்யவிருந்த பெரும் தவறு, என்னால் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால் தான், அநியாயம் செய்து விட்ட மாதிரி எந்த எண்ணமும், சௌமி விஷயத்தில் எனக்கு இல்லை.

"இவ்வளவு நேரமாக நான் கூறியதை அமைதியாகக் கேட்டதற்கு நன்றி. என்ன பேச வேண்டும் என்று வந்தேனோ, கிட்டத்தட்ட பேசிவிட்டேன். இதற்கு மேல் நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

"என் மீது எவ்வளவு கோபமிருந்தாலும் பரவாயில்லை. தயவுசெய்து அதை என்னிடம் காட்டுங்கள். மேலும்... நந்தனைத் தண்டிப்பதாக நினைத்து, உங்களை நீங்களே தண்டித்துக் கொள்ள வேண்டாமே... ப்ளீஸ்!" என்றான் தயாபரன்.

மௌனத்தை உடையவராய், "எங்களையே தண்டித்துக் கொள்வதாக எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் சுதர்சனம்.

"காலம் காலமாக வாழ்ந்த இடத்தை விட்டுவிட்டு, நீங்கள் இங்கே வந்திருப்பதற்கு வேறு என்ன பெயர் சார்?" என்றான் அமைதியாகவே.



சுதர்சனம் யோசிப்பது போல் தோன்றவும், ராதையின் முகத்தைக் கூர்ந்தான்.

அந்த அம்மாவின் முகத்திலே, கொஞ்சம் கவலை கூடியிருந்தது. சொந்த இடத்தின் ஞாபகமும், அந்த வாழ்வும் கண் முன்னே தோன்றியது போலும்!

சௌந்தரியவதிக்குமே, தான் பேசுவதற்கு இது தான் சமயமென்று தோன்றியது. எனவே, "ஆன்ட்டி... அங்கிள்!" என்றழைத்தவள், "நீங்கள் கோவையில் ரொம்பவே சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தவர்கள். வீடும் டிபார்ட்மென்ட் ஸ்டோரும் தான் பிடித்தமான இடம். அப்படிப்பட்ட இடத்தை இன்றைக்கு வேண்டாமென்று நினைப்பது சரிதானா?

"இனி எப்போதுமே வேண்டாமென்று சொல்கிற அளவிற்கு, மாற்ற முடியாததென்று எதுவும் நடந்து விடவில்லை அங்கிள்! கோவையைத் தவிர, வேறு எங்கேயும் உங்களால் நிம்மதியாக இருக்க முடியாது. அந்த வீட்டிலும் கடையிலும் உங்களுக்கிடையில் நடந்த எத்தனையெத்தனையோ அழகிய நிகழ்வுகள் எல்லாம் வீணாகி விடக்கூடாது.

"அப்படி வீணாவதில், எனக்குத் துளியும் விருப்பமில்லை ஆன்ட்டி! சொத்தை விற்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தயவு செய்து விட்டுவிடுங்கள். எனக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னீர்களே, இதைச் செய்தீர்களென்றால்... எனக்கு ரொம்பச்

சந்தோஷம். ப்ளீஸ்!" என்று கூறியபோது, அந்தத் தம்பதியினரைப் போலவே தயாபரனும் கூட வியப்பான முகபாவனையுடன் தான் அவளை நோக்கினான்.

"சொத்தை விற்க முடிவெடுத்த விஷயமெல்லாம் உனக்கெப்படிம்மா... நந்தன்? அவன் ஏதாவது சொன்னானா?" என வேகமுடன் வினவினார் சுதர்சனம்.

தயாபரனை ஒரு பார்வை பார்த்து விட்டு, "ஆமாம் அங்கிள்! நந்தன் என்னை நேரில் சந்தித்துப் பேசினார்..." என்றாள் சௌந்தரியவதி.

"எவ்வளவு தைரியம் அவனுக்கு? கல் நெஞ்சக் காரனாகச் செயல்பட்டு விட்டு... எந்த முகத்தை வைத்துக் கொண்டு உன்னிடம் பேச வந்தான். அவனை எதுவும் கேளாமல், சும்மாவா விட்டாய்?" என்று ஒருசேர கோபப் பட்டார்கள் இருவரும்.

"அது சும்மா விட்டேன் என்று சொல்ல முடியாது அங்கிள்! நானும் கோபத்தில் கடுமையாகவே பேசத்தான் செய்தேன். அந்தக் கோபமும் கூட, தாத்தாவிற்கு உடல்நலமின்றிப் போய் விட்டதே என்பதால்தான். மற்றபடி எனக்கு நந்தன் மீது எந்த வருத்தமும் இல்லை.

"உண்மைதான் ஆன்ட்டி! முடிந்து போன விஷயத்தை பின்னிப் பின்னிப் பேசுவதால் என்ன பிரயோஜனம்? இனிமேல் நடக்க வேண்டியவற்றைப் பற்றி யோசித்தால் தான், தற்போதைய உங்களின் மனநிலையில் மாற்றம் வரும். நீங்கள் வருத்தப்படக் கூடாது என்பதைத்தான் நந்தன் விரும்புகிறார்.



"மன்னிக்கவே முடியாத குற்றம் எதையும் அவர்கள் செய்து விடவில்லை என்றுதான், இப்போது எனக்குமே தோன்றுகிறது.

"இந்த மனநிலை விரைவாகவே உங்களுக்கும் வரவேண்டும். இப்போதைக்கு இந்த வெறுப்பையாவது எனக்காக விட்டு விடுங்கள். ப்ளீஸ்! தயாபரன் சொன்னது போல, அநியாயம் நடந்துவிடவில்லை என்று நினைத்தாலே, மெல்ல மெல்ல எல்லாம் சரியாகிப் போகும்..." என்று, தன் மனதில் இருந்ததைக் கூறி முடித்தாள் சௌந்தரியவதி.

ஆண்கள் இருவரும் வெவ்வேறு எண்ணங்களுடன் சௌமியைப் பார்க்க, கண்களில் லேசாகத் திரையிட்ட நீருடன் எழுந்து சென்று, "உன் குணத்திற்கு, உன்னைக் கண்ணின் மணியாகப் பார்த்துக் கொள்கிற கணவன் கிடைப்பான் கண்ணு... அவனுடன் காலம் முழுக்கச் சந்தோஷமாக நீ வாழ்வாய்!" என்று ஆசீர்வதித்துக் கூறி, சௌமியை அணைத்துக் கொண்டாள் ராதை.

அவர்கள் அனைவரிடையேயும், மிகவும் நெகிழ்வான தருணமாக இருந்தது அது.

சில கணங்களின் மௌன நிலைக்குப் பிறகு, சௌமியை இதமான ஒரு புன்னகையுடன் ஊடுருவிப் பார்த்தான் தயாபரன்.

அவள் கனவிலே கண்ட, அவனுடைய புன்னகை முகம் இதுதானே?

உண்மையாகவே இது நிஜம் தானா? என்று இருமுறை இமைகளை அழுந்த மூடித் திறந்து பார்த்தாள் சௌந்தரி.

நிஜமேதான்! புன்னகையிலே உல்லாசம் கூட, 'என்ன?' என்று கேட்பது போல, புருவத்தை உயர்த்தினான் அவன்.

ஏனென்று தெரியாமல், இதயம் வேகமெடுத்துத் துடிக்க... பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் அவள்.

"ராதையின் ஆசைதான், என்னுடைய விருப்பமும் கூட சௌமிம்மா!" என்ற சுதர்சனம், தொடர்ந்து, மற்ற யாருக்காக இல்லையென்றாலும், உன் மகிழ்ச்சிக்காக எங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறோம்..." என்று கூறினார்.

"ரொம்பத் தேங்க்ஸ் அங்கிள்!" என்று முகமெல்லாம் பூவாக மலரக் கூறியவள், "மாற்றம், சொத்து விற்பனைக்கும் சேர்த்துத்தானே?" என்று தெளிவுபடுத்திக் கொள்ளக் கேட்க...

"போக்கிரி!" என்று செல்லமாகக் கூறி, சின்னவளின் கன்னத்தை வருடி முறுவலித்ததோடு, "என்ன சுதா... சௌமி கேட்டதற்கும் சேர்த்துத்தானே சொன்னீர்கள்?" என்று கேட்டாள் ராதை.

"இப்படியொரு முறுவலுடன் நீ கேட்கும் போது, மறுப்பேதும் உண்டா ரதிம்மா! சர்வ நிச்சயமாக அதற்கும் சேர்த்துதான்!" என்று சிரிப்புடனே கூறினார் அவர்.



"ஷ்... போங்கள் நந்துப்பா! சின்னப் பிள்ளைகள் முன்னால் இப்படித்தான் பேசுவதா?" என்று கூறிய போதும், ராதையின் முகம் மேலும் அழகாக சிவப்பேறத் தான் செய்தது.

பேச்சை ஆரம்பித்தபோது இருந்த சூழ்நிலை, இப்போது அப்படியே எதிராக மாறியிருந்ததை, அனைவருமே உணர்ந்தார்கள்.

இதற்கு மேல், நிச்சயம் நல்ல விஷயங்கள் நடக்கும் என்ற நம்பிக்கை... தயாபரனின் முகத்தில் தோன்றியது.

எதிரே அமர்ந்திருந்த சுதர்சனத்தைப் பார்த்து, "சௌமியின் மகிழ்ச்சிக்காகவே என்றாலும், நீங்கள் மாற்றிக் கொள்ள முயற்சிப்பதாகச் சொன்னதற்கு... நன்றி சார்!" என்றுரைத்தான்.

"நன்றி! சௌமியை உடன் அழைத்து வந்ததற்காக நானும் கூட உங்களுக்குச் சொல்ல வேண்டும். அடுத்தடுத்து நடந்த விஷயங்களால் இறுகிப் போயிருந்த மனதிற்கு, இப்போதுதான் கொஞ்சம் நன்றாக இருக்கிறது..." என்று கூறினார் அவர்.

அடுத்துக் கடந்து சென்ற அரைமணி நேரமும் தடையற்ற பேச்சுடனே சென்றது.

பிறகு இருவரும் விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தார்கள்.

காரின் கதவைத் திறந்து உள்ளே சென்றபோது தான்... இருக்கைக்குக் கீழே கிடந்த டூ-வீலர் லைசென்ஸ் கார்டு அவன் கண்களில் பட்டது.

கையில் எடுத்துப் பார்த்து, "உன்னுடையது!" என்று கூறி, அவள் பக்கமாக நீட்டியவன்... சட்டென்று கார்டைத் தன் பக்கமே திருப்பி, "ஹேய்! உன் முழுப் பெயர் 'அதிரூப சௌந்தரியவதி'யா?" என்றான், கண்கள் பளபளக்க.

## 11

'ஆமாம்!' என்று தலையசைத்தவாறு, கையை நீட்டி வாங்கினாள்.

மீண்டும் ஒருமுறை முழுப் பெயரையும் சொல்லிப் பார்த்து விட்டு, "இந்தப் பெயரை யார் வைத்தார்கள்? உன் தாத்தாவா... பெற்றோரா?" என்று கேட்டான்.

"எதற்காக கேட்கிறீர்கள்? தாத்தா தான் வைத்தார்."

"உனக்கு மிகவும் பொருத்தமான பெயர். தோற்றத்திற்காக மட்டும் சொல்லவில்லை. உன் மனதும் அதிரூப சௌந்தரியம் தான். சற்று முன்பு, நந்தன் அம்மா உன்னை நெகிழ்ந்து போய் அணைத்துக் கொண்டார்களே... அதுதான் உன் உள்ளத்தின் பேரழகிற்குச் சான்று சௌமி!

"நந்தனுக்கு உதவி செய்வதற்காகத்தான் அவரைச் சந்தித்தாய் என்று தெரியாமல்... எவ்வளவு இழிவாக



நினைத்து உன்னிடம் மோசமாக... மோசமாக என்று என்ன நாசுக்கு? மிகவும் கேவலமாக நடந்து கொண்டேன்.

"நந்தன் உன்னை எதற்காகச் சந்தித்தார் என்ற உண்மையும், இப்போது தானே தெரிந்தது. இருந்தாலும், என் விஷயத்தை முழுக்க ஒதுக்கி விட்டதைப் போல, உண்மையான அக்கறையுடன் நீ பேசியதை... சாதாரண விஷயமாக எண்ணிவிட முடியாது.

"சின்னதும், பெரியதுமான உன் எல்லா உதவிகளுக்கும், மனமார்ந்த நன்றி!" என்றான்.

"ரொம்பவும் பெரிதுபடுத்தி... உயர்த்திப் பேச வேண்டாம் தயாபரன்! பிறகு எனக்கு ஜலதோஷம் வந்துவிடப் போகிறது!" என்று சிறு முறுவலுடன் கூறி, பேச்சை மாற்ற முயற்சித்தாள் அவள்.

புரிந்தவனாக, "இந்தப் புகழ்ச்சிக்கு, நீ முழுத் தகுதியானவள் தான்!" என்றான் முழு மனதுடன்.

"ஓ! அப்படியென்றால், பாராட்டுக்கு நன்றி!" என்றாள் அவளும்.

"வெல்கம்!" என்று தலையசைத்து ஏற்றவன்...

"நந்தனின் பெற்றோர், இவ்வளவு அன்யோன்யமான தம்பதியினராக இருப்பார்கள் என்று நான் நினைக்கவே இல்லை. இவர்களைப் போன்ற உள்ளம் கொண்டவர்களால், நிச்சயம் ரொம்ப நாளைக்கு, கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்திருக்க முடியாது.

"என் தங்கையை இவர்கள் ஏற்றுக் கொண்டால், அவள் வாழ்க்கை இன்னமும் மகிழ்ச்சியானதாக மாறும் என்பதில், எனக்குச் சந்தேகமே இல்லை சௌமி! விரைவில் இது நடக்க வேண்டுமென்று, கொஞ்சம் தவிப்பாகக் கூட இருக்கிறது.

"அதுவும், அந்த ஆன்ட்டி உன்னிடம் காட்டிய அன்பு! அதே மாதிரி என் தங்கைக்கும் கிடைத்தால், அவள் அதிர்ஷ்டக்காரி என்றே சொல்வேன்!" என்றான், சிறு ஏக்கம் வெளிப்பட்ட குரலில்.

ஒரு மாதிரியாக அவனைப் பார்த்தபோது, "என்ன? ஏதோ அதிசயத்தைக் கண்டுவிட்டாற் போல் பார்க்கிறாய்?" என்றான்.

"ம்... கிட்டத்தட்ட அப்படியேதான். உங்களின் இவ்வளவு அன்பிற்கும் பாத்திரமான உங்களின் தங்கையை, நிச்சயம் ஒரு நாள் பார்க்க வேண்டுமென்று தோன்றுகிறது."

"கண்டிப்பாக ஒரு நாள் பார்க்கலாம். கொஞ்சம் பிடிவாதக்காரியாக இருந்தாலும், என் தங்கை நல்லவள் சௌமி! இப்போது கணவனுக்காக நிறையவே மாறி யிருப்பதாகச் சொன்னாள். கேட்டபோது எனக்கு வியப் பாகத்தான் இருந்தது.

"அவளுக்கு ஒன்று வேண்டுமென்று முடிவு செய்து விட்டால், ஒரே பிடியாக நின்று வாங்குகிறவள்... இது மாதிரிச் சொன்னால் வேறு என்ன தோன்றும்?



"சிறு வயது முதலே... எங்கள் வீட்டில் எல்லோருக்கும் அவள் அருமை. எனக்கு இன்னமும் கொஞ்சம் ஸ்பெஷல். அவளுக்கும் நான் என்றால் அப்படித்தான்!" என்று, இளமையானதொரு முறுவலுடன் கூறினான் தயாபரன்.

அப்போது தாரிகாவிடமிருந்து அழைப்பு வரவும்... காரை ஓரமாக நிறுத்திவிட்டு, ஃபோனை ஆன் செய்து பேசலானான்.

பரஸ்பர நலம் விசாரிப்பிற்குப் பிறகு, "எல்லாம் விரைவில் சரியாகி விடும் தரும்மா! சில தினங் களிலேயே உங்கள் இருவரையும் சென்னைக்கு வர வழைக்க ஏற்பாடு செய்கிறேன். தயாராய் இரு.

"உன்னை நேரில் பார்த்தால், அப்பாவும் அம்மாவும் நடந்ததையெல்லாம் முடிந்த வரை ஒதுக்கி விடுவார்கள். இப்போது உனக்குத் திருமணமாகி விட்டது. கணவன் வழி உறவினர்கள், முக்கியமாக நந்தனின் பெற்றோருடைய ஆசியும் அன்பையும் பெற நீ முயற்சி செய்து தானே ஆக வேண்டும்.

"அதுதான் உன் எதிர்காலத்திற்கு நல்லதும் கூட. புரிந்ததாடா! ம்... ஓ.கே. நான் மாலையில் நந்தனிடம் பேசிக் கொள்கிறேன். பை!" என்று பேச்சை முடித்து விட்டுக் காரைக் கிளப்பினான்.

'பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டி' என்பது இதைத்தானோ?

முதலில் தங்கை ஆசைப்பட்டதை நிறைவேற்றி விட்டுப் பிறகு உறவினரின் விரிசல்களையும் சரி செய்கிறானாமாம். அதற்கு அருமைத் தங்கையும் ஒத்துழைக்க வேண்டுமாம்.

சரியான காரியவாதி தான் என்றெண்ணிய போது, "என்ன? மீண்டும் எனக்கு அர்ச்சனை நடக்கிறது போலும்!" என்று அவன் கேட்கவும்... திடுக்கிடலை மறைத்துக் கொண்டு...

"பெரிதாக ஒன்றுமில்லை. உங்கள் விஷயம் ஒன்றே குறியாகச் சாதிக்கிறீர்களோ என்று தோன்றியது!" என்றாள்.

"மறைமுகமாக... சரியான சுயநலவாதி என்கிறாய்! ம்... இதைத்தான் உங்கள் ஊரில் பெரிதாக ஒன்று மில்லை என்பீர்களாக்கும்..." எனக் கிண்டலாகக் கேட்டவன், "போகட்டும். அப்படி இருப்பதிலே என்ன தவறு என்கிறாய் சௌமி? எனக்கென்னவோ சுயநலத் திலிருந்து தான் பொது நலமே பிறக்கிறதோ என்று தோன்றுகிறது.

"அட முறைக்காதேம்மா! நீயே இப்படி யோசித்துப் பார். தாமஸ் ஆல்வா எடிசன் மின்சாரப் பல்பை மாய்ந்து மாய்ந்து கண்டுபிடித்ததற்குக் காரணம்... அவருக்கு இருட்டைக் கண்டாலே பயமாம். எப்போதடா இந்த இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குப் போவோம் என்ற எண்ணம்.



"எடிசன் தன் இருட்டுப் பயத்தைப் போக்கவென்று கண்டுபிடித்த பல்பு தானே... பின்னாளில் பொதுநலமாக மாறி எல்லோருக்கும் பயன்படுகிறது!" என்று சற்றும் அலட்டாமல் கூறினான் தயாபரன்.

"பிரமாதம். சுயநலத்திற்கு உதாரணமாக, எடிசனை யெல்லாம் தட்டி எழுப்புவீர்கள் என்று எண்ணாமல் போனது, என் தவறு தான். தெரியாமல் செய்த பிழையென்று நினைத்து, தயவு செய்து மன்னித்து விடுங்கள் சார்!" என்றவளுக்கு... அதற்கு மேல் சிரிப்பை அடக்கி வைக்க முடியாமல் போக... இருவரும் சிரித்த படியே வீட்டை அடைந்தார்கள்.

"சென்ற காரியம் என்னவாயிற்று?" என்று வாசவன் விசாரிக்க...

நடந்தவற்றை தயாபரன் தெரிவித்த இடை வெளியில், சமையலறைக்குள் சென்று, ஜில்லென்ற மோரில் வெள்ளரிப் பிஞ்சையும், கொத்துமல்லித் தழை யையும் பொடிப்பொடியாக நறுக்கிப் போட்டு, துளி உப்பையும் சேர்த்து, இரண்டு தம்ளரில் ஊற்றிக் கொண்டு வந்து இருவரிடமும் கொடுத்தாள்.

இவனுக்கு இது பிடிக்குமோ என்னவோ? என்று தோன்றியபோது, சொட்டு மிச்சம் வைக்காமல் என்பார்களே... அப்படிக் குடித்து விட்டுத்தான் டம்ளரைக் கீழே வைத்தான் அவன்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, பொதுவான ஒரு தலையசைவுடன் தயாபரன் கிளம்பிச் செல்லவும், முடிக்க வேண்டிய தன் வேலைகளைப் பார்க்கச் சென்றாள் சௌமி.

பின் மாலையில், சற்று நேரம் கண்ணயர்ந்து விட்டு எழுந்தபோது, நந்தனிடமிருந்து அழைப்பு வர... ஃபோனைக் கையிலெடுத்தாள்.

"ரொம்ப நன்றி சௌந்தரி!" என்றான், மகிழ்ச்சியான குரலில்.

"தயா ரொம்பவும் நம்பிக்கையுடன் பேசினார். எல்லாம் விரைவில் நல்லபடியாகவே முடியுமென்றிருக்கிறார். முக்கியமான காரணம், நீ உடன் வந்தது தானாம்.

"தேங்க்ஸ்ம்மா! இப்போது தான் கொஞ்சம் நிம்மதியாக இருக்கிறது!" என்று மனதாரக் கூறினான்.

இதைத் தொடர்ந்து, தயாபரனின் ஏற்பாட்டில் நந்தனுக்குச் சென்னை அலுவலகத்திற்கு மாற்றல் கொடுக்கப்பட, மனைவியோடு சென்னையில் குடியேறினான்.

அலுவலக விஷயத்தில், மகனுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட எதிலும், சற்குணம் தலையிடுவதில்லை.

அதே போலத்தான் தயாபரனுமே நடந்து கொள்வான்.



மகள் சென்னைக்கு வரப் போகிறாள் என்ற செய்தியைக் கேட்டதும், இருவரின் மனதுமே உள்ளூரத் தடுமாறத்தான் செய்தது.

ஆனால், அதை வெளிக்காட்டாமல் சமாளித்துக் கொண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

வீண் தர்மசங்கடம் எதற்கு என்று நினைத்து, தயாபரனுமே நந்தனை வேறு ஏரியா கிளைக்குத் தான் மாற்றியிருந்தான், அலுவலக விஷயமாக.

அதிகபட்சமாக, வாரத்திற்கு ஒரு நாளோ இரண்டு நாளோ மட்டும், தயாவும் நந்தனும் நேரில் சந்தித்துப் பேசினால் போதும் என்ற நிலை.

அப்படித்தான், அன்றைக்குத் தந்தையும் மகனும் இருந்த அலுவலகத்திற்குச் சென்றான் நந்தன்.

ஓரளவிற்குப் பெயர் வாங்கிய ஒரு டயர் தொழிற்சாலையின் விஸ்தரிப்பிற்காக, சுபதனம் நிதி நிறுவனத்தை நாடியிருந்தார்கள், டயர் நிறுவனத்தினர்.

அவர்கள் கேட்டிருந்த தொகையின் அளவு, சுமார் இரண்டு கோடி.

டயர் நிறுவனத்திற்கு நேரில் சென்று விவரம் சேகரிக்கும்படி, முன்பே கூறியிருந்தான் தயாபரன்.

சேகரித்த தகவலுடன் சென்றான் நந்தன்.

"விற்பனை விவரம் நன்றாகவே இருக்கிறது தயா! பணம் பட்டுவாடாவிலும் குறையில்லை. பொருளுக்கான

தேவையும், நாளுக்கு நாள் கூடிக் கொண்டே தான் இருக்கப் போகிறது. பணத்திற்கு ஈடாக, குடியிருக்கும் வீட்டையும், சுற்றியுமிருக்கிற கொஞ்சம் காலி இடத்தின் பத்திரத்தையும் தருவதாகச் சொன்னார்கள்.

"அந்த இடத்தில், அவற்றின் இன்றைய மதிப்பு, கிட்டத்தட்ட ஒன்றரைக் கோடியைத் தாண்டும்!" என்று கூறி, அதன் விபரத்தையும் கொடுத்தான்.

கவனமாக ஆராய்ந்ததில், எல்லாம் சரியாகத்தான் இருந்தது.

சிறு யோசனையுடன் மேசை மேல் பரப்பியிருந்த பேப்பர்களை எடுத்து அடுக்கி ஃபைலினுள் வைத்து கிளிப் போட்டு விட்டு...

"எல்லாம் சரிதான் நந்தன்! ஈடாக இன்னமும் ஐம்பது லட்சத்திற்கு ஏதாவது தேவை. அது இல்லாமல் கொடுப்பது ரிஸ்க் தானே! நாம் கட்டுக் கட்டாகக் கொடுக்கப் போகிற பணம் வட்டியும் முதலுமாக முழுவதும் திரும்பி வர வேண்டும்.

"எனக்கென்னவோ, எவ்வளவு ஈடு காட்டுகிறார் களோ, அவ்வளவு மட்டும் கொடுத்தால் போதுமென்று தோன்றுகிறது.

"அது ஒரு பக்கம் இருந்தாலும், உங்கள் அட்வைஸ் முக்கியமாயிற்றே! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் தயாபரன்.



"ஈடு குறைவாகத்தான் இருக்கிறது என்றாலும், தொழிலைப் பல மடங்கு மேலே கொண்டு செல்கிற உறுதியும், உழைப்பும் அவர்களிடம் இருக்கிறது தயா!

"சற்றுப் பெரிய குடும்பம். பெரியவர்கள், இளைஞர்கள் எல்லோரும், இந்தப் பணம் கிடைக்கும். நிச்சயம் இன்னும் பெரிய இடத்திற்குப் போய் விடலாம் என்று நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

"நூறு சதவீதம், பணம் வட்டியும், முதலுமாகத் திரும்பி விடும். அத்துடன் ஈடாக வைக்கிற இடத்தின் மதிப்பும், நாள் செல்லச் செல்ல கூடிக் கொண்டு போகுமென்பதால், தயங்காமல் கொடுக்கலாம் என்பது தான் என் கருத்து.

"மேலும், வட்டிச் சலுகையாக இருபத்தைந்து பைசா குறைத்துக் கொடுத்தால், அது அவர்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும்!" என்று தெரிவித்தான் நந்தன்.

"ஹேய்... என்னப்பா! உனக்கு சுபதனம் சம்பளம் தருகிறதா? அல்லது அந்த ஜி.ஆர்.டி. டயர் கம்பெனியா? ரொம்பவும் தான் சலுகை காட்டச் சொல்கிறாய்!

"ம்... ம்... எனக்குத் திடீரென்று வேறு ஒரு சந்தேகம். குடும்பஸ்தனாகி விட்டதால், இன்னும் சம்பாதிக்க வேண்டுமென்று, பார்ட் டைமாக அந்தக் கம்பெனிக்கும் அட்வைஸராகி விட்டாயா?" என்று கிண்டலாகக் கேட்டான் தயாபரன்.

விஷயம் புரிந்தவனாக மெல்லச் சிரித்து, "இது வரைக்கும் இந்த ஐடியா தோன்றியதில்லை. ஆனால் நல்ல ஆஃபர் வந்தால் யோசிக்கலாமென்று தோன்று கிறது!" என்று கேலியாகவே பதிலளித்தான் நந்தன்.

உடன் சேர்ந்து சிரித்தவன் தொடர்ந்து, "தொகை பெரிய அளவிலே இருக்கும்போது, நாமாகவே பைசா கணக்கில் குறைப்பது வழமைதானே. இந்த முறை, வழக்கத்தை விட சற்றுக் கூடுதலாகக் குறைக்கச் சொல்கிறீர்கள்.

"இதற்கு அப்பாவின் சம்மதமும் வேண்டுமென்ப தால், நான் அவருடன் பேசி முடிவு செய்து விட்டு, இறுதியாக எவ்வளவு குறைக்க முடியுமென்று சொல் கிறேன்!" என்று கூறினான் தயாபரன்.

நந்தன் கிளம்பிச் சென்ற பிறகு, தந்தையைப் பார்க்க அவரின் அறைக்குச் சென்றான்.

அங்கே அறையினுள், கொஞ்சம் வேகமான எட்டுகளுடன் நடந்தவாறு இருந்த பெற்றவர், மகன் உள்ளே நுழைந்ததும்,

"ஏன்? அவர் கார் என்னவாயிற்றாம்? டூ வீலரில் வந்து போகிறார்?" என்று சாதாரணக் குரலில் கேட்பது போல் கேட்கவும், சட்டென்று அவரின் முகத்தைப் பார்த்தான் தயாபரன்.

அங்கே அவன் என்ன கண்டானோ?



# 12

நந்தன் - 'அவர்' ஆகியிருக்கிறார்! கூடிய விரைவில், இது 'மாப்பிள்ளை'யில் போய் முடிய வேண்டும் என நினைத் தவன்...

"பெரிதாகக் காரணமில்லைப்பா! தரு வீட்டில் தனியாக இருப்பதால், போரடித்தால் திடீரென்று வெளியே எங்கேயாவது போய் வர வசதியாக இருக்கும் என்று காரை வீட்டில் நிறுத்தி விட்டு, பைக்கில் தான் அலுவலகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்!" என்று மகன் கூறியதைக் கேட்டு பெற்றவரின் புருவம் உயர்ந்தது.

மாலையில் வீட்டுக்குச் சென்றதும், மனைவியிடம் இதைப் பற்றிக் கூறியவர், இரவு உணவிற்குப் பிறகு, சோஃபாவில் சற்று நேரம் அமர்ந்து பேசுகிற தருணத்தில், நாளை முதல் அவருக்குக் கம்பெனி மூலமாகக் கார் அனுப்பும்படி பணித்தார்.

இதுதான் கல் கரைகிற நேரம் போலும்?

உள்ளூரத் தோன்றிய மகிழ்ச்சி, முகத்தில் புன்னகையாக வெளிப்பட, "அப்படியே செய்து விடுகிறேன்" என்றான் மகன்.

ஆனால் நந்தனோ, "இது வரை அலுவலகத்தில் இல்லாத இந்தத் திடீர்ச் சலுகை, இப்போது எதற்காக தயா? அதுவும்... ஏற்கெனவே பெட்ரோல் அலவன்ஸ் உண்டு எனும்போது... இந்தச் சலுகை எனக்காக ஏற்படுத்தப்பட்டது என்றால், அலுவலகத்தில் இருக்கிற

எல்லா அட்வைஸர்களுக்கும் கார் கொடுப்பீர்கள் தானே?

"கிட்டத்தட்ட நாற்பது பேர். இது கம்பெனிக்கு அனாவசிய செலவென்பது, என்னைப் போலவே உங்களுக்கும் தெரியுமே? பிறகு எதற்கு இதெல்லாம்?

"உங்கள் தங்கையின் கணவன் என்பதாலா? வேண்டாம் தயா! எனக்கு இது மாதிரியெல்லாம் செய்வது பிடிக்கவில்லை.

"சுபதன உரிமையாளர்கள், என்னுடைய வேலை - திறமைக்கு மட்டும் மதிப்பளித்தாலே போதும். மற்றபடி, உங்களின் உறவுமுறை சலுகைகளை நான் ஏற்பதற்கில்லை தயா!

"தாரிகா என் மனைவி. அவளைச் சந்தோஷமாக வாழ வைப்பது என் கடமை. அவள், எனக்காக தன் குடும்பத்தையே விட்டு வந்திருக்கும்போது, நான் காரை விடுத்து பைக்கில் வருவது... ரொம்பவே சாதாரண விஷயம் தான். உங்கள் வீட்டில் அவள் இளவரசியாக வாழ்ந்தவள். எனக்கும் அப்படித்தான் தயா!

"நானும் என்னால் முடிந்த வரை, அவளை வசதியாக வாழ வைக்க வேண்டுமென்று தான் நினைக்கிறேன். எப்போதும் நினைப்பேன்...

"அதனால் இதையெல்லாம் நீங்கள் பெரிதாக எண்ண வேண்டாம். சொல்லப் போனால், என் பைக்கில் லிஃப்ட் கொடுத்த போதுதான் எங்களுக்குள் அறிமுகமானது.



"அதனால், இது எனக்கு வெரி ஸ்பெஷல் பைக். ஓட்டும் போதெல்லாம் தரு கூடவே வருவது போல இருக்கும். அதெல்லாம் ஒருவித இனிய அனுபவம் தயா!" என்று கூறிக் கண் சிமிட்டிச் சிரித்தான் நந்தன்.

"தரு ரொம்ப அதிர்ஷ்டசாலி நந்தன்!" என்று அவன் தோளில் தட்டிப் புன்னகைத்து விட்டுத் திரும்பிய தயாபரனுக்கு மனது உற்சாகமானது.

தங்கைக்கு நந்தன் பொருத்தமானவன் தான் என்ற தன் எண்ணம், நூறு சதவீதம் சரியே என்று நினைத்தபடி, நந்தனிடம் பேசிய தகவலைத் தந்தையிடம் தெரிவித்தான்.

முழுமையான தகவல்!

அப்போது உடனிருந்த தாயின் முகமும் பிரகாசமானது. ஏனெனில் அது வரை அவர்களின் காதிற்கு வந்த சேதியும் இனிமையானதாகத்தான் இருந்தது.

மகள் மகிழ்ச்சியோடு வாழ்கிறாள். தன்னுடைய கணவரைப் போலவே, அவள் கணவரும் அவளை அன்பாகப் பார்த்துக் கொள்கிறார் என்ற நினைவே, தேனாக இருந்தது.

பிறகு, கணவன் மனைவி இருவரும் சற்று நேரம் தனித்துப் பேசிவிட்டு, மகனை அழைத்தார்கள்.

"இந்த ஞாயிறன்று தருவையும், நந்... மாப்பிள்ளையையும் நம் வீட்டிற்கு அழைத்து, சின்னதாக ஒரு விருந்து வைக்கலாம் என்று நானும் அம்மாவும்

நினைக்கிறோம். நீ என்னப்பா சொல்கிறாய்?" என்று கேட்டார்கள்.

"யாஹு...!" என்று தன் சந்தோஷத்தை வெளிப் படையாக வெளிப்படுத்தியவன், "உங்களிடமிருந்து இப்படியொரு வார்த்தைக்காகத்தான் காத்திருந்தேன் அம்மா! ரொம்ப ரொம்பத் தேங்க்ஸ்ப்பா... இருவருக்கும்!" என்று இருவரின் கையையும் அழுந்தப் பற்றிக் கூறி னான் மகன்.

அந்த அழுத்தமான பற்றுதலில், ஆயிரமாயிரம் விஷயம் இருப்பதை, மூவருமே உணர்ந்தார்கள்.

"நாங்கள் தான் உனக்கு நன்றி சொல்ல வேண்டும் கண்ணா! அன்றைக்குக் கோபப்பட்டதற் காக... ஸாரியும் கேட்க வேண்டும்!" என்ற தாயின் குரல் தடுமாறி இறுகுவதை உணர்ந்து...

"ஸாரியா? எந்த ஸாரிம்மா... சர்வலட்சணம் பொருந்திய சாமுத்திரிகா பட்டா? அதனால் என்ன நாளைக்கே போத்தீஸ்க்குப் போய் வாங்கி விடலாம். ஓ.கே.வா!" என்று கூறிக் குறும்பாகச் சிரித்தான் தயாபரன்.

தன்னுடைய தடுமாற்றத்தைப் போக்கவே, மகன் இப்படி முயற்சிக்கிறான் என்று, பெற்றவளுக்குத் தெரியாமலா போய் விடும்!

"போடா படவா!" என்று செல்லமாகத் திட்டி, மகனின் கன்னத்தை ஆசையுடன் வருடிப் பெருமிதமாக உச்சியில் முத்தமிட்டாள் பெற்றவள்.



தன் நன்றியைத் தெரிவிப்பது போல, அருகே வந்து மகனின் தோளில் தட்டிக் கொடுத்து விட்டு, "உன் அம்மாவே சாமுத்திரிகா லட்சணமாயிற்றே. பிறகு எதற்குப்பா அதே பெயர் கொண்ட பட்டு?" என்று சற்குணம் கேலி செய்ய...

"பார்த்தாயா தயா! எப்போதுமே உன் அப்பா இப்படித்தான். ஐஸ் வைத்து, ஐஸ் வைத்தே ஒன்றையும் வாங்கித் தராமல் ஏமாற்றுவது!" என்று செல்லக் குறை பாட்டுடன் கூறினாலும், அதற்குள் தாயின் முகத்தில், செம்பூக்கள் பூத்து விட்டதைக் கண்டான் மகன்.

"என்னது? நான் ஏமாற்றுகிறேனா! பிறகு பீரோவில், கண்களைக் கவரும் விதமாக அடுக்கி அடுக்கி வைத்திருக்கிறாயே...? அதெல்லாம் எப்படிம்மா வந்தது?" என்று பதிலுக்கு வாரினார் பெற்றவர்.

அனைவருமே மனம் விட்டுச் சிரித்தபோது, தாயின் சிரிப்பு விரைவாகவே வடிவதைக் கண்டு...

"என்னம்மா?" என மகனும், "என்ன செல்வா?" எனக் கணவனும் கேட்டார்கள்.

"அது வந்து... நாம் மனம் மாறியது போலவே, அவர்கள் - மாப்பிள்ளையின் பெற்றோரும் மாறுவார் களா? இல்லை... இப்படியே இருந்து விடுவார்களா என்று தோன்றியது!" என்று தெரிவித்தாள் செல்வ லட்சுமி.

"உன் அம்மா சொல்வதும் சரிதான். என்னப்பா... அவர்களைச் சமாதானப்படுத்தவென்று நீ ஏதாவது முயற்சி செய்தாயா? அல்லது நான் சென்று பேசிப் பார்க்கட்டுமா?" என்று கேட்டார் பெற்றவர்.

"அதற்கான முயற்சியை, வேறு விதமாகச் செய்து கொண்டுதான் இருக்கிறேன் அப்பா! அவர்களுக்கு முன்னளவிற்கு இப்போது கோபமில்லை. தணிந்திருக் கிறது என்றுதான் சௌமி சொன்னாள்!" என்று கூறிய வனைப் பார்த்து, பெற்றவர்களின் முகம் கேள்வியும் வியப்புமாக மாறியது.

'சௌமியா?' என்று சொல்லி, கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள...

"சௌமி யாரென்று நான் உங்களிடம் இது வரை தெரிவிக்கவில்லையே... அதற்கான சந்தர்ப்பம் அமையவில்லையென்று தான் சொல்ல வேண்டும்..." என்று கூறி, அவளைப் பற்றி முழுவதுமாகக் கூறினான் தயாபரன்.

"ஓ! இடையில் இப்படியொரு பெரிய விஷயம் வேறு நடந்திருக்கிறதா? தான் பாதிப்படைந்த போதும் இந்தளவிற்கு உனக்கே உதவ முன்வந்திருக்கிறாள் என்றால், உண்மையிலேயே நல்ல குணம் கொண்ட வளாகத்தான் இருப்பாள் போலிருக்கிறது!" என்றார்கள்.

"ம்... நல்ல பெண்தான். முதலில் ரொம்பவே கோபப்பட்ட போதும், பிறகு மெல்ல சமாதானமாகி



விட்டாள். அவளுடைய தாத்தா வாசவன் சாரும், நல்ல மனிதர். பேத்தியின் திருமண நிச்சயம் நின்று போன அதிர்ச்சியில், உடல் நலம் பாதிக்கப்பட்டு... இப்போது தான் இயல்பான வாழ்விற்குத் திரும்பியிருக்கிறார்!" என்று தெரிவித்த மகனிடம்...

"நாங்களும் கூட ஒருமுறை அவர்களை நேரில் பார்த்துப் பேசி விடுவதுதான் நியாயம். விரைவாகவே அதற்கு ஏற்பாடு செய் தயா!" என்றார்கள்.

"சரிப்பா!" என்றான் மகன்.

**ஆ**னால், இதை அவளிடம் தெரிவிக்கவென்று, அவன் சென்ற நேரம் தான் சரியில்லாததாக இருந் ததோ?

ஏனெனில், இருவருமே தற்போது சகஜமாக பேசிக் கொள்கிற நிலையிலிருந்து மாறி, மீண்டும் பழையபடி சிடுசிடுத்துக் கொள்ளலானார்கள் என்றே சொல்லலாம்.

அதற்கு அவளிடம், நியாயமான காரணம் ஒன்றும் இருக்கத்தான் செய்தது.

முன்பெல்லாம் சர்வ சாதாரணமாகத் தோட்டத்தைச் சுற்றி வந்த வாசவனால், இப்போதெல்லாம் அப்படி முடிவதில்லை. இடையில் மூச்சு வாங்கியபடி, சற்று நேரத்திற்கு உட்கார்ந்து விட்டுத்தான் மேலே நடக்க முடிந்தது.

மோசமான நிலைமை இல்லையென்றாலும், இயல்பான அவரின் ஆரோக்கியம் குறைந்து போனதே

அவளைப் பல சமயங்களிலும் கஷ்டப்பட வைத்துக் கொண்டுதான் இருந்தது.

அன்றைக்கு அவன் வந்த சமயத்திலும், அவள் அப்படியொரு மனநிலையில் தான் இருந்தாள்.

அதுவும், தன் முடியாமையை, பேத்திக்குத் தெரியாதபடி மறைத்து வைக்கவே முயற்சிப்பது, இன்னமும் கஷ்டமாயிருந்தது அவளுக்கு.

தயாபரன் 'தான்' வந்த விஷயத்தைப் பற்றிக் கூறியபோது, முதலில் சௌமி ஒத்துக் கொள்ளவே இல்லைதான்.

"நடந்து முடிந்தவற்றை நாங்கள் மறந்து, ஒதுக்கியாயிற்று. மீண்டும் அதையே நினைவுபடுத்தும் படியான பேச்சுக்கள்... தாத்தாவைக் கஷ்டப்படுத்தலாம் தயாபரன்! அதனால் இந்தச் சந்திப்பு அவசியமற்றது என்று தான் எனக்குத் தோன்றுகிறது.

"மேலும் நந்தனின் பெற்றோரிடம் நான் சொன்ன தெல்லாம், எனக்குச் சரியென்று பட்டவையைத் தான். அதற்காக நன்றி கூற வேண்டியதில்லை!" என்று மறுக்கத்தான் செய்தாள்.

ஆனால் எதிரே இருந்து இதையெல்லாம் கேட்ட வனுக்கு... கண்ணோரம் துடித்துச் சுருங்கியது.

"நல்ல பண்பாடு. ஒரு வாத்தியார் வீட்டுப் பெண், வீட்டிற்கு வருகிறோம் என்று சொல்பவர்களிடம், 'வேண்டாம்!' என்று கூறுவதுதான், மரியாதையா? வெரி



குட். உன்னிடம் நாட்டியம் பயிலும் பிள்ளைகளுக்கு, இலவச இணைப்பாக இப்படி ஏதேனும் நல்ல பண்பைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிற பழக்கமுண்டா?" என்று, கொஞ்சம் ஏளனமாகவே உதடு வளையக் கேட்டான் அவன்.

சன்னமாக ஒரு அனல் மூச்சை வெளியிட்ட போது, அவன் பேச்சை எண்ணி, உள்ளூர லேசாகச் சிரிப்பும் தோன்றியது அவளுக்கு!

நல்ல பண்பாமே! அதை இவன் சொல்வதாமா?

"எனக்கு நன்மை விளையுமென்றால், மற்றவர் களின் வருத்தத்தைப் பற்றி, நான் கவலை கொள்ளத் தேவையில்லை என்பது தானே நீங்கள் கூறியது. அது நல்ல பண்பாகத்தான் தோன்றுகிறது!" என்று கூறி புருவம் உயர்த்தினாள் சௌமி.

சுருக்கென்று தைக்கத்தான் செய்தது அவனுக்கு.

'என் தங்கையின் மகிழ்ச்சியான வாழ்விற்காகத் தான் நீங்கள் வேதனைப் படக்கூடும் எனத் தெரிந்தும், இப்படிச் செய்யும்படி ஆயிற்று!' என்று இளக்கமற்றவன் போல் கூறினானே?

மறந்து போய் விடுமா என்ன?

அவள் எதிர்பார்த்தது போலவே, அம்பு தைக்கத் தான் செய்தது, சற்று ஆழமாகவே...

கண்களை இறுக மூடித் திறந்தவன், "இப்போது, நன்றாகவே புரிகிறது சௌமி! நான் வரு... ஸாரி

கிளம்புகிறேன்..." என்று கூறிவிட்டு, சட்டென்று திரும்பி வாயிலை நோக்கி நடந்தான் தயாபரன்.

அப்படியே நின்று பார்த்தாள் அவள்.

## 13

நல்லவேளையாக தாத்தா வீட்டில் இல்லை. அவர் இருந்திருந்தால், தயாபரனிடம் இப்படி நறுக்கெனத் தைக்கும் விதமாகப் பேசியிருக்க முடிந்திராது.

அவ்வப்போது, 'நீ தனியே இக்கட்டில் தவித்த போது, தானே முன்வந்து உதவிய பிள்ளை" என்று அவளிடமே சொல்பவராயிற்றே...!

அப்படிப்பட்டவர், இப்படிப் பேச விடவும் மாட்டார். அனுமதிக்கவும் மாட்டார்.

ஆனால், அப்படியொரு இக்கட்டு நேர்வதற்கு மூலகாரணமே தயாபரன் தான் என்பது, தாத்தாவிற்கு மறந்து போய் விடுமா என்ன?

அதையும் ஒருமுறை கேட்டே விட்டாள் தான்.

மறந்து விடத்தான் வேண்டுமென்றார் அவர்.

"தவறோ, தப்போ செய்யாதவர்கள் என்று, உலகிலே யாருடாம்மா இருக்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ யாருக்காவது ஏதாவதொன்று செய்திருப்பது தான் இயல்பு. அதையே காரணம் காட்டி, ஒருவரை வெறுக்கக் கூடாதும்மா.



"அது மனித மனத்திற்கு நல்லதில்லைடா. கொஞ்சமாவது மறந்து, மன்னிக்கத் தெரிந்திருப்பதுதான் சரி. முடியவில்லையென்றால் அந்தச் சம்பவத்தையே ஒதுக்கி வைத்து விட்டுப் பேசுவது தான் முறை.

வெறுப்பை வளர்ப்பதால் யாருக்கு என்ன பிரயோஜனம்டாம்மா!" என்றார்.

இந்தச் சம்பாஷணைக்குப் பிறகுதான், தயாபரன் செய்த 'சந்தர்ப்ப சூழ்நிலை' உதவிகளின் மதிப்பு கூடித் தெரிந்ததோ?

அதன் பிறகுதான், அவனுடன் மெல்லவே என்றாலும்... இயல்பாகப் பழக மனது ஒப்புக் கொண்டதோ?

தாத்தா பிரியமும், மதிப்புமாக தயாபரனிடம் பழகினார். கண்கூடாகப் பார்ப்பது தான்.

அவள், அவளும் இப்போது ஒன்றும் அவனிடம் முறைத்துக் கொள்வதில்லை தான்.

ஆனாலும் வாய்ப்புக் கிடைத்தபோது, திருப்பித் தராமலிருக்க அவளால் முடியவில்லை.

அதே சமயம், பதிலுக்குப் பதில் திருப்பிக் கொடுத்து விட்ட திருப்தியோ? மகிழ்ச்சியோ? சர்வ நிச்சயமாக உண்டாகவில்லை.

தயாபரனின் முகம் இறுகியபோது, அவளுக்குமே என்னவென்று தெரியாத ஏதோ ஒருவித வலி, உள்ளூர உண்டாகத்தான் செய்தது.

தன்னைத் தானே நொந்தபடி, அவன் முகம் இறுகிச் செல்வது, தாங்க முடியாததாகி விட்டதோ?

அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஏனெனில், அவன் தன் வேக நடையுடன் வாயிலைக் கடக்க முயன்றபோது, விரைந்து சென்றவளாக, "வந்து... உங்கள் பெற்றோர் எப்போது வருவார்கள்? அவர்களுக்கு குடிக்க... உண்ண என்ன தயாரிப்பது?" என்று, சாதாரணம் போல விபரம் கேட்டாள்.

சட்டென்று நின்று திரும்பியவனின் முகம், அவளின் முழுமையான பேச்சைக் கேட்ட பிறகே பளிச்சென்று மாற... 'ஹப்பா!' என நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

பிறகே, "என்னை இது மாதிரிப் பயமுறுத்திப் பார்ப்பதில் அப்படியென்ன சந்தோஷம்?" என்றான் கேலியாக.

"கல் தூண் மாதிரி உறுதியாக நடந்து போய் விட்டு, என்னவோ ரொம்பவும்தான் பயந்து விட்ட மாதிரி, பெரிதாகப் பேசுகிறீர்களே?" என்றாள் பதிலுக்கு.

அவளின் சிறுமுறுவலுடனான கிண்டல், கொஞ்சம் நஞ்சமிருந்த இறுக்கத்தையும் போக்கிவிட, "கல் தூணா? ம்... பின்னே என்னம்மா செய்வது? உள்ளூர நடுங்கி வெடவெடத்ததை வெளியே தெரியும்படி காட்டவா முடியும்! அது வீரத்திற்கு அழகில்லையே?" என்றவனின் பதிலில், அவளிடம் முழுப் புன்னகையும் பளீரிட்டது.



"இப்போதுதான் பார்க்க கண்களுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது என்று சிலாகித்து விட்டு, ஸ்பெஷலாக எதுவும் செய்து சிரமப்பட வேண்டாம் சௌமி! ஆரோக்கியமானதாக இருந்தாலே போதும்.

"ஞாயிறு மதியத்திற்குத் தானே உனக்கு விடுமுறை. அப்போதே அழைத்து வருகிறேன்!" என்று தெரிவித்தவன், ஒரு தலை அசைவுடன் விடை பெற்றுக் கொண்டு, லேசாக விசிலடித்தபடி காரை ஓட்டிக் கொண்டு சென்றான்.

அவனுடைய உற்சாகப் புத்துணர்வு அவளையும் தொற்றிக் கொண்டதோ? ஏனெனில், மீண்டும் அவனைப் பார்க்கிற வரையுமே, அவளுக்கு அப்படியே காற்றில் மிதக்கிற மாதிரி தான் இருந்தது.

அதுவும், அவள் ஸ்கூட்டியை சர்வீஸுக்கு விட்டிருப்பதைத் தெரிந்து கொண்டு... அவளை அழைத்துப் போகவென்று, மனநலம் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்குச் சொல்லித் தரும் பள்ளிக்கே தயாபரன் வந்தது... அவள் சற்றும் எதிர்பாராததாக இருந்தது.

கண்கள் மலரப் பார்த்தவளிடம், "அருமையான வரவேற்பாக இருக்கிறதே... இப்படியொரு பார்வை கிடைக்குமென்றால்..." என்று கூறி நிறுத்தி, லேசாகச் சிரித்தபடி காரின் கதவை அவன் திறந்துவிட...

"கிடைத்தால்... என்ன செய்வதாக உத்தேசம் சார்?" என்று காரில் ஏறாமல் நின்று கேட்டாள் அதிரூப சௌந்தரியவதி.

"ம்... என்னென்னவோ செய்ய உத்தேசம் தான். வெயிட்... வெயிட். முறைக்காதே. அதற்கெல்லாம் நீ அனுமதிக்க மாட்டாய் என்பது தான் எனக்கு உறுதியாகத் தெரியுமே. குறைந்த பட்சமாக, தினமும் காரில் அழைத்துச் சென்று டிராப் பண்ணலாம் என்று நினைத்தேன்!" என்றான்.

"ஏன்? இப்போதெல்லாம் உங்களுக்கு வேலை வெட்டியென்று எதுவும் இல்லையா? அல்லது உங்கள் வட்டிக் கடைக்கு வட்டி கட்டியே ஊரில் பலரும் ஓய்ந்து விட... இப்போது உங்களுக்குக் கல்லா கட்டவில்லையா?

"எது எப்படியோ சார்! இப்போது என்னிடம் கார் இல்லை என்பது தான் உங்களுக்குத் தெரியுமே! நான் சொந்தமாகக் கார் வாங்கி, அதற்கு உரிமைக்காரியான பிறகு, டிரைவர் வேலைக்கு ஆள் தேவைப்பட்டால் உங்களிடம் தெரிவிக்கிறேன். இப்போது, உங்கள் உதவிக்கு நன்றி!" என்றாள் மிடுக்கான குரலில்.

வசீகரமாகத் தோன்றிய இளநகையுடன், "எங்களின் சுபதனம்... அம்மையாருக்கு வட்டிக் கடையாக்கும். பிறகென்ன சொன்னாய்? கல்லா கட்டாமல் வேலை வெட்டியின்றி இருக்கிறேனா?

"ம்... எல்லாம் என் நேரம். பாவம், இரண்டு பஸ் பிடித்து... வெயிலில் அலைந்து திரிந்து வருவாயே என்று உதவ வந்ததற்கு, டிரைவர் வேலையாக்கும். தைரியம் தான்!" என்றவன்...



அவளை ஆழமாக ஊடுருவிப் பார்த்தபடி, காருக்கு உரிமைக்காரியாக வேண்டுமென்றால்... நாமே தான் சொந்தமாகக் கார் வாங்கியாக வேண்டுமென்று அவசியமோ கட்டாயமோ இல்லை!" என்றவனை இடையிட்டு...

"பின்னே?" என்றாள் அவள்.

"ஏற்கெனவே கார் வைத்திருப்பவனைத் திருமணம் செய்து கொண்டாலும் கூட... கார்க்காரியாகி விடலாம்!" என்றான்.

குப்பென்று மூச்சை அடைப்பது போலிருந்தது அவளுக்கு.

இவன் என்ன சொல்ல வருகிறான்? என்ன அர்த்தத்தில் சொல்ல வருகிறான்?

இவனும் கார் வைத்திருக்கிறான் என்பதாலா? என்று அப்படியே உறுத்து விழித்தவளிடம்...

"அய்யய்யோ! அனல் அடிக்கிறதே...!" என்றவன், "நான் தப்பாக எதுவும் சொன்ன மாதிரி எனக்குத் தோன்றவில்லை. பிறகு டீச்சரம்மா ஏன் இப்படி உறுத்து விழிக்க வேண்டும்?" என்றான் இலகுவாகவே.

வேண்டுமென்று சீண்டுகிறானாக்கும்... இருக்கட்டும்.

"இந்த இலவச ஆலோசனையை நீங்களே பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். அப்படியொரு

சுலப வழி, எனக்குத் தேவையில்லாதது..." என்றாள் அதே மிடுக்குடன்.

லேசாகக் கண்கள் இடுங்கிய போதும், "நான் ஒன்றும் யாரையும் கட்டாயப்படுத்தவில்லைப்பா! இது அவரவரின் சொந்த விஷயமாயிற்றே?" என்று பெருந் தன்மை போல் கூறிவிட்டு, அவளைப் பார்த்தான்.

"என்ன கௌரவமான பின்னடைவாக்கும்?" என்று சிரித்தாள் அவள்.

வீடு திரும்புகிற வழியெல்லாம், தொய்வின்றி அவர்களின் பேச்சும் தொடர்ந்து கொண்டே தான் வந்தது.

பெரிதாக விஷயம் ஏதுமில்லையென்றாலும், தாங்கள் இருவரும் இவ்வளவு சகஜ பாவத்துடன் பேசக் கூடுமென்று... அவர்களே எதிர்பார்க்கவில்லை போலும்!

ஏனெனில், அவ்வப்போது தோன்றிய ஆச்சரியப் பார்வையுடன், இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

வீட்டை அடைந்ததும், ஏனென்று தெரியாமல்... இனம் புரியாத ஒருவிதப் படபடப்பு தோன்றியது அவளுக்கு.

அவள் முகத்தைப் பார்த்து ஊகித்தவனாக, "என் பெற்றோர் இனிமையாகப் பழகக்கூடிய சுபாவம் கொண்டவர்கள் சௌமி! அவர்களை எதிர்கொள்வது குறித்து நீ படபடப்படையத் தேவையில்லை. எப்போதும்



போல இயல்பாக இரு!" என்று தைரியமூட்டினான் அவன்.

"அதாவது அவர்கள் உங்களைப் போல் இல்லை என்கிறீர்கள். சரிதானே?" என்றாள் குறும்பாக.

கண்களில் சுவாரஸ்யம் தோன்ற, "ஏன் அவர் களின் ஒரே மகனும் இனிமையானவன் தான். இல்லை யென்று உன்னால் கூடச் சொல்லி விட முடியாது. முடிந்தால் மனதைத் தொட்டுச் சொல்லேன்... பார்க் கலாம்!" என்றான் சவாலாக.

"அவ்வளவு உறுதியா? ம்... போகட்டும். என்னை வசதியாகக் காரில் கொண்டு வந்து விட்ட நன்றிக்காக சரியென்று ஒத்துக் கொள்கிறேன்!" என்று சாது போல் கூறிவிட்டு வீட்டிற்குள் சென்றாள்.

உள்ளூரத் தோன்றியிருந்த இதமான உணர்வை அதிகரிப்பது போல... வீட்டிலிருந்து கேட்டது, மகிழ்ச்சி யோடு சிரித்துப் பேசும் வாசவனின் குரல்.

இதழ் விரியாத பூ மொட்டாகக் கரம் குவித்து, விருந்தாளிகளை "வாருங்கள்..." என்று புன்னகையுடன் வரவேற்றாள் சௌந்தரி.

ஓரிரு நிமிட அறிமுகத்தைத் தொடர்ந்து, சற்று நேரம் அவர்களுடன் பொதுவாகப் பேசிவிட்டு, எழுந்து சமையலறைக்குச் சென்றபோது, முன்னேற்பாடாக அவள் தயாரித்து வைத்திருந்த பழச் சாறை, தாத்தா அவர்களுக்குக் கொடுத்திருப்பது தெரியவும், பேபி

கார்னில் செய்த லேசான இனிப்புத் தன்மையுடைய சுவீட்டைக் கொணர்ந்து அவர்களை உபசரித்தாள்.

"இதன் ருசி அருமையாக இருக்கிறதும்மா!" என்று பாராட்டியவர்கள்... "மறுப்புக் கூறாமல் இதை நீ வாங்கிக் கொள்ள வேண்டும்!" என்று... பூ, பழ வகைகளுடன், அடர் பச்சை வண்ணத்தில் ஜரிகைப் பூக்கள் குலுங்கிச் சிரித்த பட்டும் வீற்றிருந்த தட்டை எடுத்து, சௌந்தரியிடம் கொடுத்தாள் தயாபரனின் தாய்.

பூ, பழம் என்றால் பரவாயில்லை. ஆனால் பட்டு?

அதுவும் விலை கூடுதலான பட்டு என்றால்... எப்படி? என்று தோன்றவும்...

"இதெல்லாம் எதற்கு ஆ... ஆன்ட்டி?" என்று தயங்கியவளிடம்...

"முதல் தடவையாக ஒருவர் வீட்டிற்குப் போகும் போது, வெறுங்கையுடன் போகக் கூடாது என்பது என் கருத்து. முடிந்த வரை கடைப்பிடிக்கிற ஒன்றும் கூட...

"இந்தப் பட்டு உனக்கான பரிசு. வாங்கிக் கொள்ளும்மா!" என்றாள் செல்வலட்சுமி.

அதற்கு மேல் சௌமியால் மறுக்க முடியவில்லை.

"என் பேத்தி ரொம்ப அருமையான டான்ஸர்.... என்று சொல்லும் போதே உன் தாத்தாவிற்கு முகம் பூரிக்கிறது. உன் பள்ளி விழாவில் உன்னுடைய டான்ஸும் நடக்குமாமே... அப்போது கட்டாயம் தெரிவிக்க



வேண்டும். எங்களுக்குப் பார்க்க வேண்டும் போல் இருக்கிறது!" என்று கூறியவர்களிடம், மெல்ல முறுவலித்துத் தலையசைத்தாள்.

"உன் பேபி கார்ன் சுவீட்டின் சுவை, அங்கிளுக்கும் ரொம்பப் பிடித்து விட்டது போலிருக்கிறது சௌந்தரி! மிச்சம் வைக்காமல் சாப்பிட்டிருக்கிறாரே... இதன் ரெசிபி என்னவென்று சொல்லும்மா!" என்று தனியே சௌமியிடம் கேட்டாள் பெரியவள்.

சௌமியின் தெளிவான, நிதானமான குரல் மற்றவளுக்குப் பிடித்துப் போக, "உன்னைப் போலவே உன் குரலிலும் கூட, ஒருவித அழகும் இனிமையும் இருக்கிறதும்மா..." என்று மனதில் தோன்றியதைக் கூறிவிட்டு, "ஒரு தாயாக என் பிள்ளைகள் செய்த தப்பிற்கு நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் சௌந்தரி!

"நீ ரொம்பவே பெருந்தன்மையாக நடந்து கொண்டதாக தயா சொன்னான். மாப்பிள்ளையின் பெற்றோரிடமும் பக்குவமாகப் பேசினாயாம். அதற்கு நன்றிம்மா! உன் மனதிற்குப் பிடித்த மாதிரியான வாழ்க்கை அமைய வாழ்த்துக்கள்!" என்று மனதாரக் கூறிவிட்டு, தாத்தாவிடம் விடைபெற்றுக் கொண்டு, கணவனும் மனைவியும் முதலில் கிளம்பினார்கள்.

"என் பெற்றோருக்கு உரிய விதமாக மரியாதை செய்ததற்கு நன்றி சௌமி! பிறகு பார்க்கலாம். பை!" என்று கூறிவிட்டுக் கிளம்பினான் தயாபரன்.

"பெரும் பணக்காரர்கள். ஆனால் எந்தவித பந்தாவும் இல்லாமல், எவ்வளவு இயல்பாகப் பழகு கிறார்கள் சௌமிம்மா! எல்லோரும் சௌக்கியமாக இருக்கட்டும்!" என்றார் வாசவன்.

அதன் பிறகு, சில முறை அவளிடம் செல்லில் பேசினான் தயாபரன்.

அப்படிப் பேசிய போதுதான், நந்தனும் தாரிகாவும் திடீரென்று கோவைக்குச் சென்று, நந்தனின் பெற்றோர் முன்பாக நின்ற விஷயத்தைப் பற்றிக் கூறினான்.

"என்னவாயிற்று?" என்று ஆவலோடு வினவினாள் சௌமி.

"ம்... கிட்டத்தட்ட பாஸ் மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டு, திடீரென்று வீட்டு வாசலில் போய் நின்றார் களாம். இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்காமல் திகைத்த போதும், ஆன்ட்டி சுதாரித்துக் கொண்டு உள்ளே சென்று திரும்பியபோது, ஆரத்தியுடன் வந்தார்களாம்..."

"வாவ்! ஆன்ட்டி ஆன்ட்டிதான். மேலே சொல் லுங்கள்..." என்று பரபரப்பானாள்.

எதிர்முனையில் அவன் சிரிப்பது நன்றாகவே கேட்டது. ஆனந்தமான சிரிப்பு.

"எங்களை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள் என்று காலில் விழுந்து பணிந்தார்களாம். தாரிகாவின் பணிவிலும், அமைதியிலும்... நிச்சயம் உண்மை



இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், 'அவர்களை உள்ளே வரச் சொல்...' என்று அங்கிள் சொல்லியிருக்க மாட்டார்.

"ஆன்ட்டியும் தருவைப் பூஜையறையில் விளக் கேற்ற அழைத்துச் சென்றிருக்க மாட்டார்கள்.

"மாலையில் கிளம்பியவர்களிடம், 'காரை வேகமாக ஓட்ட வேண்டாம். அடுத்த வாரமும் வருகிறீர்கள் தானே?' என்றார்களாம்."

"விஷயம் சுபமாகியதில் எனக்கு ரொம்ப சந்தோஷம் தயா!" என்றாள் அவள்.

"எனக்குமே இப்போது தான், முழு நிம்மதியுடன் மூச்சு விடமுடிகிறது சௌமி! உன்னிடம் தெரிவித்த பிறகு, மகிழ்ச்சியாகவும் இருக்கிறது!" என்று மனதில் தோன்றியதை மறைக்காது உரைத்தான் தயாபரன்.

## 14

**போ**க்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவென்று, மாற்று வழிச் சாலையில் வந்தபோது, தயாபரனும் சௌந்தரிய வதியும் நான்கைந்து முறை சந்தித்துக் கொண்டார்கள்.

ஓரிரு நிமிடங்கள் நின்று பேசிவிட்டுக் கிளம்பி னாலும், அன்றைய பொழுது, மிகவும் இனிமையான உணர்வுடன் செல்வதாக இருவருக்குமே தோன்றியது.

அந்த மாதிரியான சந்திப்பின் போதுதான், "பள்ளி விழா இன்ன தேதியில் நடக்கவிருக்கிறது. உங்கள் அம்மாவிடம் மறக்காமல் தெரிவித்து விடுங்கள்!" என்று கூறினாள்.

"அழைப்பு என் அம்மாவிற்கு மட்டும்தான் போலிருக்கிறதே...!"

"அப்படியெல்லாம் எதுவுமில்லை. விருப்பமும் நேரமும் இருந்தால் மகனும் கூட வரலாம்."

"விருப்பம் இருக்கிறது. ஆனால் நேரம்? ம்... சரி. உன் முந்தைய பேச்சின்படி, வேலை வெட்டியில்லாமல் ஈ ஓட்டிக் கொண்டு தானே இருக்கிறேன். ஓட்டுகிற ஈயை அங்கே வந்து ஓட்டினால் போயிற்று. சரிதானே டீச்சரம்மா?" என்று அவன் கூறிய பாவனையில் இருவருக்குமே சிரிப்பு வந்து விட்டது.

**சொ**ன்னது போலவே... பள்ளி விழா துவங்கும் நேரத்திற்குத் தாயுடன் வந்து சேர்ந்தான் தயாபரன்.

நாட்டியமும், நடிப்புமாகக் கலந்து வழங்கிய அவர்களின் 'கிருஷ்ண ராதை' பலத்த கைதட்டலைப் பெற்றது.

அவளின் அன்பு சொட்டும் பாவத்தைப் பார்த்து, தயாபரனின் கண்களிலும் கூட வியப்பு.

நாட்டியம் முடிந்து, உடை மாற்றிக் கொண்டு வந்தவளின் கையைப் பற்றி அழுத்தி "பிரமாதம்மா!" என்று பாராட்டினாள் செல்வலட்சுமி.



"தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்று முறுவலித்தவள், "வகுப்பறையில் ஒரு வேலை இருக்கிறது. உடனே வந்துவிடுகிறேன்!" என்று கூறிவிட்டு... உட்பக்கமாக நடந்து சென்றாள்.

கிடைத்த அந்தச் சின்னச் சந்தர்ப்பத்தில், எங்கிருந்தோ விரைந்து வந்து... அவள் எதிரே நின்றான் தயாபரன்.

இப்படி நடக்கக் கூடுமென்று ஏற்கெனவே மனம் நினைத்திருந்ததோ?

நேராக அவன் கண்களைச் சந்தித்தவளிடம்... "உன் அலங்காரமும் நடனபாவமும் அருமை சௌமி! மேடையில் உன்னைத் தவிர, வேறு யாரும் கண்ணில் படவே இல்லை தெரியுமா?" என்று கரகரத்தக் குரலில் கூறினான் தயாபரன்.

கன்னங்கள் இதமாகச் சூடாவதைச் சமாளித்துக் கொண்டு, "அடடா! என்னைத் தவிர வேறு யாரும் தெரியவில்லை என்றால்... ஏதோ புது மாதிரியான நோய் போலிருக்கிறதே... முற்றிவிடும் முன்பாக நல்ல கண் டாக்டரிடம் காட்டிச் சிகிச்சை எடுங்கள் சார்! பிறகு பெரிய தொல்லையாகிவிடப் போகிறது..." என்று ஆலோசனை வழங்கினாள்.

கைகள் இரண்டையும் குறுக்கே கட்டிக் கொண்டு, அசாத்தியமான அழகு நிமிர்வுடன் நின்றிருந்தவளைப் பார்க்க... அவனுக்குச் சுவாரஸ்யமாக இருந்தது. ஒருவித பரபரப்பாகவும் கூடவோ?

ஒரு எட்டு முன்னே வைத்து அவளின் அருகே வந்து, ஃபேண்ட் பெல்ட்டில் கை வைத்தபடி எதிரே நின்றவனின் முகத்தில் தோன்றிய வசீகர முறுவல், அவளின் இதயத் துடிப்பைப் பல மடங்கு வேகமாக்கி விட, அது வெளியே தெரிந்து விடாதபடி... இன்னும் அசாத்தியமாக நிமிர்ந்தது அவளின் முகம்.

"ம்ம்ம்... இது புது மாதிரியான நோய்தான் போலிருக்கிறது. ஆளை வீழ்த்தும் முன்பாக மருந்திற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்!" என்று அமைதியான குரலிலே கூறினான்.

அசையாமல் அப்படியே நின்று தைரியமாக இருப்பதைப் போலவே காட்டினாள் அவள்.

"உனக்குப் பயமாக இல்லையா?" என்றான், ஒரு மாதிரியாக.

"எதற்காகப் பயப்பட வேண்டுமாம்?" என்றாள் புருவம் உயர.

"உன் பள்ளியில் இது சற்று உட்பகுதி. கொஞ்சம் இருட்டாக வேறு இருக்கிறது. நீயும் நானும் தனியாக நின்று கொண்டிருக்கிறோம். உன்னிடம் நான் ஏடாகூடமாக தவறாக நடந்து கொண்டால்... என்ன செய்வதென்ற பயம் கொஞ்சம் துளி அளவு கூடவா இல்லை என்கிறாய்?" என்று கேட்டான்.

"அப்படி நடந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் எனக்கு நன்றாகத் தெரியுமே... பிறகு ஏன் பயப்பட வேண்டும்?"



"ஓஹோ! அப்படி என்னம்மா செய்வதாக உத்தேசம்?" என்றான் கிண்டலாக.

அவளின் பார்வை கீழ் நோக்கிச் சென்று, குறிப்பாக காலில் இருந்த செருப்பைப் பார்த்து மீள...

"ச்சு! இந்தச் செருப்பால் அடிப்பேன் என்ப தெல்லாம் ரொம்பவே பழைய விஷயமாயிற்றே. பெண்கள் இன்னமும் அதையே பிடித்துக் கொண்டு தொங்கினால் எப்படி?

"செருப்படி வாங்கிக் கொண்டு ஒருவன் சும்மா திரும்பிப் போய் விடுவானா என்ன? திருப்பித் தாக்க முயல்கிறான் என்றால், அதைச் சமாளிக்கிற அளவிற்கு தற்காப்புக் கலை ஏதாவது கற்று வைத்திருப்பது தான் புத்திசாலித்தனம்.

"உன்னைப் பார்த்தால் அப்படி எதையும் கற்ற மாதிரித் தெரியவில்லையே? என்ன அப்படித்தானா?" என்றான்.

இப்போது வெறுமனே திகைத்து நிற்கத் தான் முடிந்தது அவளால்!

திகைப்பு! அவன் சொல்வது சரிதான் என்ப தாலோ?

"பெண்கள் விலை மதிப்பிட முடியாத பொக்கிஷம் போன்றவர்கள். அதனால்தான், அவர்களுக்கு அவசிய மாக பாதுகாப்புத் தேவைப்படுகிறது என்று ஔவையார் சொன்னதாகப் படித்த ஞாபகம்.

"அதுவும்... அப்படிப்பட்ட பொக்கிஷம் உன்னைப் போல் இருந்தால், பாதுகாப்பின் அவசியத்தைப் பற்றிச் சொல்லவே தேவையில்லையே?" என்று கூறி லேசாகத் தோள்களைக் குலுக்கினான்.

விழிகளை விரித்து, பிரமிப்புடன் பார்த்தாள் சௌந்தரியவதி.

பெண்களைக் குறித்து, தயாபரன் இவ்வளவு மேன்மையாகப் பேசக்கூடுமென்று அவள் நினைக்க வில்லை! அவன் மீதான மதிப்பு சற்று உயர்ந்தது.

"இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்? ஏதோ கொஞ்சம் நல்ல விதமாக இருக்கும் போல் தெரிகிறதே... முகத்தைப் பார்த்தால் அப்படியேதான் போல் இருக் கிறது. அம்மணி நல்ல மூடில் இருக்கும் போதே கேட்டு விடுகிறேன்.

"தற்காப்புக் கலை பயிற்சி மையத்தில் உனக்கு இடம் சொல்லி வைக்கட்டுமா? வெறும் இருபது நாட்கள் பயிற்சிக்குப் போனாலும் போதும். என் தங்கை கூட அங்கேதான் பயின்றாள். உனக்கு ஓ.கே.வா?" என்று கேட்டான்.

"ம்..." என்று முறுவலுடன் தலையசைத்தாள் அவள்.

முதல் நாள் பயிற்சிக்கு... அவனே வந்து அழைத்துச் சென்றான்.



ஒரு நாளைக்கு ஒரு முறையாவது, செல்லிலோ அல்லது நேரமிருந்தால் நேரிலோ சந்திப்பது இயல்பான ஒன்றாக மாறுமளவிற்கு அவர்களின் நட்பு வளர்ந்தது.

வயதான மனிதருடன், எவ்வளவு நேரம் இளைஞன் ஒருவனால் வெறுமனே பேசிக் கொண்டிருந்து விட முடியும் என்ற எண்ணத்தை உடைப்பது மாதிரி, பல விஷயங்களையும் சுவாரஸ்யமுடனே வாசவன் சாருடன் பகிர்ந்தான் தயாபரன்.

சில சமயங்களில், நேரம் போவதே தெரியாது.

'அலுவலகத்திற்கு நேரமாகி விட்டது... வேறு ஒரு வேலையிருக்கிறது!' என்று அவன் கிளம்பிய பிறகும் கூட, தாத்தாவின் முகத்தில் அதே உற்சாகம் தொடர்ந்து இருப்பதைக் கண்டு அவளுக்கு வியப்பாக இருந்தது.

எப்போதாவது, தயாபரனின் தாயாரும் கூட செல்லில் தொடர்பு கொண்டு, நலம் விசாரிப்பது உண்டு.

அது மாதிரியொரு அழைப்பின் போதுதான், "மாப்பிள்ளையின் பெற்றோர், எங்கள் வீட்டிற்கு வருவதாக இருக்கிறார்கள் சௌமி! அங்கே, அவர்கள் இடத்தில் வரவேற்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்யப் போகிறார்களாம்.

"அந்த மகிழ்ச்சியான சமயத்தில் நீயும் உடன் இருந்தால், எங்கள் எல்லோருக்குமே சந்தோஷம். வீட்டு மனிதர்கள் மட்டும் தான். வருகிறாயாம்மா?" என்றாள் செல்வலட்சுமி.

அன்பான அழைப்புதான்.

ஆனால் அவர்களின் வீடு வரை சென்று வர ஏனோ அவளுக்கு ரொம்பவே தயக்கமாக இருந்தது. காரணம் அவளுக்கே விளங்கவில்லை!

இருந்தாலும் சட்டென்று சொல்லவும் பிடிக்காமல், "உறுதியாக வர முடியுமா என்று தெரியவில்லை ஆன்ட்டி!

"பள்ளியில் கொஞ்சம் கூடுதல் வேலை இருக்கிறது. முடிந்த வரை முயற்சிக்கிறேன். தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம். ப்ளீஸ்!" என்றாள் சௌந்தரியவதி.

"அடடா! இதில் தவறாக எடுத்துக் கொள்ள எதுவுமில்லையம்மா... முடிந்த வரை முயற்சி செய்!" என்று கூறினாள் மூத்தவள்.

ஒப்புக்காகவே, சரியென்று சொன்னாள் சின்னவள்.

ஆனால் மறுநாள் காலையில் அலுவலகம் செல்வதற்கு முன்பாகவே அவள் எதிரே வந்து நின்று, "எங்கே? உன் தலைமீது குறைந்தபட்சமாக ஒரு செங்கலைக் கூட காணவில்லை?" என்று கொஞ்சம் கோபமான குரலிலேயே கேட்டான் தயாபரன்.

நிஜமாகவே எதுவும் புரியாமல், திகைத்து நின்றாள் சௌமி.



## 15

அவசர அவசரமாக வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தவளிடம் வந்து... இதென்ன இப்படியொரு கேள்வி?

அதுவும்... சற்றும் சம்பந்தமில்லாத கேள்வி!

அல்லது ஒருவேளை சம்பந்தம் இருக்கிறதோ?

அவளையறியாமல் ஒரு கை, தலையை மெல்லத் தொட்டுப் பார்த்தது. அவன் சொன்னது போல செங்கல் இல்லைதான்.

ஆனால், ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? அதுவும் கோபமாக...? என்று யோசிக்க முயன்றாள்.

அவள் கை தானாக உயர்ந்து தலையைத் தொட்டுப் பார்த்த போதே, உள்ளூர இருந்த இறுக்கம் தளர்ந்து விட்டிருக்க வேண்டும் அவனுக்கு.

இல்லையென்றால், "என்ன? உன் கைக்கும் எதுவும் தட்டுப்படவில்லையா?" என்று லேசான கேலியுடன் கேட்டிருக்க மாட்டான்.

"ஹப்பா! கோபம் குறைந்து விட்டது போல் இருக்கிறது. ஆனால், இந்தக் கோபமே எதற்கென்று எனக்குப் புரியவில்லையே? அதை முதலில் சொல்லுங்கள்!" என்றாள்.

அவள் கண்களை நேராகச் சந்தித்து, "என் அம்மாவிடம், ஏன் அப்படிச் சொன்னாய் சௌமி?" என்று கேட்டான்.

ஓ! அவளின் நழுவலான பதில்தான், இதற் கெல்லாம் காரணமா?

சும்மாவே அவள் பள்ளியில் வேலை என்றதைத் தான், 'நீ தான் அந்தப் பள்ளியின் கட்டிடத்தையே தாங்குகிறாயா?' என்ற அர்த்தத்தில் தான், தலையில் ஒரு செங்கலைக் கூடக் காணவில்லை என்றிருக்கிறான்.

இப்போது என்ன செய்வது?

"இதற்காகவா இவ்வளவு காலை வேளையிலேயே கிளம்பி வந்தீர்கள்? அலாரம் வைத்து எழுந்தீர்கள் போல!" என்றாள் கிண்டலாக.

புன்னகைத்த போதும், "பேச்சை மாற்ற முயற் சிக்க வேண்டாம்!" என்றான், சிறு கண்டிப்புக் காட்டி.

இதற்கு மேல் சமாளிக்க முடியாதோ?

"அது... காரணமெல்லாம் எதுவுமில்லை தயா! என்னவோ ஒரு மாதிரி தயக்கமாயிருந்தது. அவ்வளவு தான் வேறு ஒன்றுமே இல்லை!" என்றாள்.

"தேவையற்ற தயக்கம். என் தங்கையைப் பார்க்க வேண்டும் என்று ஒருமுறை சொன்னாயே... நீங்கள் இருவரும் சந்திக்க இது நல்ல சமயம் என்று நினைத் தேன். உன்னைப் போலவே அவளும் கேட்டிருந்தாள்.

"ஆனால் நீ பைசாவிற்கு பிரயோஜனப்படாத ஒன்றைச் சொல்கிறாய்!" என்றான் குறைபடும் குரலில்.



அவனுடைய குரல் என்னவோ செய்ய... உள்ளே யிருந்த தயக்கத்தை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு, "நிதி நிறுவனத்தினர், இதற்குக் கூட பைசாவைத் தான் உதாரணம் காட்டுவதாக்கும்?" என்றாள் புன்முறு வலுடன்.

கண்கள் மின்ன பளிச்சென்று புன்னகைத்தவன், "உன் பாஷையில் நீ சொல்லிக் கொண்டிருந்த வட்டிக் கடை, இப்போது நிதி நிறுவனமாக உயர்ந்திருப் பதைக் கேட்க... ரொம்பவே மகிழ்ச்சியாக இருக்கிறது. என்னவோ? நாங்களும் நாலு காசு பார்த்தால் சரி!" என்றவனின் அலட்டாத பாவனையில் 'களீர்' என்று சிரித்தாள் அவள்.

இனிமேல்தான் இவன் நாலு காசு பார்க்கப் போகிறானாமா?

வெளியில், சுபதனத்தின் மதிப்பை அவளும் அறிந்திருந்தாள் தான்.

கோடிகளில் பணம் புரளும் பெரிய நிறுவனம்.

ஆனால், அதை அவள் வட்டிக் கடை என்று வேண்டுமென்றே கேலி செய்வதை இயல்பாக ஏற்று, என்னமாக ஒத்தூதி கிண்டலடிக்கிறான்.

இவ்வளவு பெரிய பணக்காரனால், எப்படி இப்படி யிருக்க முடிகிறது? என்று அவள் நினைத்தபோது...

"சிரிக்கிறாயே! அப்படியானால் வருவாயென்று சொல்லி விடலாம் தானே?" என்று கேட்டபடியே செல்லைக் கையில் எடுத்தான் தயாபரன்.

"சிரித்தால்... இப்படி அர்த்தமெடுத்துக் கொள்ள லாம் என்று எந்த அகராதியில் படித்தீர்கள் சார்?" என்று காதிலிருந்த வளையம் அப்படியும் இப்படியுமாக அசைந் தாடக் கேட்டாள் அவள்.

அப்போது அவள் முகம், ரொம்பவே பிரகாசித் ததோ?

ஏனெனில், அதிரூப சௌந்தரியவதியேதான் என்று முணுமுணுத்தன அவன் உதடுகள்!

அதுவும், அவன் காதுகளுக்கு மட்டுமே கேட்கும்படியான முணுமுணுப்பு.

ஒரு பெருமூச்சை வெளியிட்டபடி, "அதுவா! மடக்கி மடக்கிக் கேள்வி கேட்கும் பெண்ணொருத்திக்குப் பதில் சொல்லி மாளாமல்... தயாபரன் என்ற ஒருவன் எழுதிய அகராதிம்மா!

"விற்பனைக்கு அல்ல! சொந்தப் பயன்பாட்டிற் காக மட்டும் தான். போகிற போக்கைப் பார்த்தால், அகராதியை வரைமுறையின்றி விரிவுபடுத்த வேண்டும் போலிருக்கிறது!" என்றவனின் பதிலில்... மீண்டும் அவளின் சிரிப்பொலி தொடர்ந்தது.

தானும் சிரித்தபோதும், அவள் வருவதை வாய் மொழியாக உறுதி செய்த பிறகே கிளம்பிச் சென்றான் அவன்.

நடந்தவை எல்லாமே... நினைத்து நினைத்து மகிழக்கூடிய விஷயங்களே!



ஆனால் அவள் நினைவில் கொள்ளாமல் போனது... அவள் மனதில் தோன்றிய தயக்கத்தை!

உள்ளுணர்வாக இருந்து செயல்பட்ட அதற்கு மட்டும் அவள் முக்கியத்துவம் கொடுத்திருந்தாள் என்றால்... அவன் வீட்டிற்குச் சென்றிருக்கவும் மாட்டாள். நெஞ்சையடைக்கும் வேதனையுடன் திரும்பி வந்து... தன் அறையைப் பூட்டிக் கொண்டு தாங்க மாட்டாது அழுதிருக்கவும் மாட்டாள்.

என்ன செய்ய? நடப்பதை மாற்றும் வல்லமை யாருக்கும் இல்லையே!

அடுத்த நான்காவது நாள் மாலையில், அவளை அழைத்துச் செல்ல தயாபரன் வீட்டிலிருந்து டிரைவரை காருடன் அனுப்பியிருந்தார்கள்.

அடர் நீல வண்ணத்தினுள், ஆங்காங்கே வெளிர் நிற ரோஜாக்கள் பளிச்சிட்ட காட்டன் புடவை உடுத்தி, அதற்கு ஏற்றாற் போல் காதிலும், கழுத்திலும் கிறிஸ்டல் அணிகலன்கள் மின்ன... அழகாகப் பின்னலிட்ட ஜடை யுடன் வந்த பேத்தியின் தலையை ஆசையுடன் வருடித் தலையசைத்தார் வாசவன்.

விரைவாகத் திரும்பி விடுவதாகக் கூறிவிட்டு, காரில் ஏறினாள் சௌந்தரியவதி.

வெளியே அழகாகவும், உள்ளே பலத்த பாது காப்புடனும் இருந்தது, தயாபரன் வீட்டு மதில் சுவர்.

தங்க வண்ணம் பூசிய பெரிய கேட்டைக் கடந்து, தார்ச் சாலையில் சென்ற கார், உருளை வடிவப் பளிங்குத் தூண்கள் தாங்கி நின்ற போர்டிகோவில் நின்றது.

வீட்டின் பிரம்மாண்டம், விழிகளை விரிய வைத்தது உண்மை!

வீட்டின் மூத்த தலைமுறையினர் ஹாலிலேயே அமர்ந்திருந்தார்கள்.

சௌந்தர்யவதி வந்திறங்கியதைப் பார்த்து விட்டு, செல்வலட்சுமி வீட்டுத் தலைவியாய் புன்னகையுடன் வந்து, "வாம்மா...!" என வரவேற்று அழைத்துச் சென்றாள்.

தலைவராய் புன்னகை செய்து, "வாசவன் சார் சௌக்கியமாம்மா?" என்றார் சற்குணன்.

"நலமாக இருக்கிறார். எல்லோரையும் கேட்ட தாகவும் சொல்லச் சொன்னார்."

"உட்கார் சௌமி! மாப்பிள்ளையின் பெற்றோரும் சற்று முன்பு தான் வந்தார்கள். சிரம பரிகாரம் செய்து கொள்ளட்டும் என்று தரு அழைத்துப் போயிருக்கிறாள்!" என்று விபரம் கூறிவிட்டு, தொடர்ந்து பேசிய செல்வ லட்சுமி, "இந்தப் புடவையும் உன் சிம்பிளான அலங்காரமும் கண்களுக்கு இதமாக இருக்கிறது!" என்று பாராட்டுதலாகக் கூற...



கன்னங்கள் சிவக்க... "தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்று முறுவலித்தாள் சௌந்தரி.

இதற்கு முன்பாகவே செல்லில் அழைப்பு வர எழுந்து சென்றிருந்தார் சற்குணன்.

சில கணங்களுக்குள்ளாகவே பெற்றோருடன் ஹாலுக்கு வந்தான் நந்தன்.

அக்கறையுடனான குசல விசாரிப்பும், முகத்தில் சிரிப்புமாக ராதை குடும்பத்தினர் சௌந்தரியுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, அவர்களின் பயண அலுப்பைக் குறைக்கும் விதமாக, சூடான பாணத்துடன் வந்தாள் தாரிகா.

யாரும் சொல்லும் முன்பாகவே, அவள் தான் தாரிகா என்பது தெரிந்து போனது சௌமிக்கு!

டிரேயில் கொணர்ந்ததை எல்லோருக்கும் கொடுத்து விட்டு... கடைசியாக சௌமியிடம் சென்றாள் தாரிகா.

அப்போது தான் முதல் முதலாகப் பார்த்த இரு பெண்களின் நயன விழிகளும் ஒன்றையொன்று ஊடுருவிச் சென்றன.

அது கொஞ்சம் முக்கியமான தருணம் தான்!

இருவரும் மற்றவர்களை விட்டு மிகச் சற்றே தள்ளியிருப்பதாகத் தோன்றியது.

தயாபரனின் அவ்வளவு பாசத்திற்கும் உரிய வளைச் சந்தித்த நிமிடம்...

சௌமியாலேயே விளக்கிச் சொல்ல முடியாத ஒருவித பரவசமான உணர்வு அது!

செல்வச் செழிப்பிலேயே மிதந்து வளர்ந்திருந்த பளிச்சிடும் அழகு.

வெளிப்பார்வைக்குச் சிரிக்கும் கண்களாகத் தெரிந்தாலும், சற்று உற்று நோக்கினால் அதிலே அபார மான கூர்மையிருப்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

தயாபரனிடம் எப்போதுமே இருக்கிற கூர்மை!

அண்ணனுக்கும் தங்கைக்கும் இதில் கூட ஒற்றுமை இருப்பதை எண்ணி வியந்தவளுக்கு...

அப்போதுதான் தாரிகா தன்னை அளவிடுவது போலப் பார்ப்பது புரிந்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று சௌந்தர்யவதி கேட்க...

"இல்லை, எங்கள் குடும்பத்தினர் அத்தனை பேரும் அவ்வளவு உயர்வாகப் பேசி புகழ்ந்து தள்ளு கிறார்களே...

"அப்படி நீங்கள் எந்த வகையில் உயர் வென்று பார்க்கிறேன்!" என்று முதல் சந்திப்பிலேயே மிகவும் வெளிப்படையாகக் கேட்டாள் தாரிகா.

இவள்! தயாபரனுக்குச் சற்றும் சளைத்தவள் இல்லையோ?



முதலில் இதை எப்படி எடுத்துக் கொள்வது? நல்லதாகவா! அல்லது வேறு மாதிரியாகவா? என ஒரு கணம் சௌமிதான் குழம்பிப் போனாள்.

பிறகு நிதானித்து... "என்ன... எந்த வகையில் உயர்வென்று ஏதேனும் தெரிந்ததா?" என்றாள், நிதான மான குரலிலேயே.

"ம்... கொஞ்சம் கொஞ்சம் விளங்குகிறது. என் அண்ணன் உங்களை மரியாதைக்குரிய தோழியாகக் குறிப்பிட்டுப் பேசியபோது... நீங்கள் எப்படி இருப்பீர்கள் என்று தோன்றியதுண்டு. பார்க்க ஆர்வமென்று கூடச் சொல்லலாம்.

"ஆனால் இவ்வளவு அழகை எதிர்பார்க்க வில்லை!" என்று மனதில் இருந்ததை மறைக்காமல் கூறினாள் தாரிகா.

"அட்டா! நான் உங்களைப் பற்றிச் சொல்ல நினைத்ததை நீங்கள் என்னை முந்திக் கொண்டு சொல்லி விட்டீர்களே!" என்று தான் எண்ணியதை வெளியிட்டாள் சௌமி.

இருவருக்குமிடையே சினேகமானதொரு முறுவல் பூக்க... "வெல்கம் டு மை மதர் ஹோம்!" என்று சௌமியை நோக்கிக் கை நீட்டினாள் தாரிகா.

நீட்டிய கையைப் பற்றிக் குலுக்கினாள் சௌமி.

அடுத்த சில நிமிடங்களில் எல்லாம்... இளம் பெண்களான இருவரும் சகஜமாகப் பேச ஆரம்பித்திருந்த

போதும், 'தயாபரனைக் காணவில்லையே?' என்பதை அவன் தங்கையிடம் சும்மா வெறுமனே கூட... ஏனோ கேட்க முடியாமல் போயிற்று அவளால்!

அதோடு, அவளை இங்கே வர சம்மதிக்க வைக்க என்னவெல்லாம் பேசினான்? வீட்டில் இருந்திருந்தால் நிச்சயம் தேடி வந்து பேசியிருப்பானே என்று நினைத்த போது... அவளின் சந்தேகத்தைத் தீர்ப்பவர் போல,

"இல்லை தயா! இன்னமும் அரை மணிநேரம் தானே ஆகும் என்கிறாய். அவர்களுடையதை ஃபைனல் செய்தே கொடுத்து விடுப்பா! மீண்டும் வரச் சொல்வதால் நமக்கும் நேர விரயம் தானே!

"ம்... சரி சரி. விரைவாக வர முயற்சி செய்!" என்று கூறி, செல்லை அணைத்தார் சற்குணன்.

'ஆக, தயாபரன் வேலை விஷயமாக இன்னும் அலுவலகத்திலேயே இருக்கிறான்!' என்ற செய்தி, அவளிடம் ஒருவித நிம்மதியை ஏற்படுத்தியது.

சௌந்தரியின் முக மாற்றத்தையே கவனித்துக் கொண்டிருந்த தாரிகாவினுள்... ரகசியச் சிரிப்பொன்று தோன்ற,

அவரவரின் வாழ்வில் நடந்த பொதுவான விஷயங்களைப் பற்றிப் பேசலானார்கள்.

பள்ளி, கல்லூரி, பிடித்த உடை, உணவு, சினிமா, அலங்காரம்...



அப்பப்பா! பேசுவதற்கு உலகில் விஷயங்களுக்கா பஞ்சம்? இடையிடையே சுவாரஸ்யமான சிரிப்பும் தோன்றத் தவறவில்லை.

மனைவியின் மயக்கும் சிரிப்பு, நந்தனை அங்கே வரவழைத்தது என்றே சொல்லலாம்.

தங்கள் உரையாடலுடன் நந்தனையும் இணைத்துக் கொண்டார்கள் தருவும், சௌமியும்.

பிறகு நேரம் எப்படிப் போனதென்று சொல்லவா வேண்டும்?

கேலி, கிண்டல், ஒருவருக்குத் தெரிந்த தகவலை அடுத்தவருக்கும் தெரிவிப்பது என்று எத்தனை நிமிடங்கள் கடந்து சென்றதோ?

மற்றவர் அறியாமல், அவ்வப்போது சௌமியின் பார்வை வாயிலுக்குச் சென்று மீண்டது.

தயாபரனின் வருகையை அவள் இந்தளவிற்கா எதிர்பார்க்கிறாள்?

நினைத்துப் பார்த்தால்... அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

அதே சமயம்... ஏன்? எதற்காக இப்படி நினைக்க வேண்டுமென்று, தன்னைத் தானே கேட்டுக் கொண்டு, மனதின் ஆழம் வரை சென்று ஆராயவும் பயமாக இருந்தது.

அப்போது மெலிதான ஹாரனும், வழக்கத்தை விட வேகத்துடனும் வந்தது தயாபரனின் கார்.

உள்ளுணர்வு உந்த... மலர் முகத்துடன் சட்டென்று திரும்பிப் பார்த்தாள் சௌந்தரியவதி.

ஹாலுக்கு வருவதற்கு முன்பாகவே, வேகமாகத் தேடிய அவன் பார்வை சௌமியின் முகத்தில் ஒரு கணம் நிலைத்தது.

படபடப்பாகவே இருந்தாலும்... பார்வையைத் தாழ்த்திக் கொள்ளத் தோன்றவில்லை சௌந்தரிக்கு!

அதே சமயத்தில் புருவம் உயர... கண்களில் கேள்வியுடன் தாரிகாவும் செல்வலட்சுமியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

## 16

மெல்ல பார்வையைச் சாதாரணமாக்கிக் கொண்டு, தன் பெற்றோரும், நந்தனின் பெற்றோரும் அமர்ந்திருந்த பகுதிக்குச் சென்று, வீட்டுப் பிள்ளையாக வந்தவர்களை வரவேற்றான்.

அதன் பிறகே, சற்றுத் தள்ளியிருந்த சோஃபாக்களில் அமர்ந்திருந்த இளையவர்களிடம் வந்தான் தயாபரன்.

வசீகர முறுவலுடன் வந்தமர்ந்தவன், "ஹாய் சௌமி! வெல்கம். வருந்தி அழைத்து விட்டு... என்னால் தான் இங்கே இருக்க முடியாமல் போயிற்று. இங்கே எப்படி? நீயும் தருவும் நன்றாகப் பழகிவிட்டீர்கள்



போல் இருக்கிறது!" என்று இயல்பாகப் பேசலானான் தயாபரன்.

அப்போது அங்கே வந்த செல்வலட்சுமி, "என்னப்பா நேரமாகிறது. டின்னரை எடுத்து வைக்கச் சொல்லலாம் தானே?" என்று மகனிடம் வினவ...

கையில் இருந்த ரோலக்ஸை திருப்பிப் பார்த்து விட்டு, "சொல்லுங்கம்மா! கொஞ்சம் வியர்ப்பது போலிருக்கிறது. நான் குளித்து விட்டுப் பத்து நிமிடத்திற்குள் வந்து விடுகிறேன்..." என்று தாயிடம் கூறியவன், அவர்களிடம் பொதுவான ஒரு தலையசைவுடன் எழுந்து, தன் அறைக்குள் சென்றான்.

அனைவரும் ஒன்றாக அமர... இரவு உணவு விருந்து ஆரம்பமானது.

புதுவிதமாகவும், உடல் நலத்திற்கு ஏற்றதாகவும் இருக்கக்கூடிய உணவு வகைகளையே தயார் செய்திருந்தாள், வீட்டுத் தலைவி.

நாவிலேயே நிற்கிற மாதிரியான ருசி.

பெரிதாக அலட்டல் இல்லாமல் நடந்தாலும் விருந்து நடந்த விதம் சௌந்தரியை வியக்க வைக்கவே செய்தது.

சௌந்தர்யவதியை விருந்தாளியாக எண்ணாமல், தங்களில் ஒருத்தி போலவே நடத்தினார்கள்.

உணவு பரிமாறியபோது, நந்தனுக்குப் பிடித்ததை இயல்பாகப் பரிமாறியதோடு, மற்றவர்களையும் குறை

சொல்ல முடியாதபடி கவனித்த தாரிகாவைப் பார்த்து... ராதை, சுதர்சனத்தின் முகம்- இன்னமும் தெளிவானது உண்மை.

விருந்து முடிந்த பிறகு, சின்னவர்கள் தோட்டத்தை நாடிச் செல்ல... பெரியவர்கள் முன்பு போலவே வசதியாக... சோஃபாவில் அமர்ந்து, வரவேற்பிற்குத் தேவையானதைப் பற்றிப் பேசலானார்கள்.

முதலில் சற்றுத் தயக்கமுடன், தேவையானதை மட்டுமே தேடித் தேடிப் பேசியவர்கள்... பிறகு நேரம் செல்லச் செல்ல... சகஜமாகப் பேசியது அனைவருக் குமே நிம்மதியைக் கொடுத்தது.

தோட்டத்தில் நடந்தபடியே சுற்றிலும் பார்வையை ஓட்டினாள் சௌந்தரி.

அலங்கார விளக்குகளின் வெளிச்சத்தில், அந்த இடம் பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தது.

"என்ன சௌந்தரி! எங்கள் வீடு... அச்சோ திரும்பத் திரும்ப அப்படியே வருகிறது. என் அம்மா வீடு எப்படி இருக்கிறது? ரொம்ப அழகுதானே?" என்று உடன் நடந்தவாறு இயல்பாகக் கேட்டாள் தாரிகா.

"ம்... கலை நயம் மிக்க அழகான வீடு!" என்று ஒத்துக் கொண்டாள் சௌமி.

"இப்படியொரு இடத்தில் வசிக்க யாருக்குமே கொடுத்து வைத்திருக்க வேண்டும் இல்லையா?" என்று அடுத்த கேள்வி.



"உண்மைதான். வசதியாக வாழ விரும்பு வோருக்கு இது மாதிரி வீடு சொர்க்கம் தான். ஆனால் எல்லோருமே வசதியாக வாழ்வதை மட்டுமே பெரிதாக நினைப்பார்கள் என்று சொல்ல முடியாதே.

"என்னிடம் கேட்டால் எனக்கு நான் வளர்ந்து பழகிய... எங்களின் வீடுதான் அதிகச் சந்தோஷம் தரும் சொர்க்கம் என்பேன்!" என்று கூறி முறுவலித்தாள்.

"ஓ! ஆனால்... அதுவும் சரிதான். மனதிற்குப் பிடிக்கும் போதுதான்... எதுவும் சந்தோஷம் தரும்!" என்று, இப்போது ஒத்துக் கொண்டாள் தாரிகா.

தயாபரனின் முகத்தில் தோன்றி மறைந்த குறுஞ் சிரிப்பை... 'எவ்வளவு வசீகரம்!' என்று உள்ளூர ரசித்துப் பார்த்தாள் சௌந்தரி.

எப்போதும், அண்ணனை ஒரு ஹீரோவாகவே எண்ணும் தாரிகாவின் மனதினுள், ஒருவிதப் பிடிவாத எண்ணம் வலுவாக இறுகியது.

அந்த எண்ணத்தின் அடிப்படை... அண்ணன் முகத்தில் இந்தச் சிரிப்பு எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்பதே!

திரும்பி சௌந்தரியவதியைப் பார்த்த போது, நேரமாகிறதே... என்பது போல கடிகாரத்தைப் பார்த்து விட்டு நிமிர்ந்தவளிடம், "இப்போது உங்களிடம் ஒரு ரகசியம் சொல்லப் போகிறேன் சௌமி! இனிமையான

ரகசியம். உங்களால் நீங்கள் அறியாமலேயே எங்கள் குடும்பத்திற்குப் பெரிய நன்மை ஒன்று விளைந்திருக் கிறது.

"முக்கியமாக, அதற்கு நன்றி தெரிவிக்கவும் தான்... நீங்களும் விருந்தில் கலந்து கொண்டால் நன்றாக இருக்குமென்று விரும்பினோம்!" என்று பூடகமாகவே பேசினாள் தாரிகா.

சௌமி என்னவாக இருக்குமென்று யோசித்த போது...

"மறந்தே போனேன் பாருங்கள் அண்ணா! காலையில் ராஜன் அங்கிள் வீட்டிற்கு வந்து பேசிவிட்டுக் கிளம்பியபோது, 'இரவு எட்டு மணி சுமாருக்கு உங்கள் மகனை வீடியோ கான்ஃபரன்ஸில் தொடர்பு கொண்டு பேசச் சொல்கிறீர்களா சார்! எங்களுக்கு நேரடியாக அவரிடமும் ஒருமுறை பேசிவிட்டால் பரவாயில்லை என்று தோன்றுகிறது!' என்றாராம். ரஞ்சனிக்கும் கூட அதேதான் விருப்பமாம்.

"முக்கியமான விஷயம் ஒன்று. அப்பா என்னிடம் கூறி, 'மறக்காமல் ஞாபகப்படுத்தும்மா! அவர்கள் காத்துக் கொண்டிருப்பார்கள்!' என்றார். நல்லவேளை சமயத்தில் எனக்கு ஞாபகம் வந்ததே...

"போங்கள் அண்ணா! அவர்களிடம் உங்களின் தெளிவான பதிலைத் தெரிவித்து விடுங்கள். ரஞ்சனியின் முகம் உங்களுக்கு மறந்து விடவில்லையே?



"வேண்டுமானால் என்னிடம் அவள் ஃபோட்டோ..." என்றவளை இடைமறித்து...

"அவசியமில்லைடா! உன் கல்லூரித் தோழியைத் தான் உன்னுடன் அடிக்கடி பார்த்திருக்கிறேனே.. அத்துடன் அவளையும், அவள் நடந்து கொள்ளும் விதத்தையும், எளிதில் மறந்துவிட முடியாதே..." என்று சிரித்தவாறே கூறினான் தயாபரன்.

தங்கையும் முகம் மலர, "நீங்கள் சொல்வதும் சரிதான் அண்ணா! எல்லாம் நல்லபடியாக நடந்தால் எனக்கு மகிழ்ச்சி!" என்றாள்.

சின்னதாக ஒரு தலையசைவுடன் தயாபரன் வீட்டை நோக்கி நடக்க... வழியில் இருந்த நந்தனும் இணைந்து கொண்டான்.

வெறும் பார்வையாளராக நின்று கொண்டிருந்த சௌந்தரியினுள் ஏதோ நெருடியது.

ஆனால் அது என்னவென்று திட்டமாகத் தெரிய வில்லை. அவள் மனதிற்குப் பிடிக்காத ஏதோ ஒன்று...

இப்போது தாரிகா சொன்ன, அந்த ரஞ்சனி யார்? தயாபரனுக்கும் அந்த ரஞ்சனியை நன்றாகத் தெரியும் போலிருக்கிறதே...

இவள் வேறு ஏதோ ரகசியம் சொல்லப் போவ தாகச் சொன்னாளே... என்று பல விதமாகவும் யோசித்துக் குழம்பினாள் சௌந்தரி.

"உங்களைக் கொஞ்ச நேரம் போரடிக்க வைத்து விட்டேனோ? ஸாரி. எல்லாம்... உரிய நேரத்திற்கு அண்ணனை அவர்களிடம் பேச வைக்க வேண்டுமே என்பதால்தான்.

"நீங்களே அறியாமல் நீங்கள் செய்த உதவி என்றேனே... அது இதுதான் சௌமி. என் அண்ண னுக்குப் பெண்களிடம் பெரிதாக ஈர்ப்பெல்லாம் இருந் ததே இல்லை.

"என்னையும் அம்மாவையும் தவிர, வேறு யாரிடமும் அவ்வளவாக நின்று கூடப் பேச மாட்டார்.

"கல்லூரியில் என் நெருங்கிய தோழி ரஞ்சனியிடம் மட்டும் எப்போதாவது நாலு வார்த்தை நின்று பேசுவார். அண்ணன் இப்படிப் பெண்களிடமிருந்து ஒதுங்கியே இருந்து விடுவாரோ என்று அம்மாவிற்கும் அப்பா விற்கும் உள்ளூர ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது எனக்குத் தெரியும்.

" 'திருமணத்திற்குப் பெண் பார்க்கலாமா தயா?' என்று நான்காண்டுகளாகக் கெஞ்சிக் கேட்டும் பயன் இல்லை. 'பிறகு பார்த்துக் கொள்ளலாம்!' என்ற ஒரே பதிலுடன் எழுந்து போய் விடுவார். அதற்குப் பிறகு ஒரு வார்த்தை கூட வாங்க முடியாது.

"இப்படியிருக்கிற அண்ணன் எப்படி எங்களின் காதலை... அதே அளவிற்குப் புரிந்து கொண்டு செயல்பட்டார் என்று பல தடவை நானே ஆச்சரியப்



பட்டதுண்டு. இந்த மாதிரி நிலையில் தான் நீங்களும் அண்ணனும் சந்திக்கும்படியானது.

"உங்களுடன் பழக ஆரம்பித்த பிறகு, அண்ண னிடம் நிறைய மாற்றம் வந்தது. உங்களை நல்ல தோழி என்று குறிப்பிட்டு அம்மாவிடம் பேசியிருக்கிறார். அதன் பிறகுதான், அம்மாவிற்குக் கொஞ்சம் நம்பிக்கையே வந்திருக்கிறது.

"மகன் ஒரு பெண்ணைத் தோழியாக நினைக்கிற அளவிற்கு மாறியிருக்கிற இந்தச் சமயத்தில், திருமணத்தைப் பற்றிப் பேசினால், நல்லது நடக்க வாய்ப்பிருக்கிறது என்று முடிவு செய்து, போன வாரத்தில் ஒரு நாள் அண்ணனைப் பிடித்து வைத்து, 'இப்போ தாவது உனக்குப் பெண் பார்க்கலாமா தயா? நல்ல நல்ல இடத்தில் இருந்து தகவல் வருகிறது. எங்களின் ஆசையையும் கொஞ்சம் நிறைவேற்றக் கூடாதாப்பா! வேண்டுமானால் உன் தோழியிடம் பேசுகிறேன். அவள் நல்லதாக நாலு வார்த்தை சொன்னாலாவது நீ கேட்கக் கூடும்!' என்றார்களாம்.

"அண்ணன் அன்றைக்கு நல்ல மூடில் இருந் திருக்க வேண்டும். 'என்னம்மா! விட்டால் போஸ்டர் அடித்துக் கூட ஒட்டி விடுவீர்கள் போலிருக்கிறது. சௌமியை, இது விஷயமாக எந்தத் தொல்லையும் செய்யக் கூடாது. சும்மாவே என்னால் அவள் பட்ட தெல்லாம் போதும். இப்போது உங்களுக்கென்ன... என் சம்மதம் தானே வேண்டும். சரி... உங்களின்

ஆசையை இனியும் நான் தள்ளிப் போடவில்லை. தாராளமாகப் பெண்ணைப் பாருங்கள்!' என்று பச்சைக் கொடி காட்டி விட்டார்.

"அம்மா, அப்பாவிற்குச் சொல்ல முடியாத அளவிற்குச் சந்தோஷம். உடனடியாகப் பெண் தேடும் படலத்தையும் ஆரம்பித்து விட்டார்கள். அந்தத் தேடுதலில் கிடைத்ததுதான்...

"ரஞ்சனியைப் பற்றிய விஷயமும். அவள் அப்பா இரும்புக் கம்பி வியாபாரி. எங்கள் அப்பாவுடன், தொழில்முறை பழக்கமும் உண்டு.

"அப்பா அவரை வரவழைத்துப் பேசியிருக்கிறார். அவர்கள் வீட்டிலும் அனைவருக்கும் முழுச் சம்மதம் என்று கூறிவிட்டார்கள். இருந்தாலும் அண்ணனிடம் நேரில் ஒருமுறை பேச வேண்டும் என்று சொன்னதால் தான், இந்த வீடியோ கான்ஃபரன்ஸ் ஏற்பாடு!" என்று அவ்வப்போது சௌமியின் முகத்தில் தோன்றிய மாற்றங்களை மனத்தில் குறித்துக் கொண்டு முழுவதுமாகக் கூறி முடித்தாள் தாரிகா.

தாரிகா சொல்லச் சொல்ல... கேட்டவளின் நெஞ்சம், வலியையும் வேதனையையும் தாங்க மாட்டாது வெடித்துச் சிதறி விடும் போலானது. அவ்வளவு அதிர்ச்சி!

தயாபரன் அவளை வெறும் தோழி என்ற அளவிலா நினைத்தான்? அப்படித் தானே சொல்லியிருக்கிறான்.



ஆனால் அவளால், அவனை நண்பனாக மட்டும் என்று நினைக்க முடியாமல், அதையும் தாண்டி ஏதோ இருப்பது போலல்லவா நினைத்திருந்தாள்!

அவனுடைய பேச்சும் சிரிப்பும் கிண்டலும் அக்கறையும் கூட அதைத்தானே உறுதியாகச் சொன்னது.

பிறகு... பிறகு எப்படி... இப்படியொரு முடிவெடுக்க அவனால் முடிந்தது?

அல்லது அவள் தான் தவறாகக் கணித்து விட்டாளா? என்றும் தோன்றத்தான் செய்தது.

அவன் சாதாரணமாக நினைத்துச் செய்ததையெல்லாம்... அவள் தான் அதிகப்படியாக எண்ணிக் கொண்டாளோ?

எது எப்படியிருந்தாலும், இதை எப்படி ஜீரணிப்பது?

தயாபரனுக்கு வேறு பெண்ணுடன் திருமணம். விரைவாகவே நடக்கலாம்.

நினைத்துப் பார்க்கவே முடியாமல் நெஞ்சம் அடைத்து... திக்குமுக்காடிப் போனாள் சௌந்தரியவதி.

இவ்வளவையும் வெளியே காட்டாமல் சமாளிப்ப தொன்றும் எளிதான காரியமில்லையே?

கசிய முற்பட்ட கண்ணீரைப் பெருமுயற்சி செய்து உள்ளே இழுத்தவளுக்கு... இங்கே இன்னும் எத்தனை நிமிடம் தாக்குப் பிடிக்க முடியுமென்று தோன்றவில்லை.

விரைவாகக் கிளம்பினால் மட்டுமே, மானம் மரியாதை மிஞ்சும்.

எனவே... இறுகியிருந்த தொண்டையைச் சிரமப் பட்டுச் சரியாக்கிக் கொணடு, "எனக்கு இப்போதே நேரமாகி விட்டது தாரிகா. நான் கிளம்பினால் சரியாக இருக்கும்!" என்றுரைத்தாள் சௌந்தரியவதி.

குரல் மாறியிருப்பதைக் கவனிக்காதவள் போல, "ஓ! உங்கள் தாத்தா வேறு தனியாக இருப்பார் இல்லையா? உங்களோடு பேசியதில்... இவ்வளவு நேரமானதே தெரியவில்லை. வாருங்கள் போகலாம்!" என்று கூறித் திரும்பி வந்தபோது...

அவர்களை எதற்காகவோ தேடி வந்த செல்வ லட்சுமி, சௌந்தரியவதியின் கைகளைப் பற்றி மென்மையாக அழுத்தி விட்டு, "தரு உன்னிடம் எல்லா வற்றையும் சொல்லியிருப்பாள் என்று நினைக்கிறேன் சௌமி! எனக்குச் சந்தோஷத்தில் தலைகால் புரியாத நிலை தான். தயா திருமணத்தின் முதல் அழைப்பு மரியாதை உனக்குத்தான்.

"திருமணத் தேதியைத் தவிர மற்றதெல்லா வற்றையும் முடிவு செய்தாயிற்று. பலதும் உன்னால் நடந்தது தான். எல்லாவற்றிற்குமாகச் சேர்த்து ரொம்ப நன்றிம்மா!" என்று மனதில் இருந்ததை வாய்மொழியாக உரைத்தாள்.

கேட்டவளுக்கோ மீண்டும் தொண்டையை அடைத்தது.



துக்கத்தை விழுங்கிக் கொண்டு எல்லோரிடமும் வெறுமனே தலையாட்ட மட்டும் தான் முடிந்தது.

அப்போது அறைக்குள்ளிருந்து திரும்பி வந்த தயாபரனிடம், "என்ன அண்ணா எல்லாம் பேசி முடித் தாயிற்றா?" என்று தாரிகா வினவ...

"நூறு சதவீதம்!" என்று பதிலளித்து முறுவலித்தான் தயாபரன்.

சௌமியை வீட்டில் விட்டு விட்டு வர அவன் கிளம்பிய போது, வேண்டாம் என்ற சொல்ல நினைத் தாலும்... ஒருவேளை இதுதான் இவனுடனான கடைசி கார் பயணமோ என்ற நினைவு, அவளின் வாயை மூடச் செய்தது.

திரும்பிய வழியில் காரில் அமைதி மட்டுமே தொடர... அந்த ரஞ்சனியைப் பற்றி தன்னிடம்... நல்ல தோழியாக மட்டுமே நினைக்கும் தன்னிடம் ஏதாவது சொல்வானோ என்று எதிர்பார்த்தவளுக்கு, அப்படி ஏதாவது சொன்னான் என்றால்... தன்னால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியாதே என்ற பயமும் எழ... கண்களை இறுக மூடிக் கொண்டு இருக்கையில் தலை சாய்த்தாள்.

"நீ எங்கள் வீட்டிற்கு வந்திருக்கிற சமயமாகப் பார்த்து... வழக்கம் போல உன்னிடம் பேச முடியாமல், நிறைய வேலை இன்றைக்கு. அதுதான் என்னவோ ஒரு மாதிரியாகத் தோன்றுகிறது; போலிருக்கிறது!" என்று

மெல்லிய குரலில் தனக்குத் தானே கூறுவது போல் கூறினான் தயாபரன்.

உண்மைதான்! இருவரும் பெரிதாக ஒன்றுமே பேசிக் கொள்ளவில்லை. இப்போது வாய்ப்புக் கிடைத்த போது, அவளுக்கு எதைப் பற்றியுமே பேசத் தோன்ற வில்லை.

அவளின் அழகான உலகம், முழுக்க முழுக்க ஸ்தம்பித்துக் கிடந்தது. வெறும் இருட்டு மட்டும் தான் மிச்சமிருக்கிறதோ?

அவளிடமிருந்து பதிலின்றிப் போகவும், திரும் பியவன் என்ன நினைத்தானோ... "ஏன் உன் முகம் டல்லாக இருக்கிறது செளமி?" என்று வேகத்தைக் குறைத்தபடி வினவினான்.

எதிலிருந்தோ விழித்தவள் போல... கொஞ்சம் திடுக்கிட்டே தலை நிமிர்த்தியவள், "கொஞ்சம் தலைவலி. அதிகமாகவே தலைவலிக்கிறது தயா! அதனால் இருக்கும்..." என்றாள் மெல்லிய குரலில்.

"ரொம்ப வலிக்கிறதா? சரிம்மா! நீ நன்றாகச் சாய்ந்து கொள்..." என்று கூறியவன், கை நீட்டிப் பின் சீட்டிலிருந்து குஷன் ஒன்றையும் எடுத்துக் கொடுத்தான்.

தலையோடு, மனதிற்கும் இதமாக இருந்தது அவளுக்கு. அதே சமயம், இனிமேல் இப்படி உணர் வதும் கூட தப்புதான். மாற்றிக் கொள்ள வேண்டு மென்றும் தோன்றத் தவறவில்லை.



மனதின் அழுத்தமெல்லாம் தலை வரை பரவி யதோ? லேசான தலைவலி... மெய்யாகவே அதிகமாக ஆரம்பித்தது.

சில நிமிடங்கள் கூட கடந்திருக்காது. கார் நின்றிருக்க... சிரமத்துடனே இமைகளைப் பிரித்துப் பார்த்தபோது, எதிரே இருந்த மருந்துக் கடையிலிருந்து திரும்பி வந்தவன், தலைவலிக்கான மாத்திரையையும் மருந்தையும் அவளிடம் கொடுத்து விட்டு, காரின் ஸைடில் இருந்த வாட்டர் பாட்டிலை எடுத்தபடியே, "தலைவலி என்ற உடனே, மாத்திரை போடுகிற பழக்கம் உனக்கும் இருக்காதென்றுதான் நினைக்கிறேன். மருந்தை தடவிக் கொண்டு நன்றாக ஓய்வெடுத்தாலே போதும் தான்.

"ஆனால் உன் வீட்டிற்குச் செல்ல குறைந்தது ஒரு மணி நேரமாகுமே... சும்மாவே வாடித் தெரிகிறாய். அவ்வளவு நேரம் ஏன் வலியை அனுபவிக்க வேண்டும். எப்போதாவது போடுவதால் பெரிதாக ஒன்றும் ஆகாது!" என்று கூறியவாறே பாட்டிலைத் திறந்தவன்... "என்னம்மா! இன்னமும் பிரிக்காமலேயே வைத்திருக் கிறாயே?" என்று கூறிவிட்டு, தானே எடுத்துப் பிரித்தான்.

இந்த அன்பான அக்கறைக்குப் பின்னால் இருப்ப தெல்லாம் வெறும் தோழமை உணர்வு மட்டும்தானா?

அதுதான் உண்மையென்று தெரிந்துவிட்ட போதும், ஏனோ அவளால் நம்பவே முடிய வில்லையே...

இதமாக உணரக் கூடாது என்று, இப்போது தானே நினைத்தாள். ஆனால் அப்படியும் கூட இருக்க முடியவில்லையே?

உயிர் போகிற வலி என்பார்களே... அது, இதை விடவா அதிகமாக இருந்து விடும்?

தாங்க மாட்டாமல், நீட்டியிருந்த அவன் கைகளி லேயே முகம் பதித்து, 'ஹோ!'வென்று கதறி விடலாம் போல் ஒரு கணம் பேரலையாக ஒரு எண்ணம் தோன்றிவிட... அப்படியே திகைத்து விதிர் விதிர்த்துப் போனாள் சௌந்தர்யவதி.

## 17

அவளா? அவளா இப்படி நினைத் தாள்?

எவ்வளவு பெரிய முட்டாள் தனம்.

அப்படி எதுவும் நடந்து விட்டால், பிறகு இவன் முகத்தை எப்படி நிமிர்ந்து பார்ப்பது? எவ்வளவு கேவலம்!

வீட்டிற்குப் போகும் வரை, எதையும் வெளிப் படுத்தி விடாதே மனதே... என்று, தன் மனதிடமே கெஞ்சிக் கேட்டுக் கொண்டு விட்டு... மாத்திரையை விழுங்கியவள், மீண்டும் பழைய மாதிரியே கண்களை இறுக மூடிக் கொண்டு சாய்ந்தாள்.

பயணம் மீண்டும் மௌனமாகவே தொடர்ந்தது. அவளை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு, காரின் உட்புறத்திலிருந்த லைட்டை அணைத்தான் தயாபரன்.



மீண்டும் அவளின் வசதிக்காக ஒரு செயல்...!

மூடியிருந்த இமைகளையும் மீறி, சூடான கண்ணீர் அவள் கன்னங்களில் வழிந்தது.

ஆனால் அழுவதற்கான இடம் இதுவல்ல என்பது புரிய... கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, இருட்டிலும் எதிர்ப்புற வாகன வெளிச்சத்திலுமாகத் தெரிந்த அவன் உருவத்தையே, கண்கள் அகலப் பார்த்துக் கொண்டு வந்தாள் சௌந்தரியவதி.

அவளின் வீட்டிற்கு முன்னால் வந்து நின்ற பிறகே, மீண்டும் லைட்டைப் போட்டான் அவன்.

அவள் கீழே இறங்கியதும், "இப்போது வலி எப்படி இருக்கிறது?" என்று கேட்டபடியே கேட்டைத் தள்ளித் திறந்து விட்டான்.

"ப... பரவாயில்லை!" என்ற ஒற்றை வார்த் தைக்கே சிரமம் தான்.

"குரலும் கூட பின்னலடிக்கிறது. மறவாமல் விக்ஸையும் தடவிக் கொள். வீட்டின் உள்ளே வெளிச்சம் தெரிகிறது. உன் தாத்தா விழித்துக் கொண்டுதான் இருப்பார். உள்ளே வந்து அவரிடம் இரண்டு வார்த்தை பேசத் தான் விருப்பம்.

"ஆனால், அதுவரை வெளிகேட்டைப் பூட்டுவதற் காக... நீ ஓய்வெடுக்கச் செல்ல முடியாமல் நிற்க வேண்டுமே... அதனால் வேண்டாம். பிறகு வரும் போது சேர்த்து வைத்துப் பேசிக் கொள்கிறேன்.

பை சௌமி!" என்று கூறி, பளிச்சென்று புன்னகைத்தான் தயாபரன்.

இதை என்னவென்று சொல்லுவது? இதற்குப் பின்னாலும் ஒன்றுமேயில்லை என்றா?

அதோடு, இந்தப் புன்னகையையும், இவனையும் அவளால் மறந்து விட முடியுமா! எப்படி?

சின்னத் தலையசைவுடன் உள்ளே சென்று கேட்டைப் பூட்டிய போதுதான், அவனும் கிளம்பிச் சென்றான்.

காத்திருந்த தாத்தாவிடம், எதையும் காட்டிக் கொள்ளாமல் இரண்டு வார்த்தை பேசிவிட்டு, தன் அறைக்குள் சென்று கட்டிலில் விழுந்து... ஓசையற்றுக் கண்ணீர் வடித்தாள்.

தயாபரனின் வீட்டிற்குச் செல்வதற்கு அவ்வளவு தயங்கினாளே... உள்ளுணர்வு சொன்னதை ஒதுக்கி விட்டுப் போனதற்கு... நல்ல தண்டனை தான் கிடைத்திருக்கிறது.

நினைத்து நினைத்து மகிழக் கூடியதாக எத்தனை விஷயங்கள் நடந்திருக்கிறது. ஆனால்...

தனக்கு மட்டும் தான் அப்படியெல்லாம் தோன்றியிருக்க வேண்டும். இல்லையென்றால், அவனால் இப்படி வீட்டில் பார்த்த பெண்ணை மணக்கச் சம்மதம் தெரிவித்திருக்க முடியாது.



அவளுக்குத் தோன்றிய காதல் உணர்வு. அவனுக்குத் தோன்றாமல் போனது... அவளின் துரதிர்ஷ்டம் என்று தான் நினைத்தாள்.

பெரிதாக எதிலுமே அவளுக்கு அதிர்ஷ்டம் இல்லையென்றுதான் சொல்ல வேண்டுமோ?

இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக் காதே!

இனி அடுத்தென்ன? தயாபரன் அந்த ரஞ்சனியை மணக்கப் போகிற நாளை எண்ண வேண்டியது தானா? அவன் தாய் சொன்னது போலவே... முதல் அழைப்பை அவளிடமே கொடுக்க வருவார்களோ?

வரலாம். அதை எதிர்கொள்கிற சக்தியை அவள் தான் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்னொரு பெண்ணுடனான அவன் வாழ்வை நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருந்தது.

திருமணம் முடிவு செய்யப்பட்டுவிட்ட ஒருவனைப் பற்றி, இப்படியெல்லாம் நினைத்து ஏங்கித் தவிப்பது தப்பேதான்.

ஆனால், அதை மனதால் ஏற்க முடியவில் லையே! வேறு வழியே இல்லையா என்று தேடித் தவிக் கிறதே?

அவனை முழுவதுமாக இழந்த பிறகுதானே, அவனை எந்தளவிற்கு நேசிக்கிறோம் என்பதே புரிகிறது.

இழப்பு பல மடங்காகப் பெருகித் தெரிய... 'ஹோ...'வென்று கதறிவிட்டாள் அவள்.

பேசாமல் எல்லாவற்றையும் தூக்கிப் போட்டு விட்டு, என்ன வேண்டுமானாலும் நடந்து கொண்டு போகிறது என்று துணிந்து, அவனிடம் தன் நேசத்தை வெளிப்படையாகச் சொல்லியே விட்டால் என்ன? என்றொரு எண்ணம் தோன்றவும்...

ஒரு கணம் அவளின் உடம்பெல்லாம் நடுங்கியே விட்டது.

அவளுக்கு ஏன் திரும்பவும் இது போலத் தோன்று கிறது?

இவ்வளவு தீவிரமாக நினைப்பது நல்லதற் கல்லவே!

'நல்லவள் என்று சிரித்துப் பேசினால்... உடனே உன் இஷ்டத்திற்கு கற்பனை செய்து கொள்வாயா? சீ!' என்று அவன் சொல்லி விட்டால், எவ்வளவு அசிங்க மாகிப் போகும்.

ஆனால்... தயாபரனால் அவளை 'சீ...!' என்று சொல்லி ஒதுக்கிவிட முடியுமா? நிச்சயமாக அப்படிச் செய்ய மாட்டான். மாறாக... 'ஸாரி செளமி! உன்னிடம் நான் எதிர்பார்க்கவில்லை!' என்று சொல்லக்கூடும்.

அதையும் கூட, அவளுக்கு வலித்து விடாத வகையில் மெல்லவே சொல்வான் என்று தோன்றவும், அதற்காகவும் கட்டுப்பாடற்ற அழுகைதான்.



தொடர்ந்து சில மணி நேரமாக அழுது கொண்டே இருந்ததில்... அவளின் முகமும் கண்களும் சிவந்து வீங்கிப் போனது.

தயாபரனின் வீட்டில் நடந்தவை எல்லாம், இல்லையென்றானால்... எவ்வளவு நன்றாக இருக்கும்.

மீண்டும் எல்லாம் பழைய மாதிரியே ஆகிவிடுமே என்று... மாறவே முடியாத ஒன்றின் மீதும் அளவிட முடியாத அளவிற்கு... ஒரு ஆசை தோன்றியது.

அந்த ஆசை நிராசை என்ற விரக்தியோடு இலக்கற்று வெறித்தபோது, கட்டிலின் மறுபக்கம் இருந்த செல்ஃபோன் மின்னி மின்னி அணைந்தது.

தடையற்று அழ வேண்டும் என்று தானே, அவள் செல்லை சைலண்ட் மோடில் போட்டதே!

இப்போது அதற்கும் தொல்லையா? என்று முதலில் அதை எடுக்கக் கூடத் தோன்றவில்லை அவளுக்கு.

இருக்கிற வேதனையிலே, 'இதையெல்லாம் கண்டுபிடிக்கவில்லை என்று யார் கேட்டார்களாம்?' என்று மேலே ஏதேதோ தோன்றியபோது, சட்டென்று அவளுக்குள் ஒரு பொறி தட்டியது.

நடுநிசி நேரம் இருக்கலாம். இப்போது யார்? சட்டென்று இதயத் துடிப்பு கூட...

ஒருவேளை... நூறில் ஒரு வாய்ப்பாக அவனா...?

நடுங்கிய கை வேகமாக செல்லை நோக்கி நீண்டது.

'வெளியே வந்து கேட்டைத் திற சௌமி!' என்று எஸ்.எம்.எஸ். தயாபரனிடமிருந்து தான் வந்திருந்தது.

படபடப்பு அதிகமாக, நம்ப முடியாதவளாக... உண்மையிலேயே அவனிடமிருந்து தானா வந்திருக்கிறது என்று மீண்டும் ஒருமுறை பார்த்தபடியே கீழே இறங்கினாள்.

'கேட்டைத் திற...' என்றால், அவன் வெளியேவா நின்று கொண்டிருக்கிறான்! ஏன்? எதற்காக இருக்கும்? என்று கணநேரத்திற்குள் எத்தனையோ கேள்விகள் தோன்றிய போதும்...

இப்போது அவனைப் பார்க்கப் போகிறோம் என்ற நினைவு, மற்ற எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ள... விரைந்து சென்று கேட்டைத் திறந்தாள் சௌந்தரியவதி.

வெளியே முகத்தில் கலக்கமுடன் நின்றிருந்தவன் தயாபரனே தான்!

அவளைப் பார்த்ததும், வினாடியும் தாமதிக்காமல் இரு கைகளையும் அவன் விரித்துக் காட்ட...

தவிப்போடு ஓடி வந்தவளை... வேகமான எட்டுகளுடன் முன்னே வந்து இறுகத் தழுவி முத்தமிட்டதோடு, "உன்னைத்தான் காதலிக்கிறேன், கண்மணி!" என்று கரகரத்தக் குரலில் கூறினான் தயாபரன்.



"தயா!" என்று பிரமிப்போடு பார்த்தாள் அவள்.

காதில் விழுந்த வார்த்தைகள் நிஜம் தானா?

"நிஜமேதான் கண்மணி!" என்று அதே குரலில் கூறி, அவள் நெற்றியிலே உதடுகளைப் பதித்தான் அவன்.

"என்னால்... என்னால் நம்பவே முடியவில்லையே தயா! உங்கள் தங்கை உங்களுக்குத் திருமணம்... வேறு... வேறு பெண்ணுடன் முடிவாகி விட்டதாகச் சொன்..." என்று முழுவதுமாகக் கூறக்கூட இயலாமல், அவளின் வார்த்தைகள் திக்கித் திணறிப் பாதியோடு நின்று விட்டது.

இன்னமும் இந்தளவிற்குப் பாதிக்கிறதே!

"எதுவும் உண்மையில்லை சௌமிம்மா! எல்லாம் எனக்கே தெரியாமல் நடத்தப்பட்ட நாட... ஹேய்! என்னடாம்மா...?" என்று கொஞ்சம் பதறியே கேட்குமளவிற்கு இருந்தது, அவளின் இறுகிய அணைப்பு!

'எதுவும் உண்மையில்லை!' என்ற இரண்டே வார்த்தைகள், அவளின் அத்தனைத் துயரங்களுக்கும் வடிகாலாக இருந்ததோ?

இல்லையென்றால் இவ்வளவு தீவிரமாக அணைத்துக் கொண்டு, "உங்களை... உங்களை இனி எதற்காகவும் யாருக்காகவும் என்னால் விட்டுத் தர முடியாது தயா! முடியவே முடியாது..." என்று கண்ணீர் வழிய அரற்றியிருக்க முடியாது.

அவளின் மனநிலையை முழுவதுமாக உணர்ந்தவனாக, "விட்டுத் தரவே வேண்டாம் கண்மணி!" என்று மொழிந்தபடியே, அவளின் தலையையும், முதுகையும் அன்போடு வருடி விட்டான் தயாபரன்.

அவனுக்குமே அப்போது அந்த அணைப்பு, அவசியம் தேவையாகத்தான் இருந்தது.

மௌனமாக சில கணங்கள் கடந்து செல்ல...

சட்டையிலே கண்ணீரை உணர்ந்து... அவளின் முகத்தை நிமிர்த்தி, "இன்னமும் இந்தக் கண்ணீருக்கு இங்கே என்ன வேலை? ம்...!" என்று கன்னங்களைத் துடைத்தவாறு கேட்டான்.

"இது சந்தோஷக் கண்ணீர் தயா!"

"சந்தோஷமோ... துக்கமோ... இனி ஒருபோதும் கண்ணீர் கூடாது. எதுவாக இருந்தாலும் என்னிடம் நேரடியாகக் கேட்டுவிட வேண்டும்!" என்று, சலுகையும் சிறு கண்டிப்புமாகவே கூறினான்.

'சரி' என்பதாகத் தலையசைத்தவள், "உங்கள் தங்கை சொன்னதெல்லாம் உண்மையில்லை என்றீர்களே! உங்களுக்கு எப்போது, எப்படித் தெரிந்தது?

"என்னிடம் அவர்கள் ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? உங்கள் அம்மாவும் சேர்ந்து தானே சொன்னார்கள்!" என்று கேள்விகளை வேகமாக அடுக்கினாள் அவள்.



"மெல்ல... மெல்ல... மூச்சு முட்டப் போகிறது. ஒவ்வொன்றாகக் கேள்!" என்று சூழ்நிலையின் இறுக்கத்தைத் தளர்த்த முயன்றவனாகக் கூறி விட்டு, "உன்னை அழைத்து வந்தபோதே, உள்ளூர என்னவோ சரியில்லையோ என்று தோன்றிக் கொண்டே இருந்ததும்மா! சரி... நீ தலைவலி என்று அமைதியாக வந்ததினால் இருக்கும் என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்.

"உன்னை விட்டு விட்டுத் திரும்பிச் சென்றபோது... மீண்டும் ஏதோ உறுத்த ஆரம்பித்து விட்டது. சற்று நேரம் நடந்து விட்டு வந்தாலாவது தூக்கம் வருமா என்று மொட்டைமாடிக்குச் சென்றேன். அங்கே..." என்றவனுக்கு குரல் சற்று இறுகிப் போனது.

மனதை என்னவோ செய்ய... அவனுடைய குரல்வளையை மென்மையாக வருடி விட்டாள் அவள்.

வருடிய கையைப் பற்றி இதமாக அழுத்தியவன், "அங்கே அம்மா, அப்பாவிடம் ரொம்பவும் புலம்புவது போல் பேசிக் கொண்டிருந்தார்கள். 'இப்படிச் செய்திருக்க வேண்டாமோ என்று ரொம்பவும் உறுத்தலாக இருக்கிறது தயாப்பா!

"கேட்க... கேட்க அந்தப் பெண் சௌமியின் முகம் அப்படியே வாடிக் கலங்கிப் போயிற்று தெரியுமா! கலங்கிய கண்களை எவ்வளவு முயற்சி செய்து கட்டுப் படுத்தினாள். பாவம்ப்பா! என்னதான் நல்லதற்கென்று தரு சொன்னாலும்... நாம் ஒத்துக் கொண்டிருக்கக் கூடாதோ என்று தோன்றுகிறது!' என்றார்கள்.

"நீ இந்தளவிற்குச் சொல்கிறாயென்றால்... ஊஹூம். நடந்தவற்றையெல்லாம் தயாவிடம் சொல்லி விடுவது தான் உசிதம். அதுவும் உடனே..." என்று சற்குணம் கூறி முடிப்பதற்குள்ளாகவே...

"அப்படி என்னப்பா இங்கே நடந்தது?" என்று கேட்டது மகனின் குரல்.

சட்டென்று திரும்பியவர்கள், அதற்கு மேல் நிமிடமும் தாமதிக்காமல்... நடந்த எல்லாவற்றையுமே மகனிடம் தெரிவித்தார்கள்.

"கேட்டபோது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா, சௌமிம்மா! 'அவளை ரொம்பவும் காயப்படுத்தி விட்டீர்களே...' என்று கூறிவிட்டு... வினாடிப் பொழுது கூட தாமதிக்காமல் விரைந்து கிளம்பினேன்.

"நீ என்ன நிலையில் இருக்கிறாயோ என்று தெரியாமல்... அந்தத் தவிப்பு...!" என்று நிறுத்தி, அவளின் கழுத்தோரம் முகம் பதித்தான் தயாபரன்.

அவளைப் போலவேதான் கஷ்டப்பட்டிருக்கிறான் என்பது நன்றாகவே புரிந்தது.

அப்போதுதான் வெளியே நின்றிருந்த காரையும் நன்றாகப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட பாதிக் கார் வரையும் வெறும் சேற்று சகதி அடித்திருந்தது.

'எப்போதுமே பளபளவென்று தூய்மையோடு தானே இருக்கும். எந்தளவிற்கு வேகமாக ஓட்டி



வந்திருந்தால், இப்படி சேறு அடித்திருக்கும்?' கேட்ட போது...

"அதையெல்லாம் எங்கே பார்த்தேன்? ஆனால் அதீத வேகம் தான். நிச்சயம் 120க்கு மேல் இருக்கும். இல்லையென்றால் கார் இப்படிச் சேற்றில் குளித்திருக் காது. என்ன செய்வது?

"அப்போது உன்னைச் செல்லில் அழைக்கவும் பயம் தான். உன் தாத்தா என்னவோ ஏதோவென்று பதறிவிட்டால்... அதனால்தான்... இங்கே வந்த பிறகு எஸ்.எம்.எஸ். மட்டும் அனுப்பினேன்..." என்றவன், மெல்லிய ஒரு மூச்சோடு... "சௌமிம்மா! நாம் இன்னும் கொஞ்சம் வெளிச்சமான பகுதிக்குப் போய் விட்டால் நல்லது. தொடர்ந்து இங்கேயே நின்று உன் தாத்தா விடம் வாங்கி இருக்கிற நல்ல பெயரை இழக்க எனக்கு விருப்பமில்லை. கொஞ்சம் தயவு வை கண்மணி!" என்று கெஞ்சுவது போல் பாவனை செய்து அவன் கேட்க...

என்ன அர்த்தத்தில் இவ்வளவு சலுகையோடு சொல்கிறான்? இவனை "உதைபடப் போகிறீர்கள்!" என்று சுட்டு விரலை நீட்டிப் போலியான கோபத்துடன் கூறிய போதே, அவளுக்குமே வேதனை, நிம்மதி, மகிழ்ச்சி என்று அடுத்தடுத்து வெவ்வேறு உணர்வு களைக் கடந்து வந்திருந்ததில் உடலும் கால்களும் தொய்ந்து போய்... சற்று உட்கார்ந்தால் தேவலாம் போலிருந்தது.

அவளின் முகத்தில், மனதை அறிந்தவனாக... குறுஞ்சிரிப்போடு அவளைக் கைகளிலேயே ஏந்திக் கொண்டு, இருக்கைகள் இருந்த இடத்தை நோக்கி நடந்தான் அவன்.

"உன்னை இப்படிக் கைகளிலே ஏந்திக் கொள்கிற மாதிரி, எத்தனை முறை கற்பனை செய்திருக்கிறேன் தெரியுமாடா? ரொம்ப நாளைக்கு முன்பாகவே இதெல்லாம் ஆரம்பித்து விட்டது. வீட்டில் தனிமையில் எதேச்சையாகத் திரும்பினால் கூட... நீ அங்கே நின்று முறுவலிப்பது போல் தோன்றும். விஷயம் அந்தளவிற்கு முற்றிவிட்டிருந்தது.

"ஆனால் அம்மையாரிடமிருந்து அப்போ தெல்லாம் பெரிதாக எந்த மாற்றமும் இல்லை!" என்று கேலி போல் கூறியவன்... அவனின் ஒரு கையைப் பற்றி இயல்பு போல் வருடிவிட...

"ஒரேயடியாக அப்படிச் சொல்லிவிட முடியாது தயா! எனக்கும் கூட உங்களைக் குறித்து சில இனிய கற்பனைகள் தோன்றியதுண்டு!" என்று, காஃபி ஷாப்பிலே அவள் நினைத்ததைச் சொன்னாள் சௌமி.

"ஆஹா! என்னை நினைத்துக் கொண்டா அவ்வளவு அழகான போஸிலே அமர்ந்திருந்தாய்? ஆனால் அதையும் நானே கெடுத்தேனே... பாவி!

"இருந்தாலும் நீ ஏன் என்னிடம் முன்வந்து எதையும் தெரிவிக்க நினைக்கவில்லை சௌமிம்மா!



பிறகு ஓரளவிற்கு நமக்குள் எல்லாம் சரியாக ஆரம்பித்த பிறகும் கூட..." என்று கேட்டான்.

"அது... நீங்கள் ரொம்ப வசதியானவர் தயா! அப்படியெல்லாம் சட்டென்று எதையும் கேட்டுவிட முடியாது. அதுவும் என்னால் நிச்சயமாக முடியவே முடியாது!" என்றுரைத்தாள் அவள்.

"வெறும் வசதியை மட்டும் வைத்துக் கொண்டு... சந்தோஷமாக வாழ்ந்துவிட முடியுமா? என்னால் நிச்சயமாக முடியாது. எவ்வளவு வசதியாக இருந்தாலும், உனக்கு முன்னால் அதெல்லாம் ஒன்றுமே இல்லைடா!" என்றவனின் குரல் மீண்டும் கரகரக்க...

கொஞ்சம் திகைப்போடு தான் பார்த்தாள் அவள்.

அன்பு என்ற சொல், கண்டிப்பாக மாயாஜால மானது தான். இல்லையென்றால் இப்படிப் பேச இயலாதே என்ற எண்ணம் ஓடியபோது...

"இந்த மாதிரி... இதற்கு முன்பு எத்தனை முறை பார்த்திருக்கிறாய் தெரியுமாடா? அப்படியே அள்ளி நெஞ்சோடு அணைத்துக் கொண்டு விடலாம் போல் தோன்றும். பெருமுயற்சி செய்து கட்டுப்படுத்திக் கொள் வேன்.

"உன் மனதை ஜெயிக்க... இன்னமும் கொஞ்ச நாள் காத்திருக்கத்தான் வேண்டும் என்று... என் முகத்தைப் பார்த்து விட்டுப் பிடிவாதமாகக் கேட்ட தருவிடம் சொன்னேன்...

"என்னுடைய மாற்றங்களைக் கொஞ்ச நாட்களாக அவளும் கவனித்திருக்க வேண்டும். 'பட்டென்று நேருக்கு நேர் சொல்வதை விட்டுவிட்டு, எதற்கண்ணா இந்தத் தயக்கம்?' என்று அப்போதே கேட்டாள்.

"உன்னுடைய காதல் மலர்ந்த விதம் வேறு. என் விஷயம் அப்படியல்லவே! திடுமென... அவளின் அமைதியை முதற்கொண்டு அத்தனையையும் குலைத்துப் போட்டு விட்டு... அதையெல்லாம் சரி செய்து விட்டாலுமே கூட... உடனே காதலென்று போய் நிற்க முடியவில்லை.

"அவளாகவே அதை உணர்கிற வரை... காத்திருக்கத்தான் வேண்டும். வேறு வழியில்லை என்றேன்.

"என் ஏக்கம் முகத்தில் பிரதிபலித்திருக்க வேண்டும். இல்லையென்றால், தரு இப்படி வீட்டில் இருப்போரைத் துணை சேர்த்துக் கொண்டு, தொழில் விருத்திக்காக கடன் பெற... அப்பாவைப் பார்க்க வந்தவர்களைப் பற்றி முழுக்க மாற்றிச் சொல்லி... உன்னை வேறு விதமாக முடுக்கி விட்டிருக்க மாட்டாள்.

"நானும் இவர்களின் திட்டம் தெரியாமல், அவர்களுடன் தொழில் விஷயமாக வீடியோவில் பேசி விட்டு வந்தது, உன்னை இன்னமும் கலங்க வைத் திருக்கும். இல்லையாடா?" என்றான் தயாபரன்.

அருகில் யாரும் இல்லாத சமயமாகப் பார்த்து தானே... தாரிகா, 'என் அண்ணனுக்கு விரைவில் திருமணம்!' என்றாள். அவள் அம்மாவின் பங்களிப்பு கூட... கடைசியாகத் தானே முத்தாய்ப்பாக வந்தது.



எல்லாம்... அவளை அவளே அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் செய்திருக்கிறார்கள். தயாபரனின் வீட்டில் இருந்த போது, அவ்வப்போது யாரோ தன்னை உற்று நோக்கிக் கவனிப்பது போல் தோன்றியதே? தாரிகா தான் கவனித்திருக்க வேண்டும்.

நடத்தப்பட்ட அனைத்தும், நன்மை நடக்க வேண்டும் என்பதற்காக மட்டும்தான்.

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்களே...

உண்மைதான்.

சில மணி நேரத்து வலி, வேதனையையே தாங்க முடியவில்லை என்றபோது, வாழ்நாள் முழுவதும், இவனின்றி அவளால் எப்படி இருக்க முடியுமாம்?

இதை... இவ்வளவு உறுதியாக உணர வைத்த தற்காக... தாரிகாவிற்கு நிச்சயம் நன்றி சொல்லத்தான் வேண்டும்! என்ற எண்ணம் அவளுள் ஓடிக் கொண் டிருக்க...

"அவர்களால் நீ அனுபவித்த சில மணி நேரத்துக் கஷ்டம், வேதனைதான் கண்மணி! ஆனால் அதற் காக நீ தருவைத் தவறாக நினைத்து விட வேண்டாம். எனக்காக... ப்ளீஸ்டா!

"நம்முடைய நல்வாழ்விற்காகத்தான் அவள் இப்படியெல்லாம்..." என்றவனை... அவளின் மையல் முறுவல் இடையிட்டு நிறுத்தியது.

"என்னடா... ஆளை இப்படி விழத் தட்டுகிறாய்?" என்று கேட்டு... அவளின் கன்னத்தை வருடினான் அவன்.

"எனக்கும் இப்படியேதான் தோன்றியதுப்பா!" என்று செல்லக் கண்சிமிட்டலோடு அவள் கூற....

"ஹப்பா! இப்போது தான் நிம்மதியாக இருக்கிறது. ரொம்பத் தேங்க்ஸ்டா!" என்றுரைத்தான் அவன்.

"நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்கும் போதும், உங்கள் தங்கை உங்களுக்கு ரொம்ப முக்கியம். இல்லையா தயா?" என்று கேட்டாள் அவள்.

"என்னடா! உன் குரலில் இந்தப் பொல்லாத பொறாமை ஏதும் எட்டிப் பார்க்கிறதா?" என்று கேலி செய்வது போல் கேட்க... அவள் சுட்டு விரலை நீட்டி மெய்யாகவே மிரட்டினாள்.

குறுஞ்சிரிப்புடன் பார்த்து, "உனக்குத் தான் முன்பே எல்லாம் சொல்லியிருக்கிறேனே... அவள் எப்போதும் முக்கியம்தான். நம் விஷயம் கேள்விப்படும் போது எவ்வளவு சந்தோஷப்படுவாள் தெரியுமா? அதோடு நாம் இருவரும் சந்திக்க நேர்ந்ததே அவள் விஷயத்தினால் தானே!" என்றான்.



ஆமோதிப்பவளாகத் தலையசைத்து, "அந்த முதல் சந்திப்பு நினைவிருக்கிறதா தயா?" என்றாள்.

"இந்த ஜென்மத்தில் மறக்கக் கூடிய நாளா அது? நினைவில்லாமல் எங்கே போய்விடும். பார்க்கும் போதே சொக்கிப் போக வைக்கிற அழகிய வசீகரப் புன்னகையுடன், தேவலோகப் பெண் மாதிரி நடந்து வந்தாயே... அந்தக் கணமே உள்ளூரப் பாதிப்பு உண்டாகி விட்டது.

"இருந்தாலும் அன்று உன் நிச்சயதார்த்தம் ஏற்பாடாகி இருந்ததே... நந்தனைப் பற்றி நீ என்ன நினைத்து வைத்திருக்கிறாயோ என்று தவிப்பும் தோன்றியது. ஆனால் சில கணத்திலேயே நந்தன் மீது உனக்குப் பெரிதாக ஈடுபாடு இல்லையென்று தெரிந்து போனது.

"நந்தன் - தாரிகாவின் திருமணம் பற்றித் தெரிவித்ததும்... உன் தாத்தாவைப் பற்றித்தான் கவலைப் பட்டாயே தவிர... நந்தன் ஏமாற்றி விட்டதாகவோ... என் வாழ்வு என்னவாகுமோ? என்று நீ கலங்கவில்லை என்பதைக் கண்டு எனக்கு எவ்வளவு திருப்தியாக இருந்தது தெரியுமா?" என்றான்.

அன்றைக்குத் தயாவின் முகத்தில் தோன்றிய திருப்தியான முறுவலைக் கண்டு அதிர்ந்தோமே... அப்போதேவா...! எனப் பிரமிப்போடு இருந்தது அவளுக்கு.

"நீ ஆத்திரப்பட்டாய். கோபமாக முகம் திருப்பினாய். அலட்சியமாகப் பேசி அவமதித்தாய் என்பதற்காகக் கூட உன்னை விட்டு ஒதுங்கிப் போய் விடலாம் என்று ஒரு கணம் கூடத் தோன்றவில்லை. பிறகு மெல்லப் பழகியபோது, நீயில்லாமல் வாழ்க்கையில் ஒன்றுமேயில்லை என்பது, தெளிவாகத் தெரிந்து போயிற்று!" என்றவன்...

தாமரைப் பூவாகச் சிவந்திருந்த அவளின் முகத்தைக் கைகளிலே ஏந்தி, "வாழ்நாள் முழுவதும் உன்னை மகிழ்ச்சியோடு வாழ வைப்பேன் கண்மணி!" என்று உணர்வுபூர்வமாகக் கூறி, அவளின் பூவிதழ்களிலே மென்மையாக முத்தமிட்டு... வசீகரமாகப் புன்னகைத்தான் தயாபரன்.

தயாபரனின் இவ்வளவு அன்பும் தன்னுடையது என்ற பூரிப்புடன், தன் அன்பனின் தோள்களிலே, கண்கள் ஜொலிக்கப் புன்முறுவலோடு... முகம் பதித்துக் கொண்டாள் அதிரூப சௌந்தரியவதி.